Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර | பக்கம் 24 ரூபா 30.00
மே 23 - 29, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1015



# வெற்றி விழாவும்

# முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளும்



## புளொட் போராடியிருந்தால் நிலமை மாறியிருக்கும்

-சித்தார்த்தன்

## அமெரிக்காவின் போர்களும் பொய்களும்

## துன்பம் நீங்கி இன்பம் பெற வைரவர் வழிபாடு

சிவபெருமானின் பஞ்ச குமாரர்களில் கணபதி, முருகன், வீரபத்திரர், ஐயனார் மற்றும் பைரவரும் ஒருவர். இதற்கு மிகவும் பயங்கரமானவர் என்பது பொருளாகும். எதிரிகளுக்கு பயம் தந்து தன்னை நாடுபவர்களுக்கு அருள்செய்வதால் இவருக்கும் பைரவர் என்பது பெயராயிற்று.

ஆம், காவல் தெய்வம் பைரவர் வழிபாட்டுக்கும் உகந்த மாதம். தை மாதம் முதல் செவ்வாயில் துவங்கி, அனைத்து செவ்வாய்க் கிழமைகளிலும் பைரவரை வழிபடுவது சிறப்பு. தேய்பிறை அஷ்டமி திருநாள் பைரவரை வழிபடுவதற்கு உகந்த தினம். குழந்தை இல்லாமல் வருந்தும் தம்பதியர், தொடர்ந்து 6 தேய்பிறை அஷ்டமி திருநாட்களில், செவ்வரளி மலர்கள் மற்றும் வில்வத்தால் பைரவரை அர்ச்சித்து, நெய் தீபம் ஏற்றி வழிபட, விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பர்.

அதேபோல், தேய்பிறை அஷ்டமி நாட்களில் பைரவ ஹோமம் செய்வதுடன், பைரவருக்கு அபிஷேகிக்கப்படும் கலச தீர்த்தத்தைப் பருகுவதால் தீராத பிணிகளும் தீரும் என்பர். ஞாயிற்றுக்கிழமைகளில் ராகு காலத்தில், பைரவருக்கு விபூதி அபிஷேகத்துடன், வடைமாலை அணிவித்து, சகஸ்ரநாம அர்ச்சனை செய்வதால், திருமணத் தடை அகலும் என்பார்கள். வளர்பிறை அஷ்டமி திருநாட்களில் அல்லது வெள்ளிக்கிழமை மாலைவேளையில் , வில்வம் மற்றும் வாசனை மலர்களை சமர்ப்பித்து பைரவருக்கு நெய் தீபம் ஏற்றிவைத்து, சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் வறுமைகள் நீங்கும். முன்பெல்லாம், சிவாலயங்களில் இரவில் பைரவரை பூஜித்து வழிபட்டு, ஆலயக் கதவுகளை மூடி சாவியை அவரது சன்னதியில் சமர்ப்பிப்பது வழக்கம். இப்போது, கைமணியையும் கலசத்தையும் அவர்முன் வைத்துச் செல்கின்றனர்.

ஆன்மீகம்

## எதைக் கேட்டாலும் செய்வேன்!

நம் வாழ்க்கையில் மிகப் பெரிய ஆசீர்வாதம் நாம் கேட்டவை அனைத்தையும் பெற்றுக்கொண்டோம் என்பது தான். "நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன்" (யோவான் 14:13, 14:14) இரண்டு முறை இயேசு இதைச் சொல்லுகிறார். அவ்வாறே நம்பிக்கையோடு கேட்ட யாவரும், கேட்ட அனைத்தையும் பெற்றுள்ளனர் என்பதையும் விவிலியத்தின் பல சான்றுகளில் அறிய காணலாம்.

இவ்வாறு கேட்ட அனைத்தையும் நாம் பெறவேண்டுமானால், அந்த ஆளைப்பற்றிய அனுபவம், அறிவு இருக்கவேண்டும். இந்த ஆளிடம் இதைக்கேட்டால் கிடைக்கும் என்ற அனுபவமும் அறிவும் அவசியம் தேவை. இயேசுவைப் பற்றிய அனுபவமும் அறிவும் நாம் கேட்ட அனைத்தையும் நமக்குத் தரவல்லது. இதைத்தான் கடவுள் நம்பிக்கை அல்லது விசுவாசம் என்று சொல்லலாம்.

இன்று வரையிலும் அந்த அன்பு தெய்வம் நமக்குச் செய்து வருகிற நன்மைகளை நாம் ஆழ்ந்து சிந்தித்தாலே இந்த இறை அனுபவத்தைப் பெற்றுவிடுவோம். பெரும்பாலும் கடவுள் நமக்குச் செய்துவரும் நன்மைகளை நாம் சிந்திப்பதே இல்லை. ஏதோ நமது திறமையால் பணத்தால் நாம் சாதித்ததாக நினைத்துவிடுகிறோம். கடவுளை மறந்துவிடுகிறோம்.

## ஸகாத் கொடுத்தல்

இஸ்லாத்தின் மூன்றாவது தூண் ஸகாத்தாகும். எஜமானின் சுட்டுவிரல் அசைவுக்கு அசைகின்றவனே அடிமை. இறைவனின் அடிமை அவனது உத்தரவை உடனடியாக அமுல்படுத்துவான். கலிமாவை மொழிந்து இறைவனுக்கு பைஅத் செய்த இறையடியான் அவனது கட்டளையாகிய ஸகாத்தை வழங்க பின்னிற்க மாட்டான். ஸகாத் என்பது ஒரு அடியான் தனது சொத்து செல்வத்திலிருந்து குறித்த சில பங்கை, இறைவனுக்காக ஸகாத் பெறத் தகுதியுள்ளோருக்கு வழங்குவதாகும். இது ஒரு கட்டாய கடமை. ஒருவர் சுயவிருப்பின் பேரில் வழங்குகின்ற மேலதிக தர்மம் அல்ல.

ஸகாத் ஒரு பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாகும். அதேவேளை அது ஓர் அடிப்படையான இபாதத்தாகும். இதனை அல்லாஹ் தொழுகையை நிலை நிறுத்தலோடு இணைத்து பல இடங்களில் சொல்லியிருப்பதும் இதன் முக்கியத்துவத்தைத் தெளிவாக உணர்த்துகிறது.

தொழுகையை நிலைநிறுத்துங்கள். ஸகாத்தைக் கொடுத்துவாருங்கள் ருகூஃ செய்கின்றவர்களுடன் சேர்ந்து ருகூஃ செய்யுங்கள். (அல்பகரா 43)

அல்ஹாஜ் அலாவுடீன் A.L.A பாபு
லவ்லேன், திருகோணமலை.

# கவிதைப் போட்டி இல 1015

கவிதைப்போட்டி இல 1012



**பாராட்டுக்குரியது**

### பாசப்பிணைப்பு

களவொழுக்கத்தில்
பிறந்த குழந்தையை
கழுத்தை நெரித்து
கொலை செய்வது மானிட இனம்
தன் வயிற்றில் பிறந்த குஞ்சை
கண்ணை இமை காப்பதுபோல்
காத்து வளர்ப்பது மாக்கள் இனம்
மனித இனத்துக்கும்
மாக்கள் இனத்துக்கும்
இடையில் உள்ள வித்தியாசம்
இதுவென்றால் - அதை
யாரே மறுக்க வல்லார்.

A.பாரிஸ், மிகிந்தலை.

### நிரூபணம்

மானிடர்க்கில்லா
பாசமும் பரிவும்
மிருகங்களுக்குண்டு
என்பதை நிரூபிக்கிறது
இந்த இராட்சத அணில்
தன் பிள்ளைக்குத்
தரும் அரவணைப்பு!

அ.சந்தியாகோ. கண்டி.






எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04. 06. 2013

கவிதைப் போட்டி இல. 1015 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பாதுகாப்பு

அணிலாரே
கொடிய வல்லூறுகளுக்கு
உன் குஞ்சு இரையாகாமல்
தப்பிக்க இந்தக்
கூட்டுக்குள்ளே நீ
பாதுகாப்புத்
தேடுகின்றாயா?

சுப்பிரமணியம், ஜெயரூபன்
பருத்தித்துறை.

### மகிழ்வு

மரமேறும் அணிலொன்று
தன்
இணையோடு உறவாடி
புது உறவொன்றை
உதிர்த்திங்கு
மகிழ்கின்றது!

எம்.அகல்யா,
மாத்தளை.

### பாசம்

பாலூட்டி
பாசவுணர்வை
வெளிப்படுத்தும்
விம்பமிது
தாய், சேய் பாசம்
தன்நிகரற்றது.

எம்.சி.கலீல்,
கல்முனை-05

### சந்ததி

சாவைக் கடந்து
சேய் ஒன்று வந்தது!
வாழ்வின் இனிமை
பகிர்ந்திட உயிர்
ஒன்று உயிர்த்தது!
சந்ததி காத்து
சரித்திரம் எழுதிட வந்த
இளவல் - என்
கரம் பற்றி துயில்கிறது!!

எஸ்.பிரணவன், ஜின்னாநகர்.



### குஞ்சு

வாழ்வின் சலனங்களை
அறியாததினால்
சந்தடி இன்றி
சயனம் செய்கிறது
இந்தக் குஞ்சு!

எம்.மகந்தினி.
கிளிநொச்சி.

### உறவு

உயிரை மாய்த்திடும்
புயலே வந்தாலும்
உயிராய் வந்துதித்த
உறவைப் பிரியாது
உடலில் சுமக்கிறது
தாய்மை

எஸ்.பிரியான்.
கொழும்பு-05.

# உங்கள் பக்கம்

## போக்குவரத்து சீராகுமா?

பூநகரி - செம்பன்குன்று போன்ற பிரதேசங்களுக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான போக்குவரத்துச் சிரின்மையால் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும், அந்தப் பிரதேசத்துக்கு செல்கின்றவர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

பூநகரி - செம்பன்குன்றிலிருந்து ஒரேயொரு தனியார் பேருந்து காலை 6.45 மணிக்குப் புறப்படுகிறது. அதுவும் குறிக்க நேரம் என்றில்லாமல் நினைத்தபடி புறப்படுவதால் கிளிநொச்சி போன்ற இடங்களுக்கு செல்லுகின்ற உத்தியோகத்தர்கள் உரிய நேரத்துக்கு செல்லமுடியாமல் தவிக்கின்றனர்.

அதேபோன்று குறித்த பகுதியில் மாலை 5 மணிக்குப் பின்னர் பேருந்துகள் எதுவும் சேவையில் ஈடுபடாததினால் பூநகரிக்குச் செல்லவேண்டிய பலர் பரந்தன் சந்தியிலிருந்து வேறு வாகனங்களிலும் நடந்தும் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இவ்வாறான நிலைமையினை சீர்செய்து தரும்படி அரச போக்குவரத்து தரப்பினரிடமும் அரச அதிகாரிகளிடமும், அதேபோன்று அரசியல்வாதிகளிடமும் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை எதுவும் நடந்தபாடில்லை.

எனவே குறித்த பிரதேச மக்களின் சார்பில் தினமுரசின் உங்கள் பக்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

ஆர்.சரவணன், பூநகரி

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## வாசகர் சாலை

### வாழ்த்துக்கள்!

பல வருட காலமாக சிறந்த செய்திகளை, தாங்கிவரும் தினமுரசு வாரமலரில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்களுமே சிந்தையை தொடுகின்றது. காலத்திற்கு ஏற்றால் போல் ஒவ்வொரு அம்சங்களும் இடம்பெறுவது வாரமலரை மெருகூட்டுகின்றது. அரசியல் கட்டுரைகள், சிறுகதை, சினிமா, இன்னோரென்ன விடயங்கள் சிறப்பாக உள்ளது.

மேலும் தினமுரசு வாரமலரில் பேனா நண்பர் பகுதியை ஆரம்பித்தால் மேலும் சிறப்புறும்ல்லவா.

ஏ.சீ.எம்.முஸம்மில்,
குளியாப்பிட்டிய.

### முரசுமேல் மோகம்

ஊடகப்பணி உன்னதமானதென ஒவ்வொரு வாரமும் உணர்த்தும் முரசு செய்திகளைத் திரட்டித் தரும்விதம் திகைக்க வைக்கிறது. அதன் வாரச் செய்திகளை வாசிக்க வாசிக்க. யோசிக்க வைக்கிறது.

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை என்பதை இதன் பத்திரிகைப் பணி பறை சாற்றுகிறது. நேயர்களை நேசித்து முரசு முன்வைக்கும் போட்டிகள் அறிவாற்றலை அதிகரித்து முரசு மேல் மோகம் கொள்ள வைக்கிறது.

எம்.சி.கலீல், கல்முனை -05

### வலிகளின் சன்மானம்!

வலிகளின் சன்மானம் கதையின் வாசகன் நான். வறுமை, ஒரு எழுத்தாளன் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் அடித்து அவன் வெற்றிபெற்றிருக்கின்ற கதையம்சத்தை எடுத்துக்கூறிய ரமேஷுக்கு இதயம் கனிந்த நன்றிகள். உயிரோட்டத்துடன் கதை தொடர்ந்தது. வாழ்க்கையில் நட்சத்திரன், கடலின் பிடியோடும், வலிகளின் சன்மானத்தின் வெளியீடும், காதல் ரசனைகளும் சொட்டச்சொட்ட கதையில் தந்த சுகங்கள் ஏராளம். வலிகளின் சன்மானத்தோடு ஒன்றிணைந்து வாழ்ந்திருக்கின்றேன். வலிகள் சுகமாகியது என் நெஞ்சில் வலிகள் ஆரம்பித்துவிட்டது.

எம்.சைந்தன், திருகோணமலை.

### மீண்டும் ஆரம்பமாகுமா?

முரசின் சுவாரசியமான அம்சங்கள், அறிவுரீதியானவற்றை பெரிதும் விரும்பிப் படிப்பதுண்டு.

காலம்காலமாய் காலமகளின் ஓட்டத்தில் நீயும்சேர்ந்து போகின்றாய் என்பதில் பெருமையடைகின்றேன். 1014 முரசு பல வித்தியாசங்களைக் கொண்டு கலாய்க்கின்றது. இதேபோன்று பல வித்தியாசங்கள், மாற்றங்களைக் கொண்டுவரலாம். வாரமலரில் சிறிது காலம் வெளிவந்த கல்விப் பக்கத்தை மீண்டும் ஆரம்பிப்பீர்களா?

கு.பிரீந்தா, தெல்லிப்பளை.

## மலையக அரசியல் கட்சிகள்

# மனிதாபிமான பணிகளில் அக்கறை காட்ட கோரிக்கை

மலையகக் கட்சிகள் இயற்கை அனர்த்தத்தை வைத்துக் கொண்டும அரசியல் நடத்தியமையை காணக்கூடியதாக இருப்பதாகவும், மலையகக் கட்சிகள் வாக்குகளை மட்டும் குறியாக செயற்படாது மலையக மக்களுக்கான மனிதாபிமான பணிகளிலும் அககறை காட்டவேண்டும் என மலையக புத்திஜீவிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக மலையகத்தின் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டன. மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். அத்துடன் 5 பேர் வரை பலியாகினர். எனினும் இந்த இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் மலையக அரசியல் கட்சிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதில் முயற்சிகளை மேற்கொள்வதைவிட சுயவிளம்பரம் தேடிக்கொள்வதையே குறியாக கொண்டிருந்தன என மக்களால் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொறுத்தவரை அமைச்சுப்பதவியை வைத்திருக்கும் கட்சியாகும். அதேபோல திகாம்பரம் மற்றும் ராதாகிருஸ்ணன் ஆகியோர் நாடாளுமன்ற பதவிகளை கொண்டிருக்கும் கட்சிகளில் அங்கம்வகிக்கின்றனர். எனினும் இவர்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதில் திருப்திகரமாக செயற்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே அரசியல் ரீதியில் உரிய முறையில் செயற்படாத மலையக தொழிற்சங்கங்களும் கட்சிகளும், ஆபத்தான வேளைகளிலும் மக்களுக்கு உதவவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். இதற்கு அப்பால் பொறுப்புள்ள அரசாங்கம் என்றவகையில் அரச இயந்திரமும் பாதிக்கப்பட்ட மலையக மக்கள் உரிய நேரத்தில் உதவிகளை வழங்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பெரும்பாலும் நிரந்தர வருமானம் பெறுபவர்கள் என்ற அடிப்படையில், பெருந்தோட்ட மக்கள் அரசாங்க நன்மைகளில் இருந்து தவிர்க்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போலி மத்திய வங்கி

## பொலிஸாரிடம் சிக்கியது

நாணயத்தாள்களை அச்சிடும் அதிகாரம் மத்திய வங்கிக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள நிலையில், தங்களை மத்திய வங்கியின் அதிகாரிகளாக கற்பனை பண்ணிக் கொண்டு, கணினி உதவியுடன் போலி நாணயத்தாள்களை அச்சிடும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலப்பிட்டிய ரன்தொம்பேயைச் சேர்ந்த இவர்கள் கைது செய்யப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். போலியாகத் தயாரிக்கப்பட்ட நாணயதாள் களின் மூலம் பொருட்களை கொள் முதல் செய்துள்ளமை ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களி டம் இருந்து கணினி, ஊடுகதிர் இயந்திரம் உள்ளிட்ட பல நவீன பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## சொகுசு வீட்டினுள் மறைந்திருந்தது கசிப்பு

சொகுசு வீடொன்றினுள் மறைமுகமான முறையில் நடாத்திச் செல்லப்பட்ட சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை சுற்றிவளைத்துள்ள பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

வென்னப்புவ பிரதேசத்தில் அமைந்துள்ள சொகுசு வீடொன்றையே சிலாபம் பொலிஸார் சுற்றிவளைத்தனர். தங்களுக்கு கிடைத்த தகவல்களையடுத்தே குற்ற ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அந்த வீட்டிலிருந்து 24,120 டிரேம் சோடா, மற்றும் 10 பெரல்கள், இரண்டு கேஸ் சிலிண்டர்களுடன் மேலும் பல உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிசார் கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையிலிருந்து வீழ்ந்தது தனியார் பேருந்து

யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்று, ரம்பொடை பகுதியில் செங்குத்தான சரிவொன்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 24 பேர் படுகாய மடைந்த நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த 21 பேர், கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை மூவர் வகுஹபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பில் கொத்மலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கையருக்கு நிம்மதியைத் தரும் நாள் எது?

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

**நாட்டு மக்களில் கணிசமானோர் நேரடியாகவும் மறைமுக மாகவும் பல தியாகங்களையும் இழப்புக்களையும் சந்தித்தே ஆயுத வன்முறையற்ற ஒரு தேசத்தை மீளவும் பெற்றிருக் கின்றார்கள்.**

**இப்பொழுது, கடந்த முப்பது வருடங்களாக மக்கள் ஏங்கிக் கொண்டிருந்த நிம்மதி நாட்டுக்கு உடனடியாகத் தேவைப்படுகின் றது. இந்த நிம்மதியைக் சீர்குலைக்கக் கூடிய நாசகார வேலைகளில் எவர் ஈடுபட்டாலும் அவர்களின் பின்னணி எதுவென்று பாராது மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் சட்டமும் ஒழுங்கும் தனது கடமையைச் செய்யவேண்டும்.**

யுத்த வெற்றியில் நாடு திளைத்திருக்கிறது. மே 19 ஆம் திகதி என்பதுதான் வரலாற்றில் இடம்பிடித்து இந்த வெற்றிக்களிப்பை இனி வருடந்தோறும் பறைசாற்றிக் கொண்டிருக்கப் போகின்றது.

ஆயுதம். அதற்கடுத்ததாக வன்முறை என்று வநதுவிட்டால் அதன் விளைவு அழிவும் துயரமும் தான் என்பது யதார்த்தம்.

உரிமையை மீட்டெடுக்க ஆயுதம் தூக்கினோம் என்று நியாயம் கூறப்பட்டாலும் பின்னாட்களில் அந்த ஆயுதங்களால் உண்டான வன்முறை அழிவுகளிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டியதாகிவிட்டது.

ஆயுதம் மூலமான அராஜகப் போக்கு நாட்டு மக்கள் அனைவரையுமே அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றது.

இந்த நாசகார, கண்மூடித்தனமான, காட்டுமிராண்டிப் போக்கு அழிவுகளிலிருந்து மக்களை மீட்டெடுத்தே ஆகவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருவேறு கருத்துக்கள் ஒருபோதும் இருந்ததில்லை.

உரிமை என்ற ஒன்றுக்காக ஒத்தூதியவர்கள் கூட வன்முறைகள் தலைக்கு மேலால் தாண்டவமாடியதை உள்ளூர வெறுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். அதுதான் உண்மையாகவும் இருந்தது.

பயங்கரவாதம் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்டதில் நிம்மதியை விரும்பும் அனைவருக்கும் மகிழ்ச்சிதான். இதற்காக ஓரிருவர் மட்டும் அல்லது ஒரு சமூகம் மட்டும் குரல் கொடுத்து தியாகம் செய்திருக்கவில்லை.

ஒட்டுமொத்தமான இலங்கை மக்களும் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று உள்ளூரவோ, வெளிப்படையாகவோ விரும்பித்தான் இருந்திருக்கின்றார்கள்.

நாட்டு மக்களில் கணிசமானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல தியாகங்களையும் இழப்புக்களையும் சந்தித்தே ஆயுத வன்முறையற்ற ஒரு தேசத்தை மீளவும் பெற்றிருக்கின்றார்கள்.

இப்பொழுது, கடந்த முப்பது வருடங்களாக மக்கள் ஏங்கிக் கொண்டிருந்த நிம்மதி நாட்டுக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

இந்த நிம்மதியைக் சீர்குலைக்கக் கூடிய நாசகார வேலைகளில் எவர் ஈடுபட்டாலும் அவர்களின் பின்னணி எதுவென்று பாராது மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் சட்டமும் ஒழுங்கும் தனது கடமையைச் செய்யவேண்டும்.

இப்பொழுது நாட்டில் அமைதிக்குப் பங்கமாக உருவாகி உலாவரும் பொதுபலசேனா போன்ற 26 இற்கும் மேற்பட்ட சிறுபான்மை இன விரோத அமைப்புக்களுக்கு நாட்டை மீண்டும் குழப்ப என்ன தேவை இருக்கின்றது ?

நாட்டு மக்களின் விதியோடு விளையாட இவர்களை மீண்டும் ஒரு முறை அனுமதிக்கலாமா என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தக் கேள்விகளுக்கு நாட்டில் இன மத பேதமின்றி நம்மையெல்லாம் பாதுகாக்கும் சட்டமும் ஒழுங்கும் அதனை அமுல்படுத்தும் பொலிசாரும் பாதுகாப்புத் தரப்பினரும் ஆட்சியாளர்களும்தான் பதில் சொல்லியாக வேண்டும்.

பொதுபலசேனா போன்ற மதத் தீவிரவாத அமைப்பினரே நாட்டில் தற்பொழுது சிறுபான்மை இனங்களுக்கெதிரான விஷமக் கருத்துக்களைப் பரப்பி மீண்டும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தும் பயங்கரவாதத்தில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையான உண்மை.

இந்த விடயத்தில் நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் சட்டமும் ஒழுங்கும் என்ன செய்யப் போகின்றது என்பதே அனைவரும் இன்று உற்றுக் கவனிக்கும் ஒரு விடயமாக மாறிப்போயிருக்கின்றது.

கூட்டாகவோ அல்லது தனியாகவோ தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற உரிமையை இவர்கள் தப்பாகப் பயன்படுத்தி அடுத்தவர்களை எந்நேரமும் அச்சத்தில் வைத்திருக்க நினைக்கின்றார்கள்.

இதற்கு ஆட்சியாளர்கள் ஒருபோதும் அனுமதிக்கவோ, இடமளிக்கவோ கூடாது. சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கின்ற கருமங்களில் யார் ஈடுபடுகின்றார்களோ அவர்கள் மீது சட்டம் சரியான தண்டனை கொடுக்கவேண்டும்.

அந்த ஒரு செயற்பாடு மாத்திரமே இனி இலங்கைத் தீவில் இனசௌஜன்யத்தையும் இனங்களுக்கிடையில் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கும் "ஒரே நாடு ஒரே நீதி ஒரே மக்கள்" என்ற கோட்பாட்டில் சட்டத்திலும் நீதியிலும் அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க வழிவகுக்கும்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## 13ஆவது திருத்தச்சட்டம் ஐக்கியத்துக்கு அடித்தளம்

தமிழர்களுக்கு அதிகார மையங்கள் எதுவுமே சென்றுவிடக்கூடாது என்று தீவிர இனவாதச் சிந்தனை கொண்டவர்கள் பல்வேறு முகமூடிகளை அணிந்துகொண்டு இருக்கின்றார்கள் என்பதை இன்றைய அரசியல் சூழல் அம்பலப்படுத்தியுள்ளது.

ஒரு பக்கம் "இது பௌத்த நாடு. இலங்கையை பல்லின இனங்களின் நாடு என்று கூறுகின்றவர்கள் நாட்டைவிட்டே வெளியேறிவிட வேண்டும்" என்று கூறுகின்றவர்களும், "சிறுபான்மை இனங்கள் பொருளாதார வல்லமையுடையவர்களாகவும், தனித்துவமான கலாச்சாரங்களைக் கொண்டவர்களாகவும் வாழ்வதும், வளர்ச்சியடைவதும் பெரும்பான்மை இனத்தை அழித்துவிடும்" என்று கூறுகின்ற வர்களும் பின்பலங்களோடு இன்று வீதியில் இறங்குகின்ற கெடுகாலம் போருக்குப் பின் புலர்ந்திருக்கின்றது.

மறுபக்கம் "பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையே இல்லாதொழிக்க வேண்டும், தம்மால் வெல்லமுடியாத மாகாண சபை ஒன்று இருக்குமானால் அது தனிநாட்டுக்கு ஒப்பாகிவிடும்" என்று கூறுகின்ற இனவாதம் பேசுகின்ற வர்களின் அருவருப்பான பிரச்சாரங்கள்.

இது நாள்வரை மாகாண சபைகள் வடக்கு - கிழக்கைத் தவிர்த்து இயங்குகின்ற போது அதற்காக போட்டியிட்டவர்கள், அதன் அதிகாரத்தையும், சலுகைகளையும் அனுபவித்தவர்கள், அதைப்பயன்படுத்தி தமக்கும் தமது உறவுகளுக்கும் பொருளாதாரம் தேடிக் கொடுத்தவர்கள், மாகாண சபையில் தமது பரம்பரையினரும் செழிப்போடு அரசியல் நடத்தவேண்டுமென விரும்பி அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்தவர்கள் இப்போது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணத்துக்கு மட்டும் தேர்தலை நடத்தக் கூடாது என்பது சுத்த இனவாதச் சிந்தனையாகும்.

இத்தகையவர்கள் தமிழர்களின் மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளைக்கூட வைத்திருக்கக்கூடாது என்று கூறுகின்ற காலமும் நாளை உதயமாகலாம். முடியுமாக இருந்தால் அந்த மாகாணங்களிலிருந்து அரச அதிபர், கிராம சேவையாளர்கள், நீதிபதி கள் என அத்தனை பேரையும் அப்புறப்படுத்திவிட்டு, தனியே படைமுகாம்களையும், பொலிஸ் நிலையங்களையும் மட்டும் இருக்கச் செய்துவிடுமாறும் நாளை கோரிக்கை விடக்கூடும்.

சிறுபான்மை மக்கள் தமது எல்லாத் தேவைகளுக்கும் மாதத்தில் ஒரு தடவை அனுமதி பெற்றுக்கொண்டு தென் இலங்கைக்கு வந்து தமது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளவேண்டும் என்று எழுதாத சட்டத்தை நடைமுறைப் படுத்தவும் இவர்கள் துணியக்கூடும்.

யுத்தத்துக்குப் பின்னரான இந்தப் போக்குகள் சிறுபான்மை மக்களின் மனங்களை காயப்படுத்தியுள்ளது. ஐக்கிய வாழ்வுக்கான விருப்பத்தையும், நம்பிக்கையையும் சிதைப்பதாக அமைந்துள்ளது.

இந்தச் சூழலின் வளர்ச்சிப்போக்கு தடுத்து நிறுத்தப்படவேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாத்து மூவின மக்களும் இலங்கையில் கௌரவமாக வாழ்வதை உறுதிசெய்ய இடதுசாரித் தலைவர்களுடன் சிறுபான்மை மக்களின் தலைவர்களும் இணைந்து செயற்படவேண்டும்.

அரசியல் பேதங்களுக்கு அப்பால் தாய்நாட்டை நேசிப்போருக்கான கடமையும் அதுவே இருக்கமுடியும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# வெற்றி விழாவும் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளும்

**புலிகளின்** பயங்கரவாதத்துக்கு எதிரான போர் வெற்றி கொள்ளப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவு வைபவங்கள் தலைநகர் கொழும்பில் அதே உற்சாகத்துடன் நினைவு கூரப்பட்டது.

அந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் உண்மையானவை. தெருவோர பார்சல்களையும், மக்கள் கூடும் இடங்களையும், பேரூந்துகளையும் பார்த்து அச்சத்துடன் வாழ்ந்த நிலைமை தற்போது இல்லை. பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பிவிட்டு பெற்றோர்கள் அஞ்சுகின்ற நிலைமை இன்று இல்லை.

குண்டுகள் வெடிக்குமோ, கொலைகள் நடக்குமோ என்ற ஆபத்துக்களும் இன்று இல்லை. யாழ்ப்பாணத்துக்கான பயணத்துக்காக கப்பலுக்கு பதிவு செய்துவிட்டு காத்துக்கிடக்கும் அவசியமும், குடும்பத்தில் ஒருவரை பிணை வைத்துவிட்டு பீதியுடன் பயணங்களைச் செய்யும் அவசியமோ இன்று இல்லை.

எந்த இடத்திலும், எவர் ஒருவரையும் கொலை செய்யும் வல்லமையுடைய புலிகளை ஒருபோதும் வெல்லமுடியாது என்றும், புலிகள் உலகத்திலுள்ள பயங்கரவாத இயக்கங்களைப் போலல்லாமல் பல்வேறு பிரிவுகளை நிறுவி பலமான நிலையில் தனியான நிலப்பரப்பில் இருக்கின்றார்கள். ஆகவே புலிகளை யுத்தத்தால் வெற்றி கொள்ளமுடியாது. ஆகவே அவர்களுக்கு தேவையானதை வழங்கி பிரச்சினையை தீர்க்க முயலுங்கள். மாறாக யுத்தம் நடத்தி புலிகளை அழித்துவிட முடியாது என்று எல்லோரும் நம்பினார்கள், சர்வதேச சமூகமும் அவ்வாறே நம்பியது.

நோர்வே, ஜப்பான், இந்தியா, கனடா, அமெரிக்கா எனப்பல நாடுகளும் புலிகளை மிகப்பலமான அமைப்பாகவே நம்பினார்கள். இலங்கையின் மத்திய அரசின் தலைமைகளும் இதே பயத்தை கூறினார்கள்.

சர்வதேசத்தின் நோக்கமுடைய ஆலோசனைகளும், புலிகளைப்பற்றிய சரியான மதிப்பீடுகளும் இல்லாததால் தென் இலங்கை அரசியலில் தலைமை தாங்கியோர் புலிகளுடன் யுத்தம் நடத்தி தோற்றுப்போனார்கள் அல்லது புலிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சலுகைகளை வழங்கி தற்காலிக சமரசங்களை ஏற்படுத்தி தமது ஆட்சிக்காலத்தை கடத்தினார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஆரம்பத்தில் புலிகளுடன் போரிடுவதைவிடவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடரவே விரும்பியிருந்தார். அதற்காக புலிகளுக்கு பகிரங்க அழைப்பையும் விடுத்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த பிரபாகரன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு யதார்த்தமான அரசியல்வாதி என்று கூறியிருந்தார்.

யதார்த்தவாதி என்று கூறிய பிரபாகரன் யதார்த்தவாதிகளை எப்படிக் கையாளுவது என்பதைத் தெரிந்திருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்னர் ஜனாதிபதிகளாக இருந்த, ஜே.ஆர். ஜெயவர்தனா, பிறேமதாஸ, சந்திரிக்கா பண்டார நாயக்க, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கையாண்டதைப் போல் ஒரு பக்கம் சமாதானம் மறுபக்கம் கொடூரமான கொலைகள் நடுவில் சர்வதேச மேற்பார்வைகள் அல்லது தலையீடுகள் என்று மகிந்த ராஜபக்ஷவுக்கும் விளையாட்டுக் காட்டலாம் என்று கணக்குப் போட்டதுதான் தவறானது.

கேப்பித்திக் கொல்லாவையில் பொதுமக்களின் பஸ்வண்டிக்கு குண்டுவைத்து நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களை படுகொலை செய்தபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலிகளின் கோரமான முகத்தை நேரடியாக பார்த்தார். மிக ஆபத்தான, அச்சுறுத்தலான வேளையிலும் கேப்பித்திக் கொள்ளாவைக்கு சென்று குருதியில் குழந்தைகளும், பெண்களும் துடித்ததையும், துண்டு துண்டாகிக் கிடந்ததையும் பார்த்து கண்கலங்கினார்.

எல்லோரும் கூறுவதுபோல் புலிகளோடு - பயங்கரவாத்துடன் நாட்டு மக்கள் வாழ முடியாது என்பதை முடிவு செய்தார். புலிகள் எத்தகைய பலத்தோடும் தற்கொலையாளிகளோடும் இருந்தாலும், தாய்நாட்டை மீட்பதற்காகவும், கொலைகளை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதியை நிலை நாட்டுவதற்காகவும் என்ன விலை கொடுத்தேனும் புலிகளுடன் யுத்தம் நடத்தவேண்டியிருப்பதை உணர்ந்தார்.

புலிகள் உண்மையான சமாதானத்தை விரும்பவில்லை. புலிகள் தமிழ் மக்களுக்கும் சுதந்திரத்தை வழங்கவில்லை, புலிகள் மக்களின் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளும் ஜனநாயக வழிமுறையை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் ஆயுத அடக்குமுறையும், கொலைகளுக்கூடாக பிரச்சனைகளைத் தீர்க்கவுமே விரும்புகின்றார்கள் என்பதை தாமும் புரிந்துகொண்டு அதை சர்வதேசங்களும் உணர்த்தினார்.

யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட யதார்த்தவாதியின் அடுத்த நடவடிக்கை எதுவாக இருக்கும் என்பதை சிந்திக்காமல் பிரபாகரன் ஆரம்பித்த அடுத்த வரலாற்றுத்தவறுதான் மாவிலாறில் தண்ணீரைத் தடுத்து அப்பாவி மக்களின் வயிற்றிலடித்ததாகும். அதுதான் ஒட்டுமொத்த புலிகளின் தலையெழுத்தையே புரட்டிப் போடப்போகும் ஆபத்தைக் கொண்டுவரப்போகின்றது என்று அப்போது பிரபாகரன் நினைத்துப்பார்க்கவில்லை.

மாவிலாறில் தொடங்கிய அரசின், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், நந்திக்கடலில் பிரபாகரனின் மரணம் நிகழ்தேறும்வரை ஓயவில்லை. தண்ணியைத் தடுத்து தனது பயங்கரவாதத்தை காட்டிய பிரபாகரனின் மரணத்தை பக்கச் சார்புகளுக்கு அப்பால் நேரில் பார்த்த சாட்சியாக நந்திக்கடலின் தண்ணீரே இருந்தது.

நான்கு ஆண்டுகள் பல மாற்றங்களுடன் கடந்துவிட்டது. ஆனாலும் தமிழ் மக்களின் வாழ்க்கையும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கான பிரச்சினைகளும் மாறவே இல்லை.

அன்று புலிகள் தமிழ் மக்களுக்கு தனிநாடு பெற்றுத் தருவார்கள் என்று கூறி தமிழ் மக்களை நம்பச் செய்து அழிவுகளுக்குள் தள்ளிவிட்டவர்களும், புலிகளின் தாக்குதல்களில் நாற்பதாயிரம் படையினர் பலியாக நேரிடும். ஆகவே நாற்பதாயிரம் சவப்பெட்டிகளை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள் என்று பாராளுமன்றத்திற்கும் கர்ஜித்தவர்களும், புலிகளே தமிழ் மக்கள், தமிழ் மக்களே புலிகள் என்று உணர்ச்சிக் கோஷம் எழுப்பி பொங்கு தமிழுக்கு கூட்டம் சேர்த்துக் கொடுத்தவர்களும் இன்று கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் முள்ளிவாய்க்காலில் படுகொலையாகிப் போனவர்களுக்காக மெழுகுதிரிகளை எரித்து அஞ்சலி செலுத்துவதாக நாடகம் ஆடுகின்றார்கள்.

யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்கள் கொலையானர்கள் என்பதை எவரும் மறுக்கமுயாது. ஆனால் இந்த மரணங்களை தடுப்பதற்கோ, புலிகளுடன் அது தொடர்பில் பேசுவதற்கோ, அரசுடன் மக்களின் நிலைமை தொடர்பில் எடுத்துக் கூறுவதற்கோ இன்று அலுவலகங்களில் மெழுகுதிரிகளை ஏற்றி கையில் ஏந்தியபடி ஊடகங்களுக்கு போஸ்கொடுக்கும் தமிழ் தேசிய சந்தர்ப்பவாதிகள் முயற்சிக்கவில்லை. இவர்களுக்கு இன்று இறந்துபோன தமிழர்களுக்காக நினைவு நிகழ்ச்சிகளை நடத்த என்ன அருகதை இருக்கின்றது.

தமிழ் மக்களின் தலையெழுத்தை கிறுக்கிப் போட்டவர்களிடம் தமிழ் மக்கள் இன்னும் தமிழ் தேசியத்தின் பெயரால் ஏமாந்து கிடக்கின்றார்கள் என்ற விமர்சனங்கள் ஒரு புறமிருக்கவே செய்கின்றது. மறுபக்கத்தில் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நான்கு ஆண்டுகளாகியும் தீர்வொன்றை வழங்கவில்லையே என்ற கேள்விகளும் எழாமலில்லை.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பினர் வராத காரணத்தினாலேயே பிரச்சனைக்கு தீர்வை காண முடியாதுள்ளது என்று அரசு கூறிக் கொண்டிருக்கும் அதே வேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப் படுகின்ற காணி அபகரிப்புக்களாலும், அத்துமீறிய குடியேற்றங்களாலும், பலாத்காரமான மதத் தலங்களை அமைப்பதாலும், படைமுகாம்களை விஸ்தரிப்புச் செய்வதாலும் தமிழ் மக்களின் பரம்பலையும், தாயக நிலத்தின் உரிமையையும் வளங்களையும் மெல்ல மெல்ல சிதைக்கத் தொடங்கியிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் அரசின் மீது அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது.

இதுதவிர மாகாண சபையின் அதிகாரங்களை பறிப்பது அல்லது அதிகாரங்களை இல்லாமல் செய்வது போன்ற காரியங்களையும் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கின்றது என்றும் இன்று வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்தக் கூடாது என்றும், அதற்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களை பறிக்கவேண்டுமென்றும் முடியுமாக இருந்தால் 13ஆவது திருத்தச் சட்டத்தையே இல்லாமல் செய்து விடவேண்டுமென்றும் அரசு விரும்பும் விருப்பத்தை தனது அரசியல் சகாக்களை ஏவிவிட்டு சாதித்துவிட சூழ்ச்சி செய்கின்றது என்றும் அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

குற்றச்சாட்டுக்கள் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் அரசு தமிழ் மக்களின் பிரச்சனைகளை எவ்வாறு தீர்க்க முற்படுகின்றது தீர்வாக எதை வழங்கப் போகின்றது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

இப்படியே காலத்தை இழுத்தடித்துக்கொண்டு போய்விட்டால் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகளே இல்லை என்றும் இல்லாத, பிரச்சினைகளுக்கு எதை தீர்வாக வழங்குவது என்றும் நாட்டில் உள்ள ஏனைய மக்களைப்போல தமிழ் மக்களும் வாழுகின்ற சூழலில் அவர்களுக்கு அரசியல் பிரச்சினைகள் என்று எதுவுமிருக்க முடியாதே என்று கூறி, தமிழ் மக்களின் பிரச்சனைகளையும் அதற்காக கொடுத்த விலைகளையும், இழந்த இழப்புக்களையும் அநாவசியமான தாக்கிவிடுவதுதான் தென் இலங்கை அரசியல் தலைமைகளின் திட்டமோ என்ற சந்தேகங்கள் தமிழ் மக்களிடம் எழுந்திருப்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

அப்படியொரு சூழலே உருவாகுவதாக இருந்தாலும் அதற்கு உடந்தையாக இருக்கப் போகின்றவர்களும், எல்லா சந்தர்ப்பங்களையும் தட்டிக்கழித்தும், எதிர்த்தும் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியவாதிகளேயாவர்.

யுத்த காலத்திலும் சரி, தற்போதைய சூழலிலும் சரி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படாமலிப்பதற்கு தனியே அரசுகள் மட்டுமல்ல, சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்தாமலும், தமிழ் மக்களுக்கு உண்மையாகவும் இருக்காமல் வெறுமெனவே தமிழ் இனவாதத்தையும், அரசியல் முடக்கத்தையும் செய்து கொண்டிருக்கும் தமிழ்த் தலைமைகளும் காரணம் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொண்டால் அடுத்த மே 18ஆம் திகதிக்கு முன்னராவது சில முன்னேற்றங்களை தமிழ் மக்கள் அனுபவிக்கலாம்.

இல்லாவிட்டால் தென் இலங்கையில் வெற்றிவிழாவும் வடகிழக்கில் நினைவு நிகழ்வுகளுமே தொடர் கதையாகிப்போகும்.

*சிவன்*

எக்ஸ்ரே ரிப்போர்ட்






# புலிகளின் வீழ்ச்சி!

## இறுதி நாட்கள்...

**ஹெலிகொப்டர்கள்** புறப்படும் நேரத்துக்கு 10 நிமிடங்கள் முதல் வரை அவை யாழ்ப்பாணத்திலுள்ள பலாலி இராணுவ முகாமில்தான் தரையிறங்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. 10 நிமிடங்கள் இருக்கும் நேரத்தில் சுதுமலை என்ற இடத்தில் தரையிறங்க வேண்டும் என்று கூறப்பட்டது.

சுதுமலை அம்மன் கோவிலை ஒட்டிய வெட்டவெளி பகுதியில் ஹெலிகொப்டர் தரையிறங்க உகந்த இடம் உள்ளது என்று கூறப்பட்டு, அதை அடைவதற்கான வரைபடமும், பிளைட் பிளானும், டில்லி விமானப்படை தலைமையகத்தில் இருந்து வந்தது.

சூலூரில் இருந்து புறப்பட்ட இரண்டு ஹெலிகொப்டர்களில் ஒன்றை அலுவாலியா செலுத்தினார். சுமார் ஒன்றரை மணிநேரப் பறத்தலின் பின் அவரது ஹெலிகொப்டர் முதலில் சுதுமலையில் தரையைத் தொட்டது. இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று இலங்கை மண்ணில் தரையிறங்கியது அதுவே முதற்தடவை.

ஹெலிகொப்டர் தரையிறங்க பதிந்த போது பிரபாகரனும் மற்றையவர்களும் தரையில் காத்திருப்பதை ஆலுவாலியாவால் பார்க்கக் கூடியதாக இருந்தது. ஹெலிகொப்டர் அதிகநேரம் தரையில் தாமதிக்கவில்லை. விரைவில் ஆட்களை ஏற்றிக் கொண்டது.

ஹெலிகொப்டர் புறப்படுவதற்கு முன்னர் புலிகளின் உறுப்பினர் சங்கர், பூரியை நெருங்கி "நீங்கள் எமது தேசியச் சொத்தை அழைத்துச் செல்கிறீர்கள் என்பது ஞாபகமிருக்கட்டும்" என்றார் தணிந்த குரலில்.

அதற்குப் பூரியிடம் இருந்துவந்த பதில் "டில்லியில் என்ன நடைபெற்றாலும், என்ன முடிவு எடுக்கப்பட்டாலும் பரவாயில்லை. உங்களது தலைவரை இதே இடத்தில் கொண்டு வந்துசேர்க்க வேண்டியது என்னுடைய பொறுப்பு. நான் வார்த்தை தவறமாட்டேன். இதை என்னுடைய வாக்குறுதியாக நீங்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்" ஹெலிகொப்டர்கள் சுதுமலையில் இருந்து புறப்பட்டன. தொடரப் போகும் முக்கிய சம்பவங்களை நோக்கி யாழ்ப்பாணம் சுதுமலையில் இருந்து, பிரபாகரனை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட ஹெலிகொப்டர்கள் நேரே சென்னைக்குச் செல்ல வில்லை. அவை முதலில் தரையிறங்கிய இடம் திருச்சி.

மத்திய அரசு, இதற்கு முன்னர் இப்படியான ஒப்பரேஷன் ஒன்றை இலங்கையிலிருந்து தமிழகத்தின் ஊடாக செய்திருக்கவில்லை. அதனால் கொஞ்சம் குழப்பம் நிலவியது.

இதில் குழப்பம் எங்கிருந்து வருகிறது? பிரபாகரனும் அவருடன் அழைத்து வரப்பட்ட மற்றையவர்களும் இந்தியப் பிரஜைகள் அல்ல. வெளிநாட்டுப் பிரஜைகள் இந்தியாவுக்குள் நுழையும்போது செய்யப்பட் வேண்டிய சில குடிவரவு நடைமுறைகள் இருந்தன.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் – வெளிநாட்டு அரசு தலைவர்கள் உட்பட – வழமையான குடிவரவு நடைமுறைகளுக்கு உட்படவேண்டியதில்லை என்பது உண்மைதான். ஆனால் வேறு சிறப்பு நடைமுறை ஒன்று, இந்திய குடிவரவு துறையில் உண்டு.

வெளிநாட்டு அரசு பிரதிநிதிகளிடம் ஒரு இராஜதந்திர பாஸ்போர்ட் இருக்கும். மத்திய அரசின் அழைப்பையேற்று வருபவர்களின் உதவியாளர்கள் இந்த டிப்ளமட்டிக் பாஸ்போர்ட்டின் விபரங்களை இந்திய குடிவரவு இலாகா அதிகாரிகளிடம் கொடுக்க, விமானநிலையத்தில் வைத்து அவர்களது வருகை IN-IE6234 என்ற படிவத்தில் பதிவு செய்யப்படும்.

அதன் ஒரு பிரதி

**மத்திய அரசு, இதற்கு முன்னர் இப்படியான ஒப்பரேஷன் ஒன்றை இலங்கையிலிருந்து தமிழகத்தின் ஊடாக செய்திருக்கவில்லை. அதனால் கொஞ்சம் குழப்பம் நிலவியது.**

**இதில் குழப்பம் எங்கிருந்து வருகிறது? பிரபாகரனும் அவருடன் அழைத்து வரப்பட்ட மற்றையவர்களும் இந்தியப் பிரஜைகள் அல்ல. வெளிநாட்டுப் பிரஜைகள் இந்தியாவுக்குள் நுழையும்போது செய்யப்பட வேண்டிய சில குடிவரவு நடைமுறைகள் இருந்தன.**

## சுதுமலையில் இந்திய விமானம்

டெல்லியிலுள்ள குடிவரவு இலாகா தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். மற்றொரு பிரதி வெளியுறவு அமைச்சுக்குப் போகும். மூன்றாவது பிரதி உள்ளூர் குடிவரவு அலுவலகத்தில் பைலில் இருக்கும்.

ஆனால் பிரபாகரனும், அவருடன் வந்த மற்றையவர்களும் இராஜதந்திர பாஸ்போர்ட் ஒன்றுடன் அழைத்துவரப்படவில்லை. இதனால் அவர்களது வருகை இந்தியாவுக்குள் முதலாவது தரையிறங்கும் இடத்தில் (India's First Point of Entry) எப்படிப் பதிவு செய்யப்படுவது என்ற குழப்பம் திருச்சி ஏர்போர்ட்டில் ஏற்பட்டது.

மத்திய வெளியுறவு அமைச்சுக்கும், இவர்களது வருகைக்கும் தொடர்பு இருந்தாலும், ஏற்பாடுகள் முழுமையாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சினாலேயே செய்யப்பட்டிருந்தன.

மத்திய பாதுகாப்பு அமைச்சோ, திருச்சியிலிருந்து சென்னை செல்வதற்கு இந்திய விமானப்படையின் அன்டனோவ் பயணிகள் விமானம் ஒன்றை ஏற்பாடு செய்ததோடு சரி. வேறு ஏற்பாடு எதையும் செய்திருக்கவில்லை.

திருச்சி விமான நிலைய இமிகிரேஷன் அதிகாரிகளுக்கும் கடைசி நிமிடத்தில்தான் தகவல் சொன்னார்கள். சும்மாவே குடிவரவுத் துறைக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் லடாய். அந்த நிலையில், கடைசி நிமிடத்தில்தான் தமக்கு தகவல் கொடுத்ததில் திருச்சி குடிவரவு துறை அதிகாரிகளுக்கு செம கடுப்பு.

அந்த நாட்களில் திருச்சி ஏர்போர்ட்டில் குடிவரவு இலாகாவுக்குப் பொறுப்பாளராக இருந்தவர் N.சீனிவாசன். மிக அமைதியான, நல்ல மனுஷன். ஆனால், குடிவரவு சட்டங்களை சட்டைப் பையில் வைத்திருப்பவர். அந்த நாட்களில் ஒரேயொரு இன்டர்நேஷனல் விமானம் மட்டும் (ஏர்லங்கா) வந்துபோன திருச்சி ஏர்போர்ட்டில், எல்லா நடைமுறைகளும் சட்டப்படி நடக்கவேண்டும் என்பதில் கடுமையாக இருந்தவர்.

இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து அன்–யூஷுவலாக ஹெலிகொப்டர்கள் திருச்சி வந்திறங்கியபோது, திருச்சி குடிவரவு இலாகாவுக்குப் பொறுப்பாளராக இருந்த சீனிவாசன், குடிவரவு நடைமுறைகளைப் பூர்த்திசெய்யாமல், மேற்கொண்டு சென்னைக்கு அவர்களை அழைத்துச் செல்ல முடியாது என்று முட்டுக்கட்டை போட்டார்.

இது திருச்சியில் ஓரளவு குழப்பத்தை ஏற்படுத்தியது. பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் சில விளக்கங்களைக் கொடுத்தபோதும், சீனிவாசன் அசைந்து கொடுக்கவில்லை. "டில்லி இமிகிரேஷன் கமாண்டில் இருந்து லெட்டர் வாங்கி வாங்க ஸ்வாமி" என்றார்.

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

வதை-62 மணியம்

**நான்** முதன் முதலில் அந்த வதைமுகாமுக்கு சென்ற போது, எனது உறவினர் ஒருவர் ஏற்கெனவே அங்கு இருப்பதை அவதானித்திருந்தேன். இடைக்காட்டைச் சேர்ந்த அவர் என்னை அங்கு கண்டதும் ஒரு பக்கம் கலவரமும், இன்னொரு பக்கம் மகிழ்ச்சியுமாக என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். கலவரத்துக்குக் காரணம் என்ன குற்றச்சாட்டில் வந்திருக்கிறேன் என்பதும், இயல்பாகவே பலவீனமும் மென்மைத் தன்மையும் உள்ள நான் புலிகளின் சித்திரவதைகளைத் தாங்கிக் கொள்வேனோ என்ற அச்சமுமாகும். மகிழ்ச்சிக்குக் காரணம் தனக்கு 'உதவியாக' உறவினர் ஒருவர் வந்திருக்கிறார் என்ற காரணமும் ஆகும்.

அவர் என்னுடன் கதைக்க விரும்புகிறார் என அவரது முகபாவனையிலிருந்து தெரிந்து கொண்டேன். ஆனால் உடனும் கதைப்பதைத் தவிர்த்தேன். இருப்பினும் அவர் அடிக்கடி என்னைச் சுற்றியே சுற்றியே வந்து கொண்டிருந்தார். இறுதியில் ஒருநாள் வலிய வந்து கதைத்தே விட்டார். பொதுவாக புதிதாக வந்தவருடன் அங்குள்ள பழையவர்கள் இலேசில் கதைக்கமாட்டார்கள். அதையும் மீறி அவர் கதைத்ததால், நானும் கதைக்கவேண்டிய தாய் போய்விட்டது. ஆனாலும் அவர் என்ன காரணத்துக்காக நான் கைதுசெய்யப்பட்டேன் என்பதைக் கேட்கவில்லை. நானும் அவரது கைதுக்கான காரணத்தைக் கேட்கவில்லை.

ஆனால் அவரால் தொடர்ந்தும் பொறுமையாக இருக்க முடியவில்லைப் போலும். தான் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை மிகவும் இரகசியமாக மற்றவர்கள் சந்தேகம் கொள்ளாத வகையில் என்னிடம் தெரிவித்துவிட்டார். அவர் குறிப்பிட்ட காரணத்தை நான் முன்னர் லேசாக அறிந்திருந்தபோதும், அதன் பூரண தாற்பரியத்தையும் விடயத்தின் பாரதூரத் தன்மையையும் அப்பொழுதுதான் பூரணமாக உணர முடிந்தது.

நான் அவர் சொன்ன விடயத்தை அதுவரை பூரணமாக அறிந்து கொள்ளாததிற்கு ஒரு காரணம் இருந்தது. அந்த சம்பவம் நடந்த இடைக்காடு கிராமம்தான் எனது தாய் தந்தையரின் பிறப்பிடங்களாகும். அத்துடன் நான் சிறு வயதில் மூன்றாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் (Prep) வகுப்பு வரை கல்வி கற்றதும் இடைக்காடு இந்துக் கல்லூரியில் (இப்பொழுது மகாவித்தியாலயம்) தான். அதன்பின்னர் நான் சுன்னாகம் ஸ்கந்த வரோதயா கல்லூரிக்குப் படிக்கச் சென்று, கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டு, 1965ஆம் ஆண்டுடன் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு விவசாயிகள் மத்தியில் கட்சி வேலை செய்வதற்காக கிளிநொச்சிக்குச் சென்ற பின்னர், இறுதியாக 1966ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி இடைக்காட்டுக்குச் சென்றிருந்தேன். அதன் பின்னர் 20 வருடங்களாக நான் அங்கு செல்லவில்லை.

அதற்கொரு காரணம் இருந்தது. 1966ம் ஆண்டு முதல் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வட பகுதி முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்களைத் தீவிரமாக முன்னெடுத்து வந்தது. அந்தப் போராட்டங்களில் இடைக்காட்டுக்கு அருகில் உள்ள அச்சுவேலி நகரில் நடந்த தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டமும், அங்குள்ள உலவிக்குளம் பிள்ளையார் கோவில் ஆலயப் பிரவோசப் போராட்டமும் உள்ளடங்கும். அவற்றில் நான் நேரடியாகப் பங்கெடுத்தேன். அதன் காரணமாக மிகுந்த உயர்சாதி மனோபாவமும், பழமைவாதமும் கொண்டிருந்த இடைக்காட்டைச் சேர்ந்த எனது உறவினர்கள் சிலரும், நண்பர்கள் சிலரும் என்மீது கடும் கோபத்தில் இருந்தனர். அவர்களுடன் நேருக்கு நேர் மோதிக் கொள்ளும் தைரியமும் விருப்பமும் இல்லாமையால், நான் இடைக்காடு செல்வதைத் தவிர்த்தேன். என்னைச் சிறு வயதில் வளர்த்த எனது பெரிய தாயார் (அம்மாவின் மூத்த சகோதரி) தொய்வு நோயால் அவஸ்தைப்பட்ட போதுகூட என்னால் அங்கு சென்று அவரைப் பார்க்க முடியவில்லை. அவர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது மட்டும், இரு தடவைகள் அங்கு சென்று பார்த்து வந்தேன். பின்னர் அவர் 1989இல் காலமான போது மட்டும் இடைக்காடு சென்று, அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டுவிட்டு உடனடியாகத் திரும்பிவிட்டேன். அதன் பின்னரும் இன்றுவரை ஒரேயொரு தடவை மட்டுமே யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருடன் தவிர்க்க முடியாத சூழலில் அங்கு சென்றுள்ளேன்.

நான் இதை இங்கு குறிப்பிடுவதன் நோக்கம், அன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணக் கிராமங்களில் சாதி வெறி எப்படி தலைவிரித்தாடியது என்பதை விளக்குவதற்காகவே. (இன்று தமிழீழத்துக்கான 30 வருட ஆயுதப் போராட்டத்தின் பின்னரும் கூட, அங்கு சாதி வெறி என்பது நீறுபூத்த நெருப்பாகத்தான் – சில நேரங்களில் கொளுந்துவிட்டு எரிவதும் உண்டு – இருக்கின்றது)

இந்த நிலைமையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த பின்னர், யாழ்ப்பாணத்தின் சாதித் தடிப்புமிக்க சில கிராமங்களில் ஒரு எதிர்பாராத மாற்றம் நிகழ்ந்தது. முன்பெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்து உயர்சாதி வெறியர்கள் 'நளவர் பள்ளரின் கட்சி' என கிண்டலாகச் சொல்வது உண்டு. அந்த அடைமொழியையிட்டு எமது கட்சியினர் பகிரங்க மேடைகளில் பெருமையாக அதை ஏற்றுக் கொண்டாடியதுமுண்டு. பின்னர் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த போது, அங்கு உருவான ஒவ்வொரு இயக்கத்துக்கும் முன்னால் யாப்பாணியத்தவர்கள் ஒவ்வொரு சாதிப் பெயரை அதே பாணியில் போட்டுக் கொண்டனர்.

இந்தத்தடவை அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சிக்கு முன்னால் முன்னர் போட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிப் பெயர்களை ஈ.பி.ஆர். எல்.எப், ரெலோ இயக்கங்களுக்குச் சூடி அழகு பார்த்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றைய இயக்கங்களை விட சற்றுக் கூடுதலான அளவு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையையும், சோசலிச அபிலாசைகளையும் கொண்டிருந்த காரணத்தால், அந்த இயக்கத்துக்கே இந்தச் சாதி அடைமொழிகள் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டன.

ஆனால் ஒரு வரலாற்று முரணாக இந்த ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம், பெரும் சாதிமான்கள் வாழும் சில கிராமங்களில் அவர்கள் மத்தியிலிருந்த இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதைக் கண்டு நான் உண்மையில் வியந்து போனேன்.

குறிப்பாக உயர்சாதிமான்களுக்குப் பேர்போன சாவகச்சேரி (நுணாவில்), கரவெட்டி, காரைநகர் அத்துடன் இடைக்காடு போன்ற இடங்களில் ஆரம்ப காலங்களில் மற்றெந்த இயக்கங்களையும் விட, ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் மிகவும் செல்வாக்குடன் திகழ்ந்ததை எண்ணி நான் வியந்தது மட்டுமின்றி, அதற்கான காரணங்கள் என்னவென்பது ஆராயப்படவும் வேண்டுமென எண்ணுகின்றேன்.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 52

பா.ராகவன்

**அங்க** இரு மன்னர்களும் உடல்நலம் தேறிய பிறகு மீண்டும் முற்றுகை யுத்தம் ஆரம்பமானது. ஆனால் முஸ்லிம் வீரர்கள் இம்முறை மிகவும் சோர்ந்து விட்டிருந்தார்கள். சலாவுதீன் யோசித்தார். தமது வீரர்கள் எவரும் வீணாக உயிரிழப்பதில் அவருக்கு உடன்பாடில்லை. ஆகவே, ஒருவரையும் கொல்ல மாட்டோம் என்று உத்தரவாதம் தந்தால் ஏக்ர் கோட்டையை விட்டுத் தந்துவிடுவதாகச் சொன்னார்.

சிலுவைப் போர் வீரர்கள் சம்மதித்தார்கள். கோட்டை கிருத்தவர்களின் வசமானது. அதன்பிறகு நடந்ததுதான் துரதிர்ஷ்டவசமானது. மன்னர் சலாவுதீன் எத்தனை மனிதாபிமானமுடன் கிருத்தவர்களை நடத்தினார் என்பதைச் சற்றும் நினைவுகூர்ந்து பாராமல், கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, கோட்டை கைவசமானதுமே அத்தனை முஸ்லிம் வீரர்களையும் கிருத்தவர்கள் நிற்க வைத்துத் தலையைச் சீவினார்கள். (வெண்ணிறமானதொரு பெரிய மைதானம், முழுவதும் இரத்தம்படிந்து செம்மண் நிலம் போலானது என்று இதனை எழுதுகிறார் சரித்திர ஆசிரியர் மிஷாட்)



யுத்தம் தொடர்ந்து நடைபெற்றது என்றாலும் நம்பமுடியாததொரு திருப்பமாகக் குறிப்பிடவேண்டிய விஷயம், இங்கிலாந்து மன்னர் முதலாம் ரிச்சர்டின் மனமாற்றம். சலாவுதீன் இத்தனை அன்பானவராக, மனிதாபிமானம் உள்ளவராக இருப்பார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அவருடன் போரிடுவதற்கு மன்னருக்குச் சங்கடமாக இருந்தது. ஏதாவது செய்து யுத்தத்தைத் தவிர்க்க முடிந்தால் எத்தனையோ சிறப்பாக இருக்குமே என்றுகூட ஒரு கட்டத்தில் யோசித்திருக்கிறார்.

அந்தக் காலகட்டத்தில் இங்கிலாந்து அரசியலில் ஏற்பட்டிருந்த சில குழப்பங்களும் இதற்குக் காரணம் என்று தெரிகிறது. ரிச்சாட் நாடு திரும்ப எண்ணினார். போவதற்கு முன்னால் போரை நிறுத்த ஒரு சந்தர்ப்பம் வாய்க்குமா என்று அவர் பார்த்தார்.

ஆகவே, சலாவுதீனின் தம்பியான சைபுதீனை சந்தித்துத் தம் அமைதி நாட்டத்தைத் தெரியப்படுத்தினார். அது எந்த மாதிரியான அமைதி ஒப்பந்தம், அதில் இடம்பெற்றிருந்த ஷரத்துக்கள் என்னென்ன என்பது பற்றிய முழுவிவரங்கள் இன்று கிடைப்பதில்லை. ஆனால் ஒப்பந்தத்தின் ஒரு பகுதி மிகவும் சுவாரசியமானது.

ரிச்சர்டுக்கு ஒரு சகோதரி இருந்தார். இவர் ஒரு விதவை. அந்த விதவைச் சகோதரியை சைபுதீன் திருமணம் செய்துகொள்ள வேண்டும். இங்கிலாந்து மன்னரின் சகோதரியை சுல்தான் சலாவுதீனின் சகோதரர் திருமணம் செய்துகொண்டு விட்டால் முஸ்லிம் – கிருத்தவர்களிடையே போர்நிறுத்தம் ஏற்படுவது ஓரளவு சுலபமாகும். (அதாவது சிலுவைப் போரிலிருந்து இங்கிலாந்து மட்டுமாவது வெளியேறும்) திருமணம் ஆனதும் ஜெருசலேமை சைபுதீனும் மன்னரின் சகோதரியும் இணைந்து ஆட்சி செய்யலாம்.

இந்த ஒப்பந்தம் மட்டும் நடைமுறைக்கு வந்திருக்குமானால் சிலுவைப் போர்கள் அன்றைய தினத்துடனேயே கூட முற்றுப் பெற்றிருக்கும் என்று அங்கலாய்க்கிறார்கள் அனைத்து சரித்திர ஆசிரியர்களும். இது புரட்சிகரமான திட்டம் மட்டுமல்ல, தொலைநோக்குப் பார்வைகொண்ட யோசனையும் கூட. இருபெரும் சமூகத்தினரிடையே மூண்டிருந்த பகைமையை நிச்சயம் தணித்திருக்கக் கூடும்.

ஆனால், கிருத்தவ மத குருமார்கள் ஒட்டுமொத்தமாக இதனை அன்று எதிர்த்துவிட்டார்கள். மன்னர் ரிச்சர்டுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றே பேசத் தொடங்கிவிட்டார்கள். ஏற்கெனவே உள்நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பங்களால் மனம் சோர்ந்திருந்த ரிச்சர்ட், வேறு புதிய பிரச்சினைகள் வேண்டாம் என்று கடைசி நிமிடத்தில் மனம் மாறியிருக்கலாம். குருமார்களைச் சந்தோஷப்படுத்துவதை மட்டுமே தமது அப்போதைய நோக்கமாக வைத்துக்கொண்டு வேண்டாவெறுப்பாக ஜெருசலேம் மீது படையெடுப்பைத் தொடங்கினார்.

சுல்தான் சலாவுதீனுக்கு இங்கிலாந்து மன்னரின் மனநிலை புரிந்தது. அவரது சூழ்நிலையும் புரிந்தது. ஆகவே, மிகவும் 'பரிவுடன்' யுத்தத்துக்கு ஒத்துழைத்தார். "நீங்கள் வேறு வழியில்லாமல் ஜெருசலேம் மீது படை எடுக்கிறீர்கள். நானும் வேறு வழி இல்லாமல் உங்களை எதிர்க்கிறேன்" என்று சொன்னாராம் சலாவுதீன்.

அந்தப் போரில் ரிச்சர்ட்டால் ஜெருசலேத்தை வெல்ல முடியவில்லை. சுல்தானின் வீரர்கள் இரும்புச் சுவர்கள்போல நகரைச் சுற்றி அணிவகுத்து ஒரு கிருத்தவப் போராளியும் முன்னேற முடியாமல் தடுத்து யுத்தம் புரிந்தார்கள். தோல்விதான் என்று ரிச்சர்டுக்குப் புரிந்துபோனது. வீணாக நாள்களைத் கடத்த வேண்டாம் என்று முடிவுசெய்தவராக, அவர் சலாவுதீனுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

'உங்கள் அன்பையும் நட்பையும் மிகவும் மதிக்கிறேன். உங்களுடைய இந்த நிலத்தில் ஆட்சிபுரிய நான் விரும்பவில்லை. இதுவரை நான் வென்ற பகுதிகளை என் சகோதரி மகனான ஹென்றிக்கு அளித்துவிடுகிறேன். அவன் உங்களுக்குக் கட்டுப்பட்டே ஆட்சிபுரிவான். அப்படித்தான் செய்யவேண்டும் என்று வலியுறுத்திவிட்டே செல்கிறேன். ஆனால் ஜெருசலேத்தை மட்டும் நீங்கள் எனக்கு அளித்துவிடவேண்டுமென்று வேண்டுறேன்'

சலாவுதீன் புன்னகையுடன் அந்த வேண்டுகோளை மறுத்துவிட்டார். நட்பு தொடரும். ஆனால் ஜெருசலேம் கிடையாது.

மூன்றாவது சிலுவைப் போர் இப்படியாக ஒரு முடிவுக்கு வந்தது. ஒரு ஜெர்மானியச் சக்கரவர்த்தியின் துர்மரணம், பல்லாயிரக்கணக்கான வீரர்களின் உயிர்த்தியாகம், ஏகப்பட்ட நோய்க்கிருமிகள் பரவியது, இங்கிலாந்து மன்னரின் மனமாற்றம், நிறைவேறாத ஓர் அமைதி ஒப்பந்தம் ஆகியவை இந்தப் போரின் எச்சங்கள்.

சிரியாவின் ஏக்ர் என்னும் ஒரு சிறுநகரின் கோட்டையை வெற்றி கொண்டது மட்டுமே இந்தப் போரில்' கிருத்தவர்கள் அடைந்த இலாபம்.

மூன்றாவது சிலுவைப்போரில் வெற்றிபெற்ற பிறகு சுல்தான் சலாவுதீன் நெடு நாள் உயிர்வாழவில்லை. ஏற்கெனவே யுத்தத்தின் போதே அவருக்கு விஷக் காய்ச்சல் கண்டிருந்தது. ஒரு மாதிரி மனோபலத்தில் தாக்குப் பிடித்து யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வெற்றியும் பெற்றிருந்தார். தாம் அதிகநாள் உயிர் வாழமாட்டோம் என்று அவருக்குத் தெரிந்திருந்தது போலிருக்கிறது. ஜெருசலேம் சிம்மாசனத்தில் அந்த முறை அமர்ந்த நாளாக ஊரில் ஏராளமான கல்லூரிகளையும் மருத்துவமனைகளையும் கட்ட ஆரம்பித்தார்.

வழிபாட்டிடங்கள் அவசியம் தான், ஆனால் கல்லூரிகளும் மருத்துவமனைகளும்தான் ஒரு சமூகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க வல்லவை என்று சொல்லியிருக்கிறார் சலாவுதீன். யுத்தத்தில் ஒரு வெற்றி என்றால் அதன் அடையாளமாக ஒரு மசூதியாவது, தேவாலயமாவது எழுப்புவது அந்நாளைய மன்னர்களின் வழக்கம். சலாவுதீன் அந்த வெற்றிக்குப் பின் ஒரு மசூதியும் எழுப்பியதாகத் தெரியவில்லை. மாறாக இடிக்கப்பட்டிருந்த அரசுக் கட்டடங்கள் பலவற்றைச் சீரமைத்துக் கல்லூரிகளாகத்தான் எழுப்பினார். இந்தவகையிலும் அவர் மற்ற கலீஃபாக்கள், சுல்தான்களிலிருந்து பெரிதும் மாறுபட்டவராகவே இருந்திருக்கிறார்.

கொஞ்சநாள் ஓய்வெடுக்கலாம் என்று ஜெருசலேத்திலிருந்து புறப்பட்டு சிரியாவில் உள்ள டெமஸ்கஸு'க்குப் (அந்த நாளில் திமஷ்க்) போனவர், அங்கேயே கி.பி 1193 ஆம் ஆண்டு உயிர்நீத்தார். வயதொன்றும் அதிகமில்லை. ஐம்பத்தாறுதான்.

சலாவுதீனின் மரணம் ஒட்டுமொத்த மத்திய ஆசியாவையும் நிலைகுலையச் செய்தது என்று பெரும்பாலான சரித்திர ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். இதில் மிகை ஏதுமில்லை. ஏனெனில், அன்றைய திகதியை சிலுவைப்போர் வீரர்களுக்கு சவால் விடக்கூடியவல்லமை பொருந்தியவராக அவர் ஒருவர் தான் இருந்தார். அச்சமூட்டுவதற்காகவே இலட்சக்கணக்கான வீரர்களை ஐரோப்பாவிலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப்பெரும் படைகளைக் கண்டு மிரளாமல் எதிர்த்து நின்றவர் சலாவுதீன்.

(தொடரும்...)




**சீனாவில்** எழுப்பப்பட்ட சிவன் கோயில் சீன சக்கரவர்தியான குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் கல்வெட்டு உள்ளது.

இக்கல்வெட்டின் கடைசி வரிகள் சீன எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. சீன நாட்டில் காண்டன் எனும் நகருக்கு 500 கல் வடக்கே உள்ள சூவன்செள என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்திலும் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. அந்தக் காலத்தில் தமிழ வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்துசென்றுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து புறப்படும் வணிகக் கப்பல்கள் தாய்லாந்து சென்று அதன் மேற்குக் கரையோரமாக உள்ள சில துறைமுகங்களிலும் தங்கிப் பிறகு வியத்து நாம் சென்று அங்கிருந்து சீனநாட்டை அடைந்துள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து நேரடியாகச் சீனாவிற்குக் கடல் வழியாகச் செல்லவேண்டுமானால் வங்காள விரிகுடாவைக் கடந்து உள்ள மாலக்கா வழியாகத் தென்சீனக் கடலை அடையலாம். மலேசியத் தீபகற்பத்தைச் சுற்றி இவர்கள் செல்லவேண்டியிருக்கும். ஆனால் இந்தவழி சுற்றுவழியாகும். ஆயிரம் கல்களுக்கு அதிகமாகப் பயணத்தொலைவு நீளும். மேலும் பயணநேரத்திலும் பல மாதம் கூடிவிடும்.

## சீனாவின் சிவன் ஆலயத்தில் தமிழில் கல்வெட்டு..!.



சீனாவில் தமிழர்கள் காண்டன் நகரில் மட்டுமன்று. வேறு சில இடங்களிலும் வணிகக் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். பிற்காலச் சோழர் காலத்தில். புகழ்பெற்ற வணிகக் குழுமான திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் எனும் குழுவினர் சீனநாட்டின் பல்வேறு பகுதியிலும் வணிகம் செய்துள்ளனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

### குப்லாய் கான் (Kublai Khan)

சூவன்லிசெள துறைமுக நகரில் சிவாலயம் ஒன்று உள்ளது. இந்த ஆலயத்தில் நிறுவப் பெற்றுள்ள சில விக்கிரகம் குப்லாய்கான என்னும் புகழ்ப் பெற்ற சீனச் சக்கரவர்த்தியின் ஆணையால் அமைக்கப் பட்டதாகும். இவருக்குச் சேகாசைகான் என்ற பெயரும் உண்டு. இவரின் உடல்நலத்திற்காக இந்த ஆலயம் எழுப்பப்பட்டது.

இந்தக் கோயில் திருக்கதாலீசுவரம் என வழங்கப்பட்டது. இந்த ஆலயத்தில் உள்ள சிவன் திருக்கதாலீசுவரன் உதயநாயனார் என அழைக்கப்பட்டார். சீனச் சக்கரவர்த்தியின் இந்த ஆணையை நிறைவேற்றியவரின் பெயர் தவச்சக்கரவர்த்திகள் சம்பந்தப் பெருமாள் என்பதாகும்.

சக யுகம் சித்திராப்பௌர்ணமி அன்று இந்த ஆலயம் நிறுவப்பட்டது. கி.பி 1260ம் ஆண்டு குப்லாய்கான் முடி சூடினான். இவன் உலகையே நடுங்க வைத்த மங்கோலியச் சக்கரவர்த்தியான செங்கிசுகானின் பேரனாவான். மங்கோலியச் சக்கரவர்த்திகள் ஆளுகையில் சீனாவும் இருந்தது.

இவன்தான் பெய்சிங் நகரைக்கட்டி அதைத் தனது பேரரசின் தலைநகராக்கினான். அவருடைய பேரரசு விரிந்து பரந்திருந்தது. வலிமை வாய்ந்த சக்கரவர்த்தியாக அவன் திகழ்ந்தான் புகழ்பெற்ற யுவான் அரசமரபை இவனே தொடங்கியவனாவான். தமிழ்நாட்டில் பிற்காலப் பாண்டியப் பேரரசு அரசோச்சிய காலத்தில் இவன் சீனப்பேரரசின் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான். பாண்டிய அரச குலமும் குப்லாய்கானும் மிகுந்த நட்புறவுடன் திகழ்ந்தனர். அப்போதிருந்த பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் ஆவான். இருநாடுகளுக்கிடையேயும் தூதர்கள் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டது.

சீனாவில் எழுப்பப்பட்ட இந்த சிவன் கோயில் சீன சக்கரவர்த்தியான குப்லாய்கானின் ஆணையின் கீழ் கட்டப்பட்டது என்பதைக் குறிக்கும் கல்வெட்டு இக்கோவிலில் உள்ளது. இக்கல்வெட்டின் கடைசி வரிகள் சீன எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுக்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட மிக அபூர்வமான தமிழ்க்கல்வெட்டு இதுவாகும்.

# புளொட் போராடியிருந்தால் நிலைமை மாறியிருக்கும்

## -சித்தார்த்தன்

**புளொட் அமைப்பின் தலைவர் திரு. சித்தார்த்தன் அவர்கள் அண்மையில் இணையத்தளம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. தற்கால அரசியல் சூழல் குறித்து அவர் தெரிவித்திருக்கும் செய்திகள் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.**



**கேள்வி :-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிலைமை தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

**பதில் :-** தமிழ் தேசியக் கூட்டமைப்பில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. அவை ஊடகங்களில்கூட வெளிவந்திருக்கின்றன. அவை கொள்கையின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கின்ற முரண்பாடுகள் அல்ல. அவை நடைமுறையில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளாகவே காணப்படுகின்றன. எமது கட்சியைப் பொறுத்தவரையில் இரண்டுவருடங்களிற்கு முன்னதாக கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுடனேயே கூட்டமைப்புடன் இணைந்துகொண்டோம்.

தமிழ் மக்களின் ஒற்றுமையை பிரதிபலிக்க வேண்டும் ஒரு பலமான கூட்டமைப்பைக் கட்டி எழுப்பவேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்துடனேயே இணைந்துகொண்டோம். நாங்கள் தனிப்பட்ட எந்த ஒரு விடயத்தையும் முன்வைத்திருக்கவில்லை.

குறிப்பாக தேர்தலில்கூட எமக்கு வேட்பாளர்கள் இத்தனை பேர் வேண்டும். பல இடங்களில் போட்டியிடவேண்டும் என நாம் பெரியளவில் கோரியிருக்கவில்லை. அவர்கள்கூட அதனை தரவுமில்லை. கூட்டமைப்பினுள் ஒரு ஒற்றுமை கொண்டுவரப்பட வேண்டும் என்பதன் காரணத்தால் அதனை நாம் ஒரு பொருட்டாகவும் எடுக்கவில்லை. அவ்வாறு ஒரு ஒற்றுமையை கட்டியெழுப்புவதாயின் சரியான ஒரு அமைப்பு கூட்டமைப்பிற்கு வழங்கப்படவேண்டும். இதனையே நாம் நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

இதனை நாம் மத்திரமின்றி எமக்கு முன்னதாகவே கூட்டமைப்பில் காணப்படும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. இது தேர்தலை அடிப்படையாக வைத்துக்கோரப்படும் விடயமல்ல. தமிழ் மக்களுக்காக தந்தை செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம் போன்றவர்கள் அப்போதைய கடினமான நிலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியுள்ளார்கள். அவர்கள் கூட தமது கட்சி நலனை எல்லாம் பின்தள்ளி தமிழர் கொங்கிரஸ், தமிழரசுக்கட்சி என்பவற்றை இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக முன்னிறுத்தி செயற்பட்டார்கள்.

அது மிகப்பலம் பொருந்திய சாத்வீக விடுதலை இயக்கமாக மக்கள் மத்தியில் உருவாக்கம் பெற்றது. ஆனால் இன்றிருக்கக்கூடிய நிலைமையில் ஒரு ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களுடைய விடுதலையை நோக்கி நாம் முன்னேற வேண்டுமாயின் ஒரு பலம்பொருந்திய அமைப்பு அவசியமாகின்றது. தனித்தனிக்கட்சியாக தம்மை வளர்த்துக் கொண்டு தேர்தலுக்கு மாத்திரம் கூட்டமைப்பு எனக்கூறி நின்றால் நியாயமான தீர்வை நோக்கி செல்வதில் பாரிய பின்னடைவு ஏற்படும். ஆகவேதான் இன்று இந்த விடயத்தை கருத்தில் கொண்டு பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பலர் இதில் தலையிட்டு பேசிக்கொண்டிருக்கின்றார்கள். முடிவு எவ்வாறு அமையப்போகின்றது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டியுள்ளது.

**கேள்வி :-** திம்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர் என்ற ரீதியில் திம்பு திட்ட வரைபுகளை தற்போதுள்ள சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுத்தமுடியும் என கருதுகிறீர்கள்?

**பதில் :-** எமது கட்சி, விடுதலைப்புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி என ஆறுகட்சிகளின் பிரதிநிதிகளும் திம்புவிற்கு சென்றிருந்தோம். இந்த ஆறு கட்சிகளில் விடுதலைப்புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், ஆகிய நான்கு கட்சிகளும் தமிழீழ தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரிலே இயங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அரசியல் அவதானிகள் முதல் இலங்கை அரசாங்கம்வரை நாம் அனைவரும் வித்தியாசமாக வேறுபாட்டுடனேயே பேசப்போகின்றோம் எனக் கருதினார்கள்.

ஆனால் அவர்களுடைய எதிர்வுகூறல்களையும் எதிர்பார்ப்புக்களையும் முறியடித்து ஆறு கட்சிகளும் ஒரே குரலில் ஒற்றுமையாக எமது பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தோம். குறிப்பாக ஒவ்வொரு இரவுப்பொழுதிலும் எமக்காக ஒதுக்கப்பட்ட தங்குமிடங்களில் ஒன்றுகூடி நாளை யார் பேசுவது, என்ன பேசுவது போன்ற விடயங்களை கலந்துரையாடி தீர்க்கமாக எடுத்து பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டோம். இந்த ஒற்றுமையானது தமிழினத்திற்கு எதிராக இருந்த பலருக்கு ஏமாற்றத்தை கொடுத்திருந்தது. அவ்வாறான ஓர் ஒற்றுமையான செயற்பாட்டை அதன்பின்னர் நான் இங்கு காணவில்லை. அப்போதைய காலத்தில் ஆயுத இயக்கங்களிடையே பரஸ்பரம் பகைமை உணர்வு கூடுதலாக இருந்த காலமாகும். அந்த நேரத்திலே மிக ஒற்றுமையாக செயற்பட்டமை மிகப்பெரிய விடயமாகும்.

நாம் அந்த பேச்சு வார்த்தையின்போது தமிழர் தனித்துவத்தேசிய இனம், தனியான தாயகம், சுயநிர்ணய உரிமை, சகல தமிழ் மக்களுக்கும் முழுமையான குடியுரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் என நான்கு கொள்கைகளை முன்வைத்திருந்தோம். இவை கொள்கை ரீதியிலான விடயங்கள். இந்தக் கொள்கைகள் என்றுமே செல்லுபடியாகக் கூடிய விடயங்கள். அன்றைய காலத்தில் நாம் இந்த கொள்கைகளை முன்வைக்கும் போது அங்கிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட அனைத்துக் கட்சியினரும் தமிழீழக் கோரிக்கையை கைவிட தயாராக இருக்கவில்லை. அதேநேரம் அராசங்கம் 1983 கலவரங்களின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது முன்வைத்த அதே பிரேரணைகளைத்தான் திம்புவிலும் மாற்றமில் லாது முன்வைத்தார்கள்.

இவை ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணியால் மிகவும் கீழ்நிலையில் இருப்பதாக கூறி மறுக்கப்பட்டவை. அதனை பார்த்தவுடனேயே இந்தப் பேச்சுவார்த்தையில் எவ்விதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை என்ற எண்ணப்பாடு எங்கள் அனைவரிடமும் தோன்றியது. ஆகவே எங்களுடைய நிலையில் இறுக்கமாக நிற்கவேண்டும் என்ற மனப்பான்மை எமக்குள் உருவானது. தமிழீழக் கோரிக்கை அடிப்படையாக இருப்பினும் அதற்கு மாற்றாக ஒரு நியாய மான தீர்வை வழங்குவதற்கு அரசு தயாராகவில்லை என்ற காரணம்தான் அப்பேச்சுவார்த்தையும் முறிவுக்குவருவதற்கு நிச்சயமான காரணமாக உள்ளது. வவுனியாவில் இடம்பெற்ற படுகொலைகளை வைத்து நாம் வெளியேறியிருந்தாலும் இது தான் பின்னணியில் காணப்படுகின்றது. இதனை இந்தியாவிற்கு தெளிவாக நாம் விளங்கப்படுத்தியிருந்தோம். சில அதிகாரிகளுக்கு விளங்காது இருப்பது வேறு விடயம்.

திம்புக் கோட்பாடுகள் இன்றும் செல்லுபடியாகக்கூடியவை. ஆகவே அதன் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை இன்று கொண்டுவர முடியும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இருக்கமுடியாது.

**கேள்வி :-** நேரடியான பேச்சுவர்த்தைகளின் போது இந்தியாவின் செயற்பாடு எவ்வாறு காணப்பட்டது?

**பதில் :-** முதற்தடவையாக திம்புவில்தான் ஆயுதக்குழுக்களுடான ஒரு பேச்சுவார்த்தை இடம் பெற்றது. இதற்காக இந்தியா, இலங்கை அரசாங்கம் மற்றும் ஆயுதக்குழுக்களுக்கு அழுத்தங்களை வழங்கியிருந்தது. பொதுவாக இந்தப் பேச்சுவார்த்தையை எவ்வாறு எடுத்துச்செல்வது, முறிவடையும் நிலை வரும்போது இருதரப்பிடமும் தொடர்ந்து பேசுமாறு கோரிக்கைவிடுதல் போன்ற விடயங்களில் மட்டுமே தலையிட்டார்கள். இலங்கை அரசாங்கத்தினால் பேச்சுவார்த்தை முறிவுக்குவர அதன் தொடர்ச்சியாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் பிற்காலத்தில் வந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்போது இந்திய அரசு எங்கள் மீதும் மிகப்பெரிய அழுத்தத்தை கொடுத்தே கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னைய நாளில்தான் அந்த வரைபு எமக்களிக்கப்பட்டு அதனை பார்வையிடலாம்; மாற்றங்களை செய்யமுடியாது என இந்தியாவால் அழுத்தமாக கூறப்பட்டது. உங்களுடைய கருத்துக்களை கூறுங்கள் அது தொடர்பிலான விடயங்களை பின்னர் பார்க்கலாம் என ராஜீவ் அரசு கூறியது. அதன்பின்னர் அழுத்தங்களின் மத்தியிலேயேதான் கைச்சாத்திடப்பட்டது.

தற்போது விடுதலைப்புலிகளின் யுத்த தோல்விக்கு பின்னர் நாம் எல்லாவிதத்திலும் பின்னடைந்திருக்கின்றோம், பலவீனமாக இருக்கின்றோம். ஆகவே இருப்பதையாவது காப்பாற்றிக்கொள்வதற்கு முதற்படியாக நாம் ஏதாவது செய்துகொள்ளவேண்டும். கிழக்கில் பெரும்பாலும் குடிப்பரம்பல் பாரியமாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதே நிலை வடக்கிலும் தற்போது சிறுகச்சிறுக நடைபெற ஆரம்பித்திருக்கின்றது. நாம் 65வருடங்களுக்கு மேலாக பேசிவிட்டோம். ஆனால் எந்தவொரு நியாயமான தீர்வையும் பெறமுடியவில்லை. 1987ஆம் ஆண்டு நியாயமாக இல்லாவிட்டாலும் இந்திய - இலங்கை ஒப்பந்த தீர்வொன்றே எமது கைகளுக்கு கிடைத்தது.

அதன் பிரகாரம்தான் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதுகூட தற்போது படிப்படியாக பலவீனப்படுத்தப்பட்டு வந்துகொண்டிருக்கின்றது. இவை எல்லாம் நிறுத்தப்பட்டு மீண்டும் 13 பிளஸ் கொண்டு வரப்படவேண்டும்.

இவைகள் நிறுத்தப்படாவிட்டால் இன்னும் 5-10 வருடங்களில் பேசுவதற்கு ஒன்றுமே இருக்காது. இது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். இதனைக் கூறுவதால் என்னை நம்பிக்கை இழந்தவன் என்று கூட சிலர் நினைப்பார்கள். யதார்த்த ரீதியில் பார்க்கையில் இன்றைய அரசு அவ்வாறான நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப வேலை செய்துகொண்டிருக்கும் உண்மையை பலர் அறிந்திருந்தும் அதனை அறியாதவர்கள் போல நடிக்கப்பார்க்கிறார்கள். இந்த நிலைமையை இவ்வாறாவது காப்பாற்றுவதற்கு ஏதாவது உடனே செய்தேயாக வேண்டும்.

**கேள்வி :-** புளொட் அமைப்பை பொறுத்த வரையில் ஆரம்பத்திலே லெபனானில் பயிற்சி பெற்று பலம்பொருந்திய அமைப்பாக காணப்பட்டது. பின்னர் அது பலவீனமடைந்து சென்றமைக்கான காரணம் என்னவாக இருக்கின்றது?

**பதில் :-** முதலாவது காரணமாக காணப்படுவது எங்களுக்கு ஆயுதம் கிடைக்காது விட்டமையே. வெளி நாடு ஒன்றிலிருந்து' நாங்களாக முயற்சித்துக்கொண்டு வந்த ஆயுதத்தை இந்தியாவின் சென்னை நகரில் இருந்து வெளிக்கொண்டுவர இயலாதுபோனது. அதனை இந்திய அரசாங்கம் கைப் பற்றியது. இரண்டு

அதிபார ஊர்திகளில் நிரப்பப்பட்ட ஆயுதங்களே அவ்வாறு கைப்பற்றப்பட்டன. அவை எமது கைகளுக்கு கிடைத்திருந் தால் அந்த நேரத்தில் பெரியதொரு ஆரம்பமாக இருந்திருக்கும். புளொட் ஒரு சுதந்திரமாக இயங்கும் இயக்கமாக இருக்குமே தவிர மற்றைய எவரின் சொல்லையும் கேட்டு நடக்காது என அப்போது எங்களுடன் தொடர்பாடலில் இருந்த இந்திய அதிகாரிகள் எம்மீது வைத்த அவநம்பிக்கையும் ஒரு காரணமாகும். அதன் காரணத்தாலேயே பல உதவிகளை மறுத்திருக்கின்றார்கள்.

அடிப்படையாக ஆயுதக் குழுவொன்றுக்கு ஆயுதம் இல்லாது செயற்படுவது என்பது மிக் கடினமான விடயம். அதன்காரணமாக வடகிழக்கில் விடுதலைப்புலிகள் எம்மை தடைசெய்யும் போதும் அவர்கள் மற்றைய இயக்கங்களை தாக்கியதுபோல் எம்மையும் தாக்க முற்படுகின்ற போதும் நாங்கள் எம்மை தற்காத்துக்கொள்ள முடியாத நிலை உருவானது. இதுவே எமது இயக்கம் பலவீனமடைவதற்கு அடிப்படையாக அமைந்தது.

இந்தியாவின் தலையீட்டினால் வங்களா தேசத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கொமாண்டர் பதவியிலிருந்த லோரன்ஸ் லிப்சுல் என்பவர் எழுதிய நூலின் தமிழாக்கமாகவே 'வங்கம் தந்த பாடம்' என்ற நூல் 1985 இல் புளொட்டினால் வெளியிடப்பட்டது. இந்தப்புத்தகத்தின் வெளியீடு இந்தியாவின் சொல்லை புளொட் கேட்டு நடக்காது என்பதையும் புளொட்டின் ஆயுதப் போரோட்டம் தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காக அமையுமே தவிர, இந்தியாவின் நலன்களுக்காக அமையாது என்பதனை காட்டியிருந்தமையும் ஒரு காரணமாக காணப்படுகின்றது. உதவிகளை செய்யமறுத்தது. ஆகவே இதுவும் எமது கட்சி பலவீனமடைவதற்கு ஒரு காரணமாக உள்ளதென கூறமுடியும்.

**கேள்வி :-** செப்ரம்பரில் நடைபெறவிருக்கும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

**பதில் :-** இன்றுவரை ஒரு சரியான நிலைப் பாட்டிற்கு எமது கட்சிவரவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் தேர்தல் தொடர்பில் இருக்க கூடிய சில கருத்து வேறுபாடுகள் அல்லது கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இந்த நான்கு கட்சிகளுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் வேட்பாளர்களை நியமிப்பதில் இருந்த மிகப்பாரிய பிரச்சினைகள். இவற்றினை கருத்தில் கொண்டு இதே நிலைமைதான் வடக்கிலே வந்துவிடுமோ என்ற மனக்கிலேசம் ஒன்று நான்கு கட்சிகளிடையே இருந்து கொண்டு இருக்கின்றது.

ஆனால் மிகவிரைவில் அதற்கொரு முடிவெடுக்கவுள்ளோம். இன்று அரசு வடமாகாண சபைத் தேர்தலுக்கான பணிகளை ஆரம்பித்து விட்டது. மிகத்தீவிரமாக அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதமான ஒரு தேர்தல் வேலைகளையும் செய்யவில்லை. அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அபேட்சகர்களை தெரிவுசெய்ய வேண்டும். அவர்களை இப்போது முதல் செயற்பட சென்றால்தான் வாக்குகளை சேகரிக்க முடியும். கட்சிகளுக்கிடையில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடப் போகின்றார்கள் என்பது தீர்மானிக்கப்படவேண்டும். ஆனால் அவற்றை கூட தீர்மானிக்க முடியாத நிலையில் கூட்டமைப்பு மிகவும் இழுபறியான நிலையில் இருக்கின்றது. இதற்கு விரைவில் ஒரு தீர்வு காணப்படும் என நினைக்கின்றேன்.

**கேள்வி :-** வடக்கில் தற்போது நடைபெறும் குடியேற்றங்களில் உள்ள சர்ச்சைகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில் :-** இன்று முக்கியமாக இருக்கும் முறைப்பாடாக இதுவே காணப்படுகின்றது. வடக்கிலி ருந்து இடம்பெயர்ந்து அல்லது வெளியேற்றப்பட்ட முஸ்லீம் கள் மீண்டும் வந்துகுடி யேறுவதை எவரும் தடுக்கவும் முடியாது. அதனை பிழை எனகூறவும் முடியாது. அதனை வரவேற்கவேண்டும். அந்த போர் வையில் வெளியில் இருக்கக் கூடிய அல்லது சம்பந்தமில்லாத வர்கள் குடியேறுவதை நாம் அனு மதிக்கமுடியாது. முஸ்லீம் களை காட்டிலும் சிங்கள மக்கள் முல்லைத்தீவில் அதிகமாக குடியேறுவது ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கின்றது. இதே நிலைமை முல்லைத் தீவில் நீடித்துக்கொண்டு செல்லுமாக இருந் தால் 2020, 2021 தேர்தல்களில் தமிழ் மக்கள் சிறு பான்மையாக மாறக்கூடிய அபாயம் காணப் படுகின்றது.

அதேநேரம் வலி. வடக்கு உயர்பாது காப்பு வலயத்தை அரச சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் சுவீகரித்து அப்பகுதி மக்களுக்கு நஷ்டஈடுக் களை வழங்கி அவர்கள் அதனை மறந்து ஓரிரு ஆண்டுகள் கடந்தபின்னர் அங்கு என்ன நடக்கும்?, யார் குடியேறுவார்கள் எனக் கூற முடியாத ஆபத்தான நிலை காணப்படுகின்றது. வடக்கில் உறுதிகாணிகளாக காணப்படுவதால் குடியேற்றங்களை செய்யமுடியாது. அதனால்தான் அவர்கள் சுவீகரிப்பு நடவடிக்கைமூலம் திட்டமிட்டு கையகப்படுத்த முயற்சிசெய்கிறார்கள்.

**கேள்வி :-** இனப்பிரச்சினை தீர்வுநோக்கிய பயணத்தில் இந்தியா எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என கருதுகின்றீகள்?

**பதில் :-** தற்போது 70,80 கள் அல்ல. நிலைமைகள் முற்றான மாறியுள்ளன. ஆகவே ஒரு எல்லைக்கு மேல் தங்களால் அழுத்தங்களை வழங்கமுடியாது என அவர்களுடன் பேசும் போது கூறுகின்றார்கள். இருப்பினும் நாங்கள் அழுத்தத்தை வழங்குவோம். நீங்கள் அரசுடன் பேசித் தீர்வைக்காணுமாறு பகிரங்கமாக கூறுகின்றார்கள். இந்தியாவின் அழுத்தங்கள், உதவிகள் முக்கியமாக தமிழ் நாட்டு மக்களின் அழுத்தங்கள் ஒன்று இல்லாது இங்கு தீர்வு ஒன்று வரமுடியாத நிலைமையை இலங்கை அரசாங்கமே உருவாக்கியுள்ளது. யுத்தம் நிறைவுக்கு வந்தவுடன் மிக இலகுவாக பேசித்தீர்த்து வைக்கக்கூடிய பிரச்சினையை இன்று சர்வதேசமாயமாவதற்கு அரசாங்கமே காரணமாக இருக்கின்றது. இதற்கு நாங்கள் காரணமல்ல.

கடந்த காலங்களில் தொடர்ந்து வந்து பெரும்பான்மை அரசாங்கங்கள் தாங்கள் ஒரு நியாயமான தீர்வை வைப்போம். அதனை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அதனால் முன்வைக்க முடியாதுள்ளது என தொடர்ச்சியாக கூறிவந்தன. இதனை இந்திய உட்பட வெளிநாட்டவர்கள் நம்பி யுத்தம் முடிந்தவுடன் தீர்வு வந்துவிடும் என கருதினார்கள். ஆனால் தீர்வை மகிந்த அரசு மட்டுமன்றி எந்தவொரு பெரும்பான்மை அரசும் கொடுப்பதற்கு தயாரில்லை என்பதை இந்தியா உட்பட பல வெளிநாட்டவர்கள் உணரத்தொடங்கியுள்ளார்கள். ஆகவேதான் அவர்கள் அமெரிக்க பிரேரணைகள் ஐ.நா தீர்மானங்கள் போன்ற அழுத்தங்கள் மூலமே அதனை செய்யமுடியும் என கருதுகின்றார்கள். அதனைத்தான் நாங்களும் நம்பியிருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் பாராளுமன்றத்திலும் வெளியிலும் இந்தியாவும் அமெரிக்காவும்தான் எமக்கு ஒரு தீர்வைத்தர வேண்டும் நாங்கள் வெளிநாட்டைத்தான் நம்பியிருக்கின்றோம் என கூறியுள்ளார்கள். ஆகவே அவ்வாறான அழுத்தங்கள் தான் எதாவது ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும்.



தொகுப்பு வேணுகிருஷ்ணா

# அமெரிக்காவின் போர்களும் பொய்களும்

## ஈராக்கிய போரின் பத்து ஆண்டுகளுக்கு பின் அமெரிக்க செய்தி ஊடகத்தின் வஞ்சகம்

இந்த வருடம் பங்குனி மாதம் 19 ஆம் திகதி ஈராக்கின் மீதான அமெரிக்கப் படையெடுப்பின் பத்தாம் ஆண்டு நிறைவு தினத்தில் ஈராக் முழுவதும் பல கார்க்குண்டுகள் ஷியைட் இலக்குகளை தாக்கின. இத்தாக்குதல்களில் 65 பேர் கொல்லப்பட்டதோடு, 200 பேர் காயமுற்றனர். இது ஈராக்கில் நவகாலனித்துவ அமெரிக்க ஆக்கிர மிப்பின் ஒரு இரத்தக்களரி நினைவூட் டல் ஆகும். இதில் சிரியப் போர் விரிவாக்கம் மற்றும் இனவழி - குறுங் குழுவாத மோதல்களை எரியூட்டும் வாஷிங்டனின் திட்டங்களும் அடங்கும்.

குண்டுவீச்சுக்கள், ஈராக்கில் அல்குவேடாவுடன் பிணைந்துள்ள அல் நுஸ்ரா முன்னணியின் ஷியைட்-எதிர்ப்பு தாக்குதல்களின் ஒரு பகுதியாக வந்துள்ளன. இது தற்பொழுது ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை கவிழ்ப்பதற்கு போராடும். அமெரிக்க ஆதரவு பெற்ற சிரிய எதிர்த்தரப்புக்களில் ஒரு பிரிவு ஆகும்.

இந்த தொடர்ச்சியான கொடூரங் களின் பின்னணியில், ஈராக்கிய போர் பற்றிய அமெரிக்க செய்தி ஊடகத்தின் வஞ்சகம்மிக்க, அக்கறையில்லாத கருத்துக்களால் ஒருவர் வெறுப்புத்தான் அடைய முடியும். டிசம்பர் 2011இல் அமெரிக்க துருப்புக்கள் ஈராக்கில் இருந்து முறையாக திரும்பப் பெறப்பட்டு ஒரு ஈராக்கிய அரசாங்கம் தேர்ந் தெடுக்கப்பட்ட பின்னரும்கூட கடந்த காலம்போலவே அவர்கள் போரை பாதுகாப்பானதாக கூறுகின்றனர். போரை பொய்களுடனும் குற்றத் தன்மையுடனும் அமெரிக்க ஏகாதி பத்தியம் தொடர்ந்தவிதம், ஈராக்கை பேரழிவிற்கு உட்படுத்தியது. கிட்டத்தட்ட 1.2 மில்லியன்(12இலட்சம்) ஈராக்கியர்களை காவுகொண்டதுடன், கிட்டத்தட்ட 4,500 அமெரிக்க துருப்புக்களும் உயிரிழந்தது. 2 டிரில்லியன் டொலர்கள் செலவு செய்யப்பட்டது. அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன அல்லது 'உளவுத்துறை தகவல் தோல்விகள்' என உதறித்தள்ளப்பட்டன.

போர் மக்கள் மீது சுமத்தப்பட்டது பரந்த எதிர்ப்புக்கள் இருந்த போதிலும்கூட பொய்களைத்தளமாக கொண்ட ஒரு செல்வாக்கற்ற போர் அமெரிக்க மக்கள்மீது சுமத்தப்பட்டது. இதற்கு எவரும் பொறுப்புக் கூறப்படவில்லை. ஈராக் பேரழிவு விளைவிக்கும் ஆயுதங்களை கொண்டிருந்தது என்பதைக் காட்டும் சான்றுகள் அமெரிக்க அதிகாரிகளால் பொய்யாக தயாரிக்கப்பட்டன. இவற்றில் 2003ஆம் ஆண்டு ஐ.நா.வில் வெளிவிவகாரச் செயலர் கொலின் பவல் கொடுத்த அறிக்கையும் அடங்கும். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் துணை ஜனாதிபதி டிக் ஷேனேயும் அல்குவேடாவுடன் நட்புக்கொள்வதை தடுப்பதற்காக அமெரிக்கா ஈராக்மீது தாக்குதல் நடத்த வேண்டியிருந்தது என்று கூறினர். இப்பொழுது அல்குவேடா தான் சிரியாவில் நடக்கும் போரில் அமெரிக்காவின் பினாமியாக உள்ளது.

ஈராக்கியப் போர் ஏற்படுத்திய குற்றங்களின் அளவுகளும் பேரழிவும் அமெரிக்கச் செய்தி ஊடகம் அதை முகங்கொடுத்த விதமும் ஓர் வலிய தன்மையைக் கொண்டுள்ளது. ஒரு ஆக்கிரமிப்பு போருக்கு ஆதரவு கொடுப்பதற்கு, மக்கள்மீது செய்தி ஊடகங்கள் மகத்தான அழுத்தம் கொடுத்த பத்து ஆண்டுகளுக்கு பின்னர், இப்பேரழிவிற்கு வழிவகுத்த நிகழ்வுகளை பற்றி பரிசீலித்த ஒருதீவிர விமர்சனம்கூட கிடையாது. இக்கதை இரண்டு நிமிட செய்திச் சுருக்கங்களிலும், சிறுகட்டுரைகளிலும் மறைந்துவிடுகின்றன.

அமெரிக்க உயர்கல்விக் கூடத்தினரும் அரசாங்க அதிகாரிகளும் கூறிய சுருக்கமான கருத்துக்களை "அதற்கு அவ்வளவு மதிப்பு இருந்ததா?" என்ற தலைப்பில் நியூயோர்க் டைம்ஸ் ஒரு பட்டியலாக வெளியிட்டது. ஹார் வர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியரும் முன்னாள் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகருமான மெகன் ஓசுல்லிவன் இழிந்த வாதம் ஒன்றை முன்வைத்தார். "நம்பினாலும் நம்பாவிட்டாலும் போருக்குப்பின் இப்பொழுது நாம் பாதுகாப்பாக உள்ளோம்." பேரழிவுதரும் ஆயுதங்கள் பற்றிக் குறிப்பிட்டு அவர் ஈராக் மீது படையெடுப்பை நடத்தியிராவிட்டால், "முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஒரு அணுவாயுதத்தை இன்று வைத்திருப்பார் என்பது ஏற்கத்தக்கதே" என்றார்.

ஈராக் "முன்னேற்றத்திற்கும் குழப் பத்திற்கும் நடுவே தள்ளாடுகிறது" என்று வாஷிங்டன் போஸ்ட் எழுதியது. தற்பொழுது குறுங்குழுவாத போர் நடக்கிறது என்பதை அது ஒப்புக் கொண்டு. "இப்பொழுது பெரும்பாலான மக்கள் நல்ல வேலையில் உள்ளனர. நிறைய வாய்ப்புக்கள் உள்ளன" என்ற நஜப் கவர்னர் அட்னன் ஜுர்பியின் கருத்தை மேற்கோளிட்டுள்ளார். இது ஒரு பொய் கலந்த உண்மை என வைத்துக் கொண்டாலும்கூட, இதையொட்டி அமெரிக்கப் படையெடுப்பு, ஈராக்கிய ஆக்கிரமிப்பு ஆகியவற்றை நியாயப்படுத்த முடியாது.

## சிரியாவில் அமெரிக்கா தலைமை யிலான ஆக்கிரமிப்பிற்காக வாதிட்டுள்ளோர்

போரை முக்கியமாக ஆதரித்த பண்டிதர்கள் "நியூயோர்க் டைம்ஸின் தோமஸ் ப்ரீட்மன் மற்றும் வாஷிங்டன் போஸ்ட்டின் ரிச்சார்ட் கோஹன் மற்றும் டேவிட் இக்நேஷியஸ்" இந்த ஆண்டு தின நிறைவைப் பற்றிக் கருத்து ஏதும் கூறவில்லை. ஈராக்கில் "எண்ணெய் பற்றிய போரில்" தனக்கு ஏதும் பிரச்சினை இல்லை என்ற தனது இகழ்வான அறிக்கை குறித்து ப்ரீட்மன் பொறுப்புக் கூற முற்படவில்லை.

போஸ்ட்டின் கட்டுரையாளர்கள் தங்கள் பங்கிற்கு சிரியப் போருக்கு அழைப்புவிடுத்துள்ளனரே ஒழிய, ஈராக்கின் தங்கள் கடந்தகால கருத்து க்களைப் பற்றி எழுதவில்லை. சிரியாவில் எதிர்த்தரப்பினருக்கு விமான ஏவுகணை எதிர்ப்பு முறைகளை அனுப்பியதை வரவேற்ற இக்நேஷியஸ் சிரியாவில் அமெரிக்க தலைமையிலான ஆக்கிரமிப்பிற்கு வாதிட்டுள்ளார். "நேர்மையுடன் பார்ப்போம். அசாத் அகற்றப்பட்டு சிரியா இறுதியாக நாட்டைக் கட்டமைக்கும்போது அதற்கு பாரிய பொருளாதார இராணுவ உதவி தேவைப்படும். இதில் அரபு லீக் அல்லது நேட்டோ நாடான துருக்கியில் இருந்து அமைதி காக்கும் துருப்புக்கள்கூட தேவைப்படலாம்."

2003ல் கோஹன், ஈராக்கிய பேரழிவு தரும் ஆயுதங்கள் குறித்த கொலின் பவலின் ஐ.நா. பொய்களில் களித்து "நியாயமான மனிதர் நியாயமாக வழக்காடுகிறார்" என்றார். செய்தித்தாள் வெளியிடும் நேரத்தை கருத்திற்கொண்டு பவல் உரையை முடிக்குமுன்னரே தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. இப்போது சிரியா வில் அல்குவேடாவிற்கு ஆயுதங்கள் கொடுப்பதின் எதிர்பாராத விளைவுகள் திரும்பிப் பாயக்கூடும் என்ற கவலைகளை உதறித்தள்ள அவர் மீண்டும் விரைகிறார்.

அசாத்தை தொடர்ந்து தாக்குவதை அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டும் என்று கோஹன் எழுதுகிறார். "திரும்பித் தாக்குவது இப்பொழுது ஏற்படலாம். அதைத் தவிர்க்க உறுதியான வழியில்லை. கட்டுப்படுத்த மட்டும்தான் முடியும். அது நிதான போக்குடையவர்களுக்கு விரைவில் ஆயுதம் கொடுப்பதின் மூலமும் போரை விரைவில் முடிப்பதற்கு அழுத்தம் கொடுப்பதின் மூலமும் முடியும்" என்று கோஹன் எழுதுகிகிறார்.

கோஹனின் போர் வெறிக் கருத்துக்கள் முன்னாள் தாராளவாத ஜனநாயகக் கட்சி சார்பு செய்தி ஊடகத்தில் ஒரு உற்சாகமான போர் ஆதரவுத்தளம் வெளிப்படுவதை பிரதிபலிக்கிறது.

ஆக்ரோஷப் போருக்கு செய்தி ஊடகம் கொடுக்கும் ஆதரவு, அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கொள்கையில் வினா விற்கு உட்படாத தளமாகிவிட்டது. நாஜி பிரச்சார எந்திரத்தை செயற்படுத்திய உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராக வழங்கப்பட்ட கண்டனங்களே இதற்கும் கூறப்படலாம். ஐ.நா. தீர்மானம் 110 நூரெம்பேர்க் விசாரணைகளுக்குப் பின் இயற்றப்பட்டது. "எந்த நாடு போர்குறித்து பிரச்சாரத்தை எப்படி நடத்தினாலும் அமை திக்கு அச்சுறுத்தலை தூண்டும் அல்லது ஊக்கம் கொடுக்கும் வடிவமைப்பில் இருந்தால் அமைதி மீறப்படலாம் என்று கண்டால் ஆக்கிரமிப்புச் செயல் என்று கண்டிக்கப்பட வேண்டும்" எனக் கூறுகிறது.

## போரில் சிலரைப் பொறுத்தவரை நல்ல இலாபங்கள்

போரில் கணக்கிலடங்கா மனித நிதிய இழப்புக்கள் இருந்தபோதிலும்கூட சில-ரைப் பொறுத்தவரை Operation Iraqi Freedom இனால் நல்ல இலாபங்களும் ஏற்பட்டுள்ளன.

போர் அமெரிக்காவை திவாலாக்கி ஈராக்கைப் பேரழிவிற்கு உட்படுத்தியது. அதன் எண்ணெய் வயல்கள் இப்பொழுது மேற்கத்தைய நிறுவனங்களால் கொள்ளை அடிக்கப்படுகின்றன-- இவற்றுள் Exxon-Mobil, BP, Chevron, Shell, ஷேனேயின் நிறுவனமான ஹொலிபர்ட்டன் ஆகியவை அடங்கும். ஈராக் எரிசக்தி தட்டுப்பாட்டையும் எதிர்கொள்கிறது. பல ஈராக்கிய குடிமக்கள் இன்னமும் மின்சாரம், நீர் இல்லாமல் தவிக்கின்றனர். ஈராக்கிய எண்ணெய் ஏற்றுமதியில் 80% வெளிநாட்டு நிறு வனங்களுக்கு செல்கின்றன. அவை பெரிய அளவில் அமெரிக்க தூதரகத்துடன் இணைந்து உழைக்கின்றன. தூதரகம் இன்னமும் பக்தாத்தின் கோட்டை போலுள்ள பசுமைப் பகுதியில் மறைந் துள்ளது. அது ஈராக்கிய பிரதம மந்திரி நௌரி அல் மாலிக்கை கண்காணிக்கிறது.

ஈரான் மற்றும் சிரியாவிலான அமெரிக்க போர்த் திட்டங்கள் ஈராக்கின் ஆரம்ப குற்றத்தில் இருந்து பாய்கின்றது. ஈராக்கில் ஒரு ஷியைட் ஆட்சியை இருத்தியது வட்டார சமபல நிலையை ஈரான் பக்கம் அதிகம் கொடுத்துள்ளது என்னும் கவலை யில் அமெரிக்கா, பேர்சிய வளைகுடா முடியரசுகளும் வலதுசாரி சுன்னி சக்திகளும் அல்நுஸ்ரா தலைமையில் சிரியாவிற்கு ஒரு முக்கிய ஈரானிய →

வீடியோ பதிவுகளை இணையத்தளத்தில் பகிர்ந்து கொள்ளும் தளமான யூ டியூப் கட்டண தொலைக்காட்சி சேவைகளை அளிக்கும் சேவைகளை முதல் முறையைத் துவங்கியுள்ளது அதிகம் பார்க்கப்படும் இணைய தளங்களில் ஒன்றாக இருக்கும் யூ டியூப், 30 கட்டண தொலைக்காட்சி சேவைகளை முதலில் தரவுள்ளது. இவற்றுக்கான கட்டணம் சேனலைப் பொறுத்து. 99 சதங்களிலிருந்து இருந்து 8 டொலர் வரையிருக்கும்.சில விளையாட்டுச் சேனல்களும், குழந்தைகளுக்கான நிகழ்ச்சியை தயாரிக்கும் ஒரு அமைப்பும் தங்களின் படைப்புகளை யூ டியூப்பில் கொடுக்கப்போவதாக ஏற்கனவே கூறியுள்ளன.

சில சேனல்களுக்கு ஒரு டொலருக்கும் குறைவான கட்டணமே நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இந்தக் கட்டணத்தைக் கூட எத்தனை பேர் கொடுப்பார்கள் என்று ஆய்வாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். எது எப்படியோ, இதுவரை காலமும் தொலைக்காட்சிக்கு முன்னால் உட்கார்ந்து நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கும் பெண்கள் இனிமேல் கணினிக்கு முன்னால் உட்கார்ந்தும் கண்ணீர் வடிக்கலாம்...!

## You Tube மூலமும் நாடகம் பார்க்கலாம்!



# கணினிக்கும் வருகிறது S.M.S




இலவச அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்திகள் போன்றவற்றினை ஸ்மார்ட் கைபேசிகளினூடாக அனுப்பும் சேவையினை வழங்கிவந்த Viber நிறுவனமானது தற்போது குறித்த அப்பிளிக்கேஷனை Desktop கணினிகளிலும் நிறுவிப் பயன்படுத்தக்கூடியதான பதிப்பை அறிமுகப்படுத்துகின்றது.

இம்மாதம் வெளியிடப்படவுள்ள Viber Desktop App 3.0 எனும் இப்புதிய பதிப்பின் மூலம் மொபைல் சாதனங்களிலிருந்து டெக்ஸ்டொப் கணினிகளுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பக்கூடியதாகவும், ஒரே கணக்கினை டெக்ஸ்டொப், மற்றும் மொபைல் சாதனங்களில் பயன்படுத்தும்போது ஏதாவது ஒரு சாதனத்திற்கு அனுப்பப்பட்ட செய்தியினை மற்றைய சாதனத்தில் படிக்கக்கூடியதாகவும், ஒரு சாதனத்தில் குறுஞ்செய்தி அழிக்கப்படும்போது மற்றைய சாதனத்திலிருந்தும் அழிந்துபோகக்கூடிய வகையிலும் இப்புதிய பதிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம்





## குழந்தைகளின் கற்றலுக்கு Leap Reader பேனா

குழந்தைகள் இலகுவாக எழுதவும், வாசிக்கவும் உதவி புரியக்கூடியதான Leap Reader எனும் இலத்திரனியல் சாதனத்தை Leap Frog நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்மூலம் புத்தகங்களிலுள்ள சொற்களை தொடும்போது அவற்றினை வாசித்து ஒலியெழுப்பக் கூடியவாறு காணப்படுவதுடன் ஒரு நூலகத்தினைப் போன்று சுமார் 150 வரையான வாசிப்பு செயற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

நான்கு வயது தொடக்கம் எட்டு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு மிகவும் பயன்படக்கூடிய இவ் இலத்திரனியல் சாதனத்தின் பெறுமதியானது 50 அமெரிக்க டொலர்கள் மட்டுமே ஆகும்.

## கறுப்பு தக்காளி... நீல வாழைப்பழம்!



ஆச்சரியப்பட வேண்டாம். இன்னும் சில நாட்களில் நமது கடை வீதிகளில், நீலநிற அப்பிள், வெள்ளை நிற மாங்காய், பச்சை நிற ஒரேஞ்சு என கலர்கலராக பழங்களைப் பார்க்கலாம். இங்கிலாந்தின் நோட்டிங்கொம் நகர விஞ்ஞானிகள் சிலர், பழங்களின் நிறம், மணம், ருசி போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் மரபணுக்களைக் கண்டுபிடித்துவிட்டனர்.

பழங்களைப் பயன்படுத்தி நோய்களைத் தடுப்பது எப்படி என கடந்த 13 ஆண்டுகளாக அவர்கள் நடத்திவந்த இடையறாத ஆராய்ச்சிக்குப் பலன் கிடைத்துள்ளது. டயட்டில் இருப்பவர்களின் வசதிக்காக பழங்களிலுள்ள சத்தைக் கூட்டவும், குறைக்கவும் முடியும் என்பதும் இந்த ஆராய்ச்சியில் உறுதியாகி இருக்கிறது.

உதாரணமாக, சத்து மிகுந்த வாழைப்பழம் நீரிழிவு நோயாளிகளுக்கு ஆபத்தையே விளைவிக்கும். எனவே, வாழைப்பழத்தின் மரபணுக்களை மாற்றியமைத்து அதில் உள்ள குளுக்கோஸ் அளவைக் குறைத்துவிட்டால், அது எல்லோரும் சாப்பிடும்படியான ஆரோக்கியப் பழமாக மாறிவிடும். பழங்களின் நிற அணுக்களை மாற்றி அமைப்பதன்மூலம் சில வகை புற்றுநோய் அபாயங்களையும் தடுக்கமுடியுமாம். இப்படி மாற்றி அமைக்கும் பழங்களின் நிறமும் மாறிவிடுமாம். எனவே இன்னும் சில வருடங்களில் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு கலர் கலராக மருந்து, மாத்திரைகள் எழுதித் தருவதற்கு பதிலாக கலர் கலர் பழங்களைக் கொடுக்கப் போகிறார்கள்!


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## காலம் கடத்தாதே!

பஞ்ச பாண்டவர்கள் முக்கியமான ஆலோசனை ஒன்றில் ஈடுபட்டிருந்தார்கள். அப்போது அதிதி ஒருவர் அங்கே வந்தார். தருமரைப் பார்த்து தர்மம் கேட்டார்.

ஆலோசனையில் மும்முரமாக இருந்த தருமர் முன்பின் யோசிக்காமல், "நாளை வாருங்கள்... தருகிறேன்..." என்று கூறினார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த தம்பி பீமன் சட்டென்று எழுந்தார்.

தனதருகில் இருந்த முரசைப் படபடவென்று அடித்தார்.

"இப்போது ஏன் முரசைக் கொட்டுகிறாய்?" என்று தருமர் கேட்டார்.

"அண்ணா, காலத்தை நீங்கள் வென்றுவிட்டீர்கள்... அந்த வெற்றியைக் கொண்டாடத்தான் முரசு கொட்டுகிறேன்" என்றார் பீமன்.

"என்ன, காலத்தை நான் வென்றுவிட்டேனா? என்ன சொல்கிறாய் நீ..?" என்று கேட்டார் தருமர்.

"அண்ணா, தங்களிடம் தர்மம் கேட்டுவந்த அதிதியிடம், 'நாளை வா..' என்று கூறினீர்களே..! அப்படியென்றால் நாளைவரை உயிருடன் இருப்போம் என்னும் உறுதி உங்கள் மனதில் உண்டாகிவிட்டதல்லவா! இது காலத்தை வென்றதற்கு அறிகுறியல்லவா?" என்றார் பீமன். தவறை உணர்ந்த தருமர், உடனே அந்த அதிதியை அழைத்து வரச்செய்து அவருக்கு வேண்டிய தானதருமங்களைச் செய்தார்.



எந்த நல்ல காரியத்தையும் நாள், நட்சத்திரம் பார்த்துத் தள்ளிப் போடுவதைக் காட்டிலும் அன்றே செய்து முடிப்பதுதான் நற்பலனைத் தரும்.



## மேகங்கள்

**சில** மேகங்கள் கறுத்தும் சில வெள்ளையாகவும் காணப்படுகிறதே. ஏன் தெரியுமா?

வெள்ளை மேகங்களைப் பற்றி ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்திருக்கும். நீர் நிலைகளிலிருந்து நீராவி ஆகாயத்தில் உயர்ந்து மேகங்கள் உருவாகின்றன. மேகங்களில் உள்ள நீர்த்துகள்களில் சூரிய வெளிச்சம்பட்டு மேகம் வெள்ளையாக நமக்குத் தோற்றம் அளிக்கிறது.

இனி, கருமேகங்களைக் குறித்துப் பார்க்கலாம். கறுத்து அடர்த்தியாகக் காணப்படும் மேகம் என்பது பல மேகங்களின் அடுக்கு. கறுத்த மேகங்களுக்குப் பின்னால் (அல்லது நம் கண்ணுக்குத் தெரியும் விதத்தில் கறுத்த மேகங்களுக்கு மேலே என்று கூறலாம்), பல கிலோமீற்றர் அளவுக்கு மேகங்கள் இருக்கக்கூடும். அத்தனை பருமனான மேகக்கூட்டத்தின் இடையே சூரிய ஒளி புகுந்துவர சாத்தியமில்லை என்பதால் மேகம் கறுப்பாகத் தோற்றம் அளிக்கிறது. அதாவது பூமியிலிருந்து காணும்போது கறுப்பாகத் தோன்றுகிறது. ஆனால் நீங்கள் ஒரு விமானத்தில் அமர்ந்து விண்ணில் பறந்துகொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். மேகங்களுக்கு இடையில் நீங்கள் பறக்கும் போது அவை வெள்ளை நிறம் கொண்டதாக இருப்பதை நீங்கள் பார்க்கலாம். சுருக்கமாகச் சொன்னால், பருமன் குறைந்த மேகம் வெள்ளை நிறத்தில் காணப்படுகிறது. பருமன் கூடிய மேக அடுக்குக் கறுப்பாகத் தோற்றம் அளிக்கிறது.

## வாரம் ஒரு திருக்குறள்



குறிப்பறிதல்

**கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக்கு அணி.**

ஒருவர் சொல்லாமலே அவருடைய முகத்தை நோக்கி, அவர் கருதிய குறிப்பை அறிகின்றவன் எப்போதும் உலகத்திற்கு ஓர் அணிகலன் ஆவான். குறள்:701



## தங்க வேட்டை

தங்கம் எப்போதுமே பெரும் மதிப்புள்ள பொருளாக இருந்துள்ளது. பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்த விலையைவிட இன்று அதன் விலை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. இயற்கையிலிருந்து தங்கத்தை எடுக்கும் செலவும் நான்கு மடங்குக்கு மேல் அதிகரித்துவிட்டது.

வெறும் அலங்காரமாகக் கழுத்திலும் காதிலும் தொங்கிக் கொண்டிருப்பதோடு மருத்துவ தொழில் நுட்பம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் அதற்கு உபயோகம் உண்டு. சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் தங்கம் தவிர புதிய இடங்களிலும் விஞ்ஞானிகள் அதைத் தேடி வருகிறார்கள்.

பூமிக்கு அடியில் தேடுவது மட்டுமல்லாமல், கடலுக்கு அடியிலும் மலைச் சிகரங்களிலும் தங்கத் துகள்களை சுரண்டியெடுக்க ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

நாம் உபயோகம் தீர்ந்ததென்று தூக்கி எறியும் எலக்ட்ரோனிக் சாதனங்களில் உள்ள தங்கத்தைச் சுரண்டி, தங்கம் எடுப்பது ஒரு முறை. நாளுக்கு நாள் மலை மலையாகக் குவிந்துவரும் எலக்ட்ரோனிக் குப்பை தங்கம் கிடைக்கும் ஒரு முக்கிய இடமாகி விட்டது. மொபைல் போன், கம்பியூட்டர் போன்ற ஒவ்வொரு எலக்ட்ரோனிக் சாதனத்திலும் பயன்படுத்தப் பட்ட மிகச் சிறிய அளவு தங்கத்தை எடுத்தாலே கணிசமான அளவு கிடைக்கிறது.

தங்க வேட்டையில் இப்போது தீவிரமாக நடப்பது - நுண்ணுயிரிலிருந்து தங்கம் எடுப்பதுதான். இதில் சில விஞ்ஞானிகள் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். சாதாரண உயிரினங்கள் இருக்கவே முடியாத சுரங்கங்கள் போன்ற கடுமையான சூழலில் வாழும் நுண்ணுயிரிகளுக்கும் தங்கம் உருவாவதற்கும் தொடர்பு இருக்கிறதா? என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். சில வகை நுண்ணுயிர்களைத் தங்க குளோரைடில் சேர்த்தால் அவற்றின் உடலிலிருந்து நானோ துகள் அளவு தங்கம் வெளியேறுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கடல் நீரில் உள்ள தங்கக் குளோரைடிலிருந்து தங்கம் எடுக்கும் முறைகளை இந்திய விஞ்ஞானிகள் ஆராய்ந்துவருகிறார்கள். தங்கத்தை வெளியேற்றும் நுண்ணுயிர்களைத் தேடும் பணி படுதீவிரமாக நடக்கிறது. இதற்காகக் கடலுக்கு அடியில் வாழும் நுண்ணுயிர்களைப் பற்றிய ஆராய்ச்சி நடக்கிறது. தங்கத்தை வெளியேற்றும் திறனுள்ள பதினைந்து வகை நுண்ணுயிர்களை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

## விடுகதைகள்

1. மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல, பட்டை தீட்டியிருப்பான் சாமியார் அல்ல - அவன் யார்?
2. கறுத்த ரோஜா மொட்டு, கனத்த மேகம் கண்டு கணத்தில் இதழ் விரித்திடும், காத்திடும் பின் சாய்ந்திடும் - அது என்ன?
3. நெஞ்சிலே ஒரு கல், வீட்டிலே ஒரு கல், வானத்திலே ஒரு கல் - அவை எவை?
4. பார்த்தவர் இருவர், எடுத்தவர் ஐவர், உண்டவரோ ஒருவர் - அவர்கள் யார்?
5. வாயிலிருந்து நூல் போடுவான், மந்திர வாதியும் இல்லை. கிளைக்குக் கிளை தாவுவான் குரங்கும் இல்லை, வலைவிரித்துப் பதுங்கியிருப்பான் வேடனும் இல்லை - அவன் யார்?
6. ஊளையிட்டாலும் ஊரைச் சுமந்து செல்வான் - அவன் யார்?
7. கல்லிலே காய்க்கும் பூ, காய்ந்தால் மலரும் பூ, பூவிலே இது வெள்ளைப்பூ. - என்ன பூ?
8. எண்ணெய் இல்லை, திரியும் இல்லை, ஏற்றி வைக்க ஆளும் இல்லை. ஆனாலும் தெரியுது வெளிச்சம். - அது எது?

விடைகள்:
1. அணில் 2. குடை
3. விக்கல், உப்புக்கல், கருக்கல்.
4. கண்கள், விரல்கள், நாக்கு.
5. சிலந்தி. 6. ரயில்
7. சுண்ணாம்பு. 8. சூரியன்

## குவாக் குவாக் வாத்து...




குவாக் குவாக் வாத்துபார்
குட்டை யான வாத்துபார்
குளத்து நீரில் நீந்திடும்
குவாக் குவாக் வாத்துபார்!

பட்டை யான அலகுபார்
பூச்சி பிடிக்கும் அழகுபார்
தட்டை யான கால்களால்
தத்தி நடக்கும் வாத்துபார்!

சேற்று நீரில் பூச்சியை
சேறும் கலந்து பிடிக்குதே
சேற்றை முற்றும் நீக்கியே
பூச்சி மட்டும் உண்ணுதே!

நல்ல தொன்றை எங்கணும்
நாடும் போதில் நாமுமே
வல்ல வாத்தைப் போலவே
வகை பிரிக்கப் பழகுவோம்!

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்




**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 04.06.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 993**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 991**

ற.கனிஸ்ரன், நவாலி வடக்கு,
மானிப்பாய்.

பரிசுக்குரியவர்: 991

பாராட்டுக்குரியவர்கள்

01. யூ.வர்ஷிக்கா மிலேனியா, தோணிக்கல், வவுனியா.
02. சி.மதனிகா, முள்ளியவளை, முல்லைத்தீவு.
03. எம்.எம்.ரம்ஷியா, அண்ணல் வீதி, மாஞ்சோலைச்சேனை
04. கௌ.பெவன், ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
05. கே.தனஞ்சயன், சென்.லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை.
07. கு.அபிசாலினி, கோவில் வீதி, மன்னார்.
08. கா.பிரிந்தன், பிரதான வீதி, வவுனியா.

**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**158**

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



"பூலான்தேவியின் பெயரைக் கெடுக்க நினைக்கும் எவருக்கும் இதுதான் கதி!" என்று அட்டை ஒன்றில் எழுதிப்போட்டனர்.

இரண்டு நாட்களுக்குள் அந்த செய்தி எங்கும் பரவியது. பூலானின் பெயரைப் பயன்படுத்தி இருந்த வேறு சில கொள்ளைக் கோஷ்டிகளும் இருந்தன.

பதினொரு பேர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அறிந்ததும் அந்தக் கோஷ்டிகள் பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டன.

பொலிசாரின் தேடுதல்களும் தொடர்ந்தவண்ணமிருந்தன. அதனால் மறுபடி பூலான் தன் ஆட்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டியிருந்தது.

சிலருக்கு போதிய பணம் கொடுத்து ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்ளும்படி அனுப்பிவைத்தாள். "தேவைப்படும் போது அழைப்பேன். அப்போது வந்தால்போதும்!" என்று கூறியனுப்பினாள்.

மீராவும் பூலானுடன்தான் தங்கியிருந்தாள். அவள் காதலனான பல்வான் சிங் கல்கத்தாவுக்குச் சென்றிருந்தான்.

ஒரு நாள் நடு இரவில் பூலானுக்குத் தூக்கம் கலைந்துவிட்டது. எழுந்து தண்ணீர் குடிக்கச் செல்கையில் அந்த வித்தியாசமான ஓசை கேட்டது.

பூனைபோல நடந்து சென்று ஓசை வந்த பக்கம் கவனித்தாள்.

அங்கே மீராவும், மணிராமும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டிருந்தனர். மீராவின் கழுத்தையும், கழுத்துக்குக் கீழேயும் மணிராம் தன் கைகளால் வருடிக்கொண்டிருக்க, மீரா தலையை மல்லாத்தி கண்களை மூடிக்கொண்டிருந்தாள். பூலானை அவர்கள் கவனிக்கவில்லை.

மீரா அவனது கழுத்தை வளைத்துத் தன் கழுத்துக்குக் கீழே அவன் முகத்தை அழுத்த, பூலான் அதற்கு மேல் தாமதியாமல் விலகிப்போனாள்.

அவன் பலாத்காரம் செய்யவில்லை. செய்திருந்தால் அந்த இடத்திலேயே சுட்டுப்போட்டு இருப்பாள்.

மீராவும் இணைந்து நடக்கும் தப்பு இது. ஒரே வழி மீராவை பல்வான் சிங் இருக்கும் இடத்துக்கு அனுப்பிவைப்பதுதான் என்று பூலான் முடிவு செய்தாள்.

அதனைப் பெரிதாக்கினால், பல்வான் சிங் மணிராமை கொல்லத் துடிப்பான். பிரச்சினைதான் மிஞ்சும். அதனால் மான்சிங்கூட, தான் கண்ட காட்சியைப் பூலான் சொல்லவில்லை.

மறுநாளே மீராவைத் தன் ஆட்களில் ஒருவனுடன் கல்கத்தாவுக்கு அனுப்பிவைத்தாள் பூலான்.

மீராவும், மணிராமும் தங்களுக்குள் இரகசியமாகப் பார்த்துக் கொண்டதையும், அந்தப் பார்வைக்குள் மறைந்திருந்த சோகத்தை யும் பூலான் மட்டும்தான் கவனித்தாள்.

மீரா புறப்பட்டுச் சென்ற சில மணி நேரங்களுக்குள் பாபாவின் ஆள் ஒருத்தன் பரபரப்போடு அங்கு வந்து சேர்ந்தான்.

அவன் மிகக் களைத்திருந்தான். மிகப் பயந்திருந்தான். மிக மூச்சிரைத்தான்.

அவனைப் பார்த்ததும் ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது என்று பூலானுக்கு உள்ளுணர்வு உறுத்தியது.

பூலானைக் கண்டதும் அவன் ஓடிப்போய் அவள் காலில் விழுந்தான். வாய்விட்டு அழத் தொடங்கிவிட்டான்.

மான்சிங் உட்பட அனைவரும் கூடிவிட்டனர். மான்சிங் அவனைத் தோளில் தட்டி, "என்ன, என்ன நடந்துவிட்டது. ஏன் இப்படி...?"

"ஐயோ... இனி என்ன நடக்க வேண்டியிருக்கிறது?" என்று தலையில் அடித்துப் புலம்பினான்.

எல்லோரும் பொறுமை இழந்துவிட்டனர். மான்சிங் அதட்டலான குரலில், "சொல்லப்பா, என்ன பிரச்சினை?"

அவன் சென்ன பதிலில் பூலான் உட்பட அனைவருமே உடைந்தனர். உறைந்து போயினர்.

அவன் சொன்ன செய்தியை தாங்கள் தப்பாக விளங்கிக் கொண்டுவிட்டோமோ என்று நினைத்தனர்.

மான்சிங், "நீ என்னடா சொல்கிறாய்?" என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினான்.

அவன் பீறிட்ட அழுகையை அடக்க முடியாமலும், பதில் சொல்லாமலும் தலையில் அடித்துக்கொண்டே இருந்தான்.

பூலானுக்கு மயக்கமே வந்துவிடும் போலருந்தது. தானே அவனிடம் சென்று "என்ன நடந்தது என்று சொல்லப்பா!" என்ற போது அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

"ஐயோ... பாபா... பாபாவைக் கொன்றுவிட்டார்களம்மா!"

பூலானுக்கு தலை சுழன்றது. தன் உணர்ச்சிகளை மறைக்க மிகக் கஷடப்பட்டாள்.

"பாபா, பாபா முஸ்தக்குவீம். கண் நிறைய காட்சிதரும் மனிதர். அவர் எம்மை விட்டுப் போய் விட்டாரா?"

பூலானால் நம்ப முடியவில்லை. விக்ரம்மல்லா இல்லாமல்போக, பூலானை மறுபடி மனுஷியாக்கி, தலைவியாக்கிய மனிதர் பாபா.

கொள்ளைக் கோஷ்டிகளுக்குள்ளும் நியாயமான கொள்ளைக்காரன் என்று பொலிசாரால்கூட பாராட்டப்பட்டவர் பாபா முஸ்தக்குவீம்.

அவர் ஒரு மல்யுத்த வீரர். பின்னர்தான் படிப்படியாக கொள்ளைக்காரனாக மாறினார். 1979 இல் பொலிஸ்காரன் ஒருவனை கொலை செய்த சம்பவத்தில் பாபாவை தீவிரமாகத் தேடினார்கள்.

அதன்பின்னர் பொலிசாருக்கு தண்ணிக் காட்டிக்கொண்டு பெரிய கொள்ளைக் கோஷ்டியை நடத்தத் தொடங்கினார்.

என்னதான் கொள்ளையடித்தாலும் ஏழை எளியவர்களிடம் ஒரு சதம்கூட எடுக்கக் கூடாது என்பது பாபாவின் கண்டிப்பான கட்டளை. பெண்களிடம் வாலாட்டினாலும் கடும் தண்டனைதான். சொன்ன வாக்கை பாபா மீறுவதில்லை என்பது பிரசித்தம்.

மான்சிங் தளர்ந்துபோய் நின்றதை அன்றுதான் பூலான் பார்த்தாள். அப்படியே மடங்கித் தரையில் அமர்ந்துவிட்டான்.

அவன் கண்களில் இருந்து பொலபொலவென்று கண்ணீர் கொட்டியது.

யாரை யார் ஆறுதல்படுத்துவது என்று தெரியவில்லை. அனைவரும் கலங்கிப் போய்நின்றனர்.

விக்ரம் மல்லாவை இழந்த சோகத்தின் பின்னர் பூலான் கதிகலங்கியது பாபாவின் இழப்பை எண்ணித்தான்.

சோகத்தில் இருந்து மீள சில நாட்கள் தேவைப்பட்டது. பாபாவுக்கு முஸ்லிம் என்றொரு சகோதரன் இருந்தான்.

மல்கான் சிங்கின் குழுவில்தான் முஸ்லிம் இருந்தான். தனது சகோதரன் கொல்லப்பட்டதும் முஸ்லீம் துடித்துப் போனான்.

தாஸ்தாம்பூர் என்ற கிராமத்தில் தான் பாபா கொல்லப்பட்டார். அந்தக் கிராமத்தின் ஊடாக பாபாவும் அவர் குழுவினரும் சென்றபோது தான் பொலிசார் சுற்றிவளைத்துத் தாக்கினார்கள்.

இறுதிவரை சரணடையாமல் சண்டையிட்ட பாபாவும் அவர் ஆட்கள் ஐந்துபேரும் கொல்லப்பட்டனர். ஏனையோர் பொலிசாரால் கைது செய்யப்படடனர்.

தாஸ்தாம்பூர் மக்கள்தான் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனர். பாபா குழுவினரைத் தாக்க ஒத்தாசை புரிந்தனர் என்று முஸ்லிம் விபரம் அறிந்தான்.

பழிக்குப் பழிவாங்க மல்கான் சிங்கின் உதவியைக் கேட்டான் முஸ்லிம். அவன் மறுத்துவிட்டான்.

அதனால் மல்கான் சிங்கை விட்டு விலகிய முஸ்லிம், பூலான் கோஷ்டியை தேடிப் பிடித்து சந்தித்தான்.

முஸ்லிம் கூறிய தகவல்களைக் கேட்ட பூலானும், மான்சிங்கும் கொதித்தனர். "தாஸ்தாம்பூர் கிராமத்தைத் தரைமட்டமாக்க வேண்டும்!" என்று கறுவினாள் பூலான்.


தாஸ்தாம்பூர் கிராமத்துக்கு பாபாவின் கூட்டணிகளால் ஆபத்து ஏற்படலாம் என்பதால் கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

பாபாவைக் கொல்ல உதவியவர்களுக்கு பொலிசார் வெகுமதிகளையும் வழங்கியிருந்தனர்.

பொலிசாரையும் தாக்கி கிராமத்தையும் தாக்க ஆட்கள் போதாது. அதனால் பொலிஸ் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்படும் வரை காத்திருப்பது என்று முடிவு செய்தனர்.

**திருப்பங்கள் தொடரும்...**

# PDF
## பைல்கள் பற்றிய சிறுவிளக்கம்




இணையத்தில் ஏதேனும் ஒரு தளத்திலிருந்து, பி.டி.எப். பைல் ஒன்றை தரவிறக்கம் செய்திடுகையில் குரோம் பிரவுசர், இந்த பைல் உங்கள் கணினியைக் கெடுக்கும் இதனைத் தக்கவைக்கவா? அல்லது இறக்குவதை நிராகரிக்கட்டுமா? என்று கேட்கிறது. மற்ற பிரவுசர்கள் இந்த கேள்வியைக் கேட்பதில்லை. குரோம் மட்டும் ஏன் கேட்கிறது? உண்மையிலேயே பி.டி.எப். பைல்கள் கணினியைக் கெடுக்குமா? சற்றுவிரிவாக இங்கு பார்க்கலாம்.

முதலில் பி.டி.எப். பைல் என்பது, டெக்ஸ்ட் மற்றும் இமேஜ் கொண்ட ஒரு பைல் மட்டுமே. இது எப்படி கணினியைக் கெடுக்கும் அளவிற்கு அபாயத்தன்மை கொண்டதாக இருக்க முடியும்? என்ற கேள்வியும் இங்கு எழுகிறது.

ஆனால், இந்தக் கேள்வி பொருளற்றது என்று இதனைச் சற்று ஆய்வு செய்திடுகையில் தெரிகிறது. அதனை இங்கு காணலாம்.

கடந்த சில ஆண்டுகளாகவே, பி.டி.எப். பைல்களைப் படிக்க நாம் பயன்படுத்தும் அடொப் ரீடர் போன்ற புரோகிராம்கள், இணையத்தில் வைரஸ்கள் எளிதாகத் தாக்குவதற்கான நிலையில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், பி.டி.எப். பைல்கள் வெறும் டெக்ஸ்ட் மற்றும் இமேஜ் மட்டும் கொண்டதல்ல.

ஸ்கிரிப்ட், பதிக்கப்பட்ட இமேஜ் மற்றும் சில கேள்விக்குரியவைகளும் இதில் அடங்கியுள்ளன. பி.டி.எப். பைல் வடிவத்தில் பல குழப்பமான படிமங்களில் விடயங்கள் அடுக்கப்பட்டு கிடைக்கின்றன.

இப்படி அடைக்கப்படும் பல விடயங்கள், வைரஸ்களை அனுப்பும் ஹேக்கர்களுக்கு, விஷமத்தனமான செயற்பாடுகளை மேற்கொள்ள இடம் அளிக்கின்றன. இவற்றில் எவை ஹேக்கர்களுக்குச் சாதகமான சூழ்நிலையை அமைக்கின்றன என்று பார்க்கலாம்.

**1. ஜாவா ஸ்கிரிப்ட் (Java Script)**

பி.டி.எப். பைல்களில் ஜாவா ஸ்கிரிப்ட் இடம்பெறலாம். இந்த மொழியைத்தான் வெப் பிரவுசர்களில் பயன்படுத்துகின்றனர். எனவே, அடோப் ரீடர் வழியாக, ஹேக்கர்கள் இதனைப் பயன்படுத்தி தங்கள் விஷமத்தன வேலைகளை மேற்கொள்கின்றனர்.

மேலும், அடொப் ரீடர், அடொப் தொகுப்பிற்கான ஸ்பெஷல் ஜாவா ஸ்கிரிப்டைப் பயன்படுத்துகிறது. இது பாதுகாப்பாற்றது எனப் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

**2. பதிக்கப்பட்ட ப்ளாஷ் (Embedded Flash)**

பி.டி.எப். பைல்களில், பதிக்கப்பட்ட ப்ளாஷ் விடயங்கள் இடம் பெறலாம். 2012 ஏப்ரல் வரை, அடொப் அதனுடைய ப்ளாஷ் பிளேயரையே பயன்படுத்தி வந்தது. பொதுவாக ப்ளாஷ் பிளேயரில் காணப்படும் பிழைகள் அப்படியே இங்கும் இருப்பதால் ஹேக்கர்கள் இதனையும் பயன்படுத்துகின்றனர்.

தற்போது, பி.டி.எப். ரீடர்கள், பைலில் உள்ள ப்ளாஷ் பிளேயரைப் பயன்படுத்தாமல், கணினிகளில் உள்ள ப்ளாஷ் பிளேயரையே பயன்படுத்தி வருகின்றன.

**3. நேரடியான செயற்பாடு:**

பி.டி.எப். பைல்களில், ஏதேனும் ஒரு செயற்பாட்டினை மேற்கொள்ள கட்டளை இருந்தால் வாடிக்கையாளருக்கு ஒரு பொப் அப் விண்டோவில் தகவல் தந்துவிட்டு, முந்தைய அடொப் பி.டி.எப். ரீடர் உடனடியாக அதனை இயக்கும்வகையில் செயற்படும். இப்போதைய அடொப் ரீடரில், பி.டி.எப். பைல்கள் இயக்கக் கூடாத இ.எக்ஸ்.இ. பைல்கள் பட்டியல் ஒன்று இணைக்கப்பட்டு, அவை நேரடியாக இயங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

**4. உள்ளாக ஒரு பி.டி.எப். (GoToE):**

பி.டி.எப். பைல்களுக்குள்ளாக ஒரு பி.டி.எப். பைல் இருக்கலாம். இது சுருக்கப்பட்டு பதிக்கப்பட்டிருக்கும். ஹேக்கர்கள், இந்த உள்ளாகப் பதிக்கப்பட்ட பி.டி.எப். பைல்களில் தங்கள் வைரஸ் குறியீடுகளைப் பதிந்துவைக்கலாம். ஆன்ட்டி வைரஸ் தொகுப்புகள், உள்ளாக உள்ள பி.டி.எப். பைல்களைப் படிக்காமல் விட்டுவிடும் சூழ்நிலை ஏற்படுகிறது.

**5. மீடியா கண்ட்ரோல்கள்:**

ப்ளாஷ் மட்டுமின்றி, பி.டி.எப். பைல்களில், மீடியா பிளேயர், ரியல் பிளேயர் மற்றும் குயிக் டைம் மீடியா ஆகியவையும் பதிக்கப்பட்டிருக்கலாம். இந்த பிளேயர்களில் உள்ள குறைகளும், ஹேக்கர்கள் பயன்படுத்த இடம்தருகின்றன.

மேலே சொல்லப்பட்ட குறைகள் இருந்தாலும், இப்போது அடொப் ரீடர், பல நிலைகளில் பாதுகாப்பினை அமைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. பி.டி.எப். பைல்கள், பாதுகாப்பு வளையத்திற்குள்ளாகவே இயக்கப்படுகின்றன.

இவை, கம்பியூட்டரின் சில பிரிவுகளை மட்டுமே தொடர்பு கொள்கின்றன. ஒப்பரேட்டிங் சிஸ்டம் முழுவதையும் பயன்படுத்துவதில்லை. எனவே அஞ்சத் தேவையில்லை என அடொப் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கு மாறாக, பல தர்ட் பார்ட்டி பி.டி.எப். ரீடர்கள், இணையத்தில் இலவசமாகக் கிடைக்கின்றன. இவை, அனைத்து இயக்க வசதிகளையும் கொண்டிருப்பதில்லை.

எனவே, தேவையில்லாமல், பிழை உள்ளவற்றைத் திறந்து வைரஸ்களை அனுமதிப்பதில்லை. இருப்பினும், பி.டி.எப். பைல்கள் விடயத்தில் சற்று ஜாக்கிரதையாக இருப்பதே நல்லது.









## ஆன்மீகத்துக்கு மாறும் சிம்பு

நடிகர் சிம்பு ஆன்மீகத்துக்கு மாறுகிறார். ஏற்கனவே காதல் சர்ச்சைகளில் பரப்பரப்பாக பேசப்பட்டார். தனுசுடன் மோதல், சக நடிகர்கள் பற்றி தன் படங்களில் வசனம் வைத்து கேலி செய்தல் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டார். ஆனால் சமீப காலங்களில் சிம்புவிடம் நிறைய மாற்றங்கள் தெரிவதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். படங்களில் கூட இமேஜ் பார்க்காமல் நடிக்கிறார். பேச்சிலும் மென்மையை கடைப்பிடிக்கிறார். அத்துடன் ஆன்மீக செயற்பாடுகளிலும் ஈடுபட தொடங்கி உள்ளார்.

சிம்புவுக்கு பிடித்த உணவாக இருப்பது அசைவம். அந்த உணவு வகைகளை தற்போது சாப்பிடுவதை தவிர்க்கிறார். நட்சத்திர ஓட்டல்களில் நடக்கும் விருந்துகள் விழாக்களில் பங்கேற்பதையும் நிறுத்தி உள்ளார். நண்பர்களுடன் சுற்றுவதையும் குறைத்துக் கொண்டார். அடிக்கடி தனியாக கண்களை மூடி பத்மாசனத்தில் உட்கார்ந்து தியானம் செய்கிறார். சிம்பு தற்போது வாலு, வேட்டை மன்னன் என இரு படங்களில் நடிக்கிறார்.

## ஜோதிகா சொல்லே மந்திரம்!

'காக்க காக்க', 'வாரணம் ஆயிரம்' போன்ற படங்களைக் கொடுத்த கூட்டணியான கௌதம் மேனன் - சூர்யா இருவரும் இணையும் 'துருவ நட்சத்திரம்' படத்தின் படப்பிடிப்பு படுஜோராக தொடங்கி இருக்கிறது. சூர்யாவுடன் யாரரெல்லாம் நடிக்கிறார்கள் என்பது இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்க இருக்கிறார் என்பதினை மட்டுமே அறிவித்து இருக்கிறார்கள்.


இப்படத்தின் முதல் நாள் படப்பிடிப்பில் முதல் காட்சியிலே சூர்யாவை அசரடிக்கும் வகையில் ஒரு காட்சியை படமாக்கினார் கௌதம் மேனன். உடனே சூர்யா "இந்தப் படம் கண்டிப்பாக பெரியளவில் பேசப்படும். உங்களுடைய பிரச்சினையில் இருந்து விரைவில் மீண்டுவிடுவீர்கள்" என்று கௌதம்மேனனிடம் தெரிவித்தாராம்.

லிங்குசாமி, கௌதம் மேனன் இருவருமே சூர்யாவின் திகதிகளுக்கு போட்டியிட்டு வந்த நிலையில், கௌதம்மேனனுக்கு திகதி கள் ஒதுக்குமாறு கூறினாராம் ஜோதிகா. மனைவி சொல்லே மந்திரம் என அடுத்த நொடியே திகதிகள் ஒதுக்கிக் கொடுத்துவிட்டாராம். அதனால் லிங்குசாமி படப்பிடிப்பு தள்ளிப் போய் இருக்கிறது. எப்போதுமே சூர்யாவின் படப்பிடிப்பு தளத்திற்கு செல்லாத ஜோதிகா, முதல்முறையாக 'துருவ நட்சத்திரம்' படப்பிடிப்பு தளத்திற்கும் சென்று வந்திருக்கிறார்.

## சித்த

சயந்தாவுக்கும், சித்
தார்த்துக்கும்
காதல் மலர்ந்
துள்ளது.
இவரும்
காளகஸ்தி
கோவிலுக்கு
ஜோடியாக
சென்று சமீபத்தில்
வழிபட்டனர். ராகு-கேது
பூஜையில் ஈடுபட்டார்கள்.
அவர்களுடன்
பெற்றோரும்
கலந்து





## ரெய்னாவிற்கு விருந்து படைக்கிறார் ஸ்ருதிஹாச

கிரிக்கெட் வீரர் ரெய்னாவும், நடிகை ஸ்ருதிஹாசனும் நெருங்கிப் பழகுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நடிகர் கமல்ஹாசனின் மூத்த மகளான ஸ்ருதிஹாசன், ஏழாம் அறிவு படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானார். அதன் பின்பு தனுஷுடன் இணைந்து 3 என்கிற படத்தில் மட்டும் நடித்தார். இந்தப் படம் சரியாக போகாததால் அவருக்கு தமிழில் மேலும் வாய்ப்புகள் எதுவும் அமையவில்லை.

இதைத் தொடர்ந்து தெலுங்கில் கவனம் செலுத்திய ஸ்ருதிக்கு கைமேல் பலன் கிடைத்தது. அங்கு பிஸியான நடிகையாகிவிட்டார். இருப்பினும், ஸ்ருதிஹாசனை தேடி நாள்தோறும் புதிது புதிதான கிசுகிசுக்கள் வெ கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே தெலுங்கு நடி சித்தார்த்துடன் இணைந்து பேசப்பட்ட இவர், த கிரிக்கெட் வீரர் ரெய்னாவுடன் கிசுகிசுக்கப்படுகி அதாவது கிரிக்கெட் வீரர் ரெய்னாவும் ஸ்ருதியும் பழகுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கி அணிக்காக விளையாடிவரும் ரெய்னா அண்மை சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கு எதிராக நடந் ஒன்றில் 52 பந்தில் 99 ரன்கள் எடுத்து அசத்தி போட்டியை ஸ்ருதிஹாசனும் நேரில் பார்த்து ரெ உற்சாகப்படுத்தினார். அதோடு இருவரும் நட்சத் ஓட்டல்களில் ஒன்றாக விருந்து சாப்பிடுவதாகவு தகவல்கள் வெளியாகி வருகின்றன

## நயன்தாராவிற்கு மச்சம்

இரண்டாவது இன்னிங்சில் களமிறங்கிய, சிம்ரன், தேவயானி போன்ற நடிகைகளே தோற்றுவிட்ட நிலையில் மீண்டும் முதல் ரவுண்டை போலவே தற்போதும் பிசியாக நடித்துவருகிறார் நயன்தாரா. தமிழில் 'வலை', 'ராஜாராணி' உள்ளிட்ட படங்களில் நடித்துவரும் அவர், தற்போது வித்யா பாலன் நடித்த, 'கஹானி' படத்தின் தமிழ் தெலுங்கு ரீ-மேக்கில் நடித்துவருகிறார். ஹரி இயக்கும், 'அருவா' படத்திலும் நயன்தாரா தான் ஹீரோயினாம். 'ஐயா' படத்துக்காக, கேரளாவில் இருந்து நயன்தாராவை தமிழுக்கு அழைத்துவந்ததே ஹரிதான். அதனால் அவரே தன்னை மீண்டும் அழைத்திருப்பதால் புதிய உற்சாகத்தில் இருக்கிறார் நயன்தாரா.


## சந்தானத்திடம் நொந்து நூடுல்ஸ் ஆன ஹ

ஆர்யா- சந்தானம் இணைந்து நடித்தால், அப்படத்தில் நாயகிகளை கலாய்ந்து ஒரு வழியாக்கிவிடுவார்களாம். ச இவர்கள் கூட்டணியில் ஹன்சிகா- அஞ்சலியும் இணைந்து வெளிவந்த படம் சேட்டை. இப்படத்தில் நடித்தபோது நெ நூடுல்ஸ் ஆனவர்தான் ஹன்சிகா. ஆனால் ஆர்யாவுடன் ஹன்சிகாவை கலாய்த்த சந்தானம், தீயா வேலை செய்ய குமாரு படத்திற்காக சித்தார்த் - ஹன்சிகாவுடன் இணைந்து நடித்தபோது, அவரை எந்நேரமும் புகழ்ந்து பேசிக்கொண்டிரு

மேலும் ஸ்பொட்டில் அனைவரும் ஹன்சிகாவை சின் என்று சொல்ல, சந்தானமோ, என் பார்வைக்கு அவர் ஏஞ் ஜோலி போல் காட்சி தருகிறார் என்று புகழ்ந்தாராம்



நினைத்தது யாரோ



தேசிங்கு ராஜா

## ார்த்துடன் திருமணமா?

கொண்டார்கள். அப்போதுதான் இரகசியமாக வைத்திருந்த இவர்களின் காதல் வெளிச்சத்துக்கு வந்தது. கடந்த வாரம் சென்னையில் நடந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் சித்தார்த்தும் சமந்தாவும் பங்கேற்றனர்.

சித்தார்த் மேடையில் ஏறி "என்னவளே அடி என்னவளே எந்தன் இதயத்தை தொலைத்துவிட்டேன்" என்று சமந்தாவை நோக்கிப் பாடினார். கூட்டத்தினர் கரகோஷம் எழுப்பினர். இருவரும் விரைவில் திருமணம் செய்துகொள்ள திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியானது.

இத்தனைக்கும் பிறகு சமந்தா மறுத்துள்ளார்.

டுவிட்டரில் இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: நான் திருமணம் செய்துகொள்ள இருப்பதாக வதந்திகள் பரவியுள்ளன. சினிமாவில் நிறைய வேலை இருக்கிறது. பிசியாக நடித்துக்கொண்டு இருக்கிறேன். எனவே இந்த வதந்திகளை நிறுத்தும்படி வேண்டுகிறேன். தெலுங்கில் மூன்று படங்களில் நடிக்கிறேன். லிங்குசாமி இயக்கும் படத்தில் சூர்யா ஜோடியாக நடிக்கிறேன்.

## ஜாக்கெட் அணியாத இனியா

வாகை சூடவா நாயகி இனியா நடித்து திரைக்கு வரவுள்ள படம் 'மாசாணி' இப்படத்தில் ஜாக்கெட் அணியாமல் நடிக்கிறார் இனியா. இதே வேடத்தில் லட்சுமிராயை நடிக்கக் கேட்டபோது மறுத்துவிட்டார்.

இது குறித்து பட இயக்குனர் எல். ஜி.ஆர் கூறுகையில், உயர் ஜாதி வாலிபனுக்கும், தாழ்ந்த இன பெண்ணுக்கும் காதல் மலர்கிறது. ஜாதி வெறி பிடித்த வாலிபனின் அண்ணி இந்த காதலை எதிர்க்கிறார். இந்நிலையில் தாழ்ந்த இன பெண் கர்ப்பமடைகிறாள். கோபம் அடைந்த அண்ணி இருவரையும் தீர்த்துக்கட்டுகிறார். கொல்லப்பட்டவர்கள் ஆவியாக வந்து பழிவாங்குகின்றனர். 10 வருடத்துக்கும் மேலாக நடிக்காமல் ஒதுங்கி இருந்த ராம்கி இதில் மீண்டும் நாயகனாக ரீ என்ட்ரி ஆகிறார். காதலியாக இனியா நடிக்கிறார்.

கதைப்படி நாயகி ஜாக்கெட் அணியக்கூடாது. இதில் நடிப்பதற்காக லட்சுமிராயிடம் கேட்டேன். ஜாக்கெட் அணியாமல் நடிக்கவேண்டும் என்றதும் அவர் மறுத்துவிட்டார்.

பின்னர் இனியாவிடம் கூறியபோது கதாபாத்திரத்தின் முக்கியத்துவத்தை ஏற்று ஜாக்கெட் அணியாமல் நடிக்க ஒப்புக்கொண்டார் என்றும் ரோஜா, சரத்பாபு, மனோபாலா, சிட்டிபாபு உட்பட பலர் நடிக்கின்றனர் எனவும் கூறினார்.



நான்தான் டா



ன்

யாகிக்
ர்
போது
ார்.
நெருங்கிப்

ளல்
பில்
ஆட்டம்
ார். அந்த
பினாவை
திர

ன்சிகா

நடிக்கும்
பத்தில்
நடித்து
ந்து
சர்ந்து.
ணும்

ந்தாராம்.
குஷ்பூ
லினா

## பொரிந்தார் தமன்னா

சினிமாவில் நிறைய கற்றுக்கொண்டேன். முன்பெல்லாம் என் படங்கள் ஓடாமல் போனால் வருத்தப்படுவேன். இப்போது அது இல்லை. ஒரு படத்தை முடித்ததும் அதை மறந்துவிட்டு அடுத்த படத்துக்கு தயாராகி விடுகிறேன். ஒவ்வொரு படத்திலும் நான் நடித்த காட்சிகள் நிறைய இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவேன். பெரிய கமர்ஷியல் படங்களில் 5, 6 சீன்களில் வந்தால்கூட சந்தோஷம்தான்.

இந்தியில் நடிக்கிறேன். இதனால் தென் இந்திய மொழி படங்களில் இனி நடிக்கமாட்டேன் என்று கருதவேண்டாம். தமிழ், தெலுங்கு படங்களில் தொடர்ந்து நடிப்பேன். என்னை வளர்த்துவிட்டது தென் இந்திய மொழி படங்கள்தான். விருதுகளை நினைத்து படங்களில் நடிப்பது இல்லை. விருது கிடைத்தால் சந்தோஷம்தான். சினிமாவில் போட்டி இருப்பது சகஜம்தான். ஆனால் பொறாமை இருக்கக்கூடாது.

என்னை இன்னொரு ஸ்ரீதேவி என்கிறார்கள். இதை கேட்பதற்கு சந்தோஷமாக இருக்கிறது. ஸ்ரீதேவி சிறந்த நடிகை அவர் மாதிரி யாரும் நடிக்க முடியாது. ஸ்ரீதேவியுடன் என்னை ஒப்பிட்டு பேசுவது பெருமையாக உள்ளது. நான் சம்பளம் அதிகம் கேட்பதாக வதந்தி பரப்புகின்றனர். என் தகுதிக்கு தேவையான பணத்தைத்தான் வாங்குகிறேன்.

ஆபாசமாக நடிக்கமாட்டேன். ஐதராபாத் பிரியாணி, மீன் குழம்பு போன்றவற்றை விரும்பி சாப்பிடுவேன். தமிழ்நாட்டில் சாம்பார் இட்லி ரொம்பப் பிடிக்கும். இப்படியெல்லாம் பொரிந்து தள்ளியிருக்கிறார் தமன்னா.

# தேன் கிண்ணம்



## அன்புத் தாயே..!

என்ன தான் பாக்கியம்
செய்தேனோ தெரியவில்லை தாயே
உன் வயிற்றில்
நான் மகனாக பிறக்க..!

இவ்வுலகமே எனக்கு
பரிசாய் கிடைத்தாலும் - அது
உனக்கு ஈடாகுமோ
உன் கருணைக்குத்தான்
பெறுமதி சேர்த்திடுமோ தாயே!...

உன்னை என் ஆயுள்
முழுவதும் விழிகளுக்குள்
வைத்து பூஜித்தாலும்
பத்து திங்கள் - நீ
என்னை சுமந்திட்ட
வலிக்குத்தான் ஈடாகுமோ - தாயே!

கண்ணீரால் நான் உனக்கு
கவி வடித்திட்டாலும் - அது
நீ சிந்திட்ட ஒரு துளி
உதிரத்திற்கேனும் ஈடாகுமோ தாயே!

எம்.யூ.அல்சாத்.
ஓட்டமாவடி.

## தாரமாகிறாய் நீ

எண்ணங்களில் நீயில்லை என
தினம் தினம் பொய்யதனை
சொல்லுகின்ற போதினிலும்
உன் நினைவுகள் தொலைத்து
என்னால் வாழ முடியவில்லை

சின்னதாக அரும்பிடும்
உன் மேலான நேசம் அதை
காதல் என்று
சொல்லிவிடவும் முடியவில்லை
களங்கமிலா நட்புதான் என்று
நம்பிடவும் முடியவில்லை.

எப்போதும் இல்லாமல்
இப்போதான் நீ
அழகாய்த் தெரிகின்றாய்
அதிகமாகவே என்னை
அழவும் வைக்கின்றாய்

அதனால் தான் என்னவோ
இரவு வானில்
வெண்ணிலவாய்
ஒளிவீசிய உனை
விரட்டிவிட்டு
இருட்டுக்குள்
வாழ்வதற்கு
பிரயத்தனப்படுகின்றேன்
நான்.

இ.ஷா.
யாழ்ப்பாணம்.



## பாலியல் வன்கொடுமை



பிஞ்சு உள்ளங்கள்
பஞ்சு மெத்தையில்
படுத்துறங்கும் வேளையிலும்
பாடசாலையென பல இடங்களில்
பாழாய்ப்போன பாவிகளின்
பாலியல் வன்கொடுமை.
பாடாய்ப்படுத்துகிறது இன்று
பச்சிளம் பாலகரும்...
பருவக் கன்னியரும்...
பாட்டிமாரும் கூட...
பாரினில் படும் பாடு...
பாவம் இப்பருவத்தினர்.
பலரும் ஒன்றுசேர்ந்தால்
பாலியல் வன்கொடுமை என்ன
பாழ்பட்ட பலதையும் ஒழிக்கலாம்.

அலாவுடீன் A.L.A.VAH,
திருகோணமலை.

## ஈழத்துக் கவிஞர்கள்

### சக்தி. அ.பாலஜயா



சக்தி. அ. பாலஜயா (பிறப்பு சூலை 26, 1925) இலங்கையில் மத்திய மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்த கவிஞர், ஓவியர், பல்கலைகளிலும் ஆற்றல் வாய்ந்த கலைஞர், சிறந்த மொழிபெயர்ப்பாளர். தனிவழிக் கவிராயர், மலையரசன், லக்ஷ்மி எனும் புனைபெயர்களைக் கொண்டுள்ளார்.

மலையகத்தில் விஸ்வநாதர், இலக்குமி அம்மை தம்பதியினரின் புதல்வராக நுவரெலியா மாவட்டத்தில் பிறந்த பாலஜயா தனது படிப்பை முடித்துக் கொண்டபின் ஓர் ஓவியராகவே தனது வாழ்வைத் தொடங்கினார். ஒரு வர்த்தக ஓவியராக தொழிலை மேற்கொண்ட இவர் ஒரு சில நூல்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் அட்டைப்பட ஓவியங்கள் வரைந்துள்ளார்.

தனது பத்தாவது வயதிலேயே 'பாரதியின் தாக்கம்' என்னும் தலைப்பில் தனது முதல் கவிதையை எழுதினார். பத்து வயதிலேயே பாட்டெழுதத் தொடங்கினாலும் அதை அவர் ஏனோ தொடரவில்லை. 1949 இக்குப் பின் எழுத்துத்துறையில் கூடிய ஆர்வம் செலுத்திய இவருடைய கவிதைகளும், கட்டுரை இத்தியாதி எழுத்துக்களும் வீரகேசரி, தினகரன், சுதந்திரன், ஈழநாடு போன்ற ஏடுகளில் அடிக்கடி பிரசுரம் பெற்றன. கல்கி மற்றும் சி.என். அண்ணாத்துரை அவர்களின் திராவிட நாடு போன்ற தமிழக ஏடுகளிலும் சக்தியின் எழுத்துக்கள் இடம்பெற்றன.

சி. வி. வேலுப்பிள்ளைக்கு பரவலான அறிமுகத்தினையும் ஏகோபித்த புகழையும் கொடுத்த 'In Ceylons Tea Gardens' எனும் ஆங்கிலக் கவிதை நூலை 'தேயிலைத் தோட்டத்திலே' என்று தமிழாக்கித் தந்தவர் இவர். இந்தத் தமிழாக்கம் வீரகேசரியில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. பிறகு செய்தி ரா. மு. நாகலிங்கம் அவர்களால் செய்தி பதிப்பகம் மூலம் நூலாக வெளியிடப்பட்டது. (ஆங்கில மூலம் 1954– மொழிபெயர்ப்பு 1969)

#### எழுதியுள்ள நூல்கள்

மனோதத்துவமும் கலையும் போதனா முறையும், 1952
சொந்த நாட்டிலே - தேசிய கீத நூல், 1956
தேயிலைத் தோட்டத்திலே - மொழிபெயர்ப்புக் கவிதை நூல், 1969
சக்தீ பாலஜயா கவிதைகள் - துரை வெளியீடு, 1998

#### பெற்ற விருதுகள்

கவிச்சுடர் (அரசாங்கம்) 1987.
தமிழ் ஒளி 1993.
மூதறிஞர் விருது
(இலங்கை கம்பன் கழகம்) 1998
கலாபூஷணம் (அரச விருது) 1999
ஆதாரம்

## எதிர்காலத்திலாவது!

புழுதிப் பால் குடித்தும்
புகை மண்டலத்தை சுவாசித்தும்
வெப்பத்தால் குளித்தும்
உப்பு நீரால்
உடல் துடைத்தும்
உலகில் வாழும்
உன்னத மனிதர்கள்.



முழு உலகில் வாழும்
காலம் முழுவதும் - இவர்கள்
மேனி சுமக்கும்
வேதனைகள் பல...
வாதிட்டு கேட்டாலும்
வேதன(ம்) உயர்வில்லாமல்
கண்ணீருக்குள் அவாவும்
இருட்டடிப்பில் வாழ்வுமாய்
மரணித்து வாழ்ந்துகொண்டிருக்கும்
மனித சமூகம் இது!

தொழிலாளர் துன்பத்தில்
முதலாளி இன்பத்தில் இருந்தாலும்
இரு சமூகமும்
இணை பிரியாதவர்கள்,
கொடுக்கல் வாங்கல்களில் அல்ல!
மனிதன் எனும்
மாமிச உருவத்தில் மட்டும்,
முதலாளிமார்கள்
மகா முதலாளியாய் மாறுகிறான்
தொழிலாளிகள்
சுரண்டப்படும் கூலியாளியாகவே
இருக்கின்றான், இது தான்
இவர்களுக்குள் வேறுபாடு!

காலம் கன்னத்தில் கை வைத்து
வானம் போல் அழுகிறது
தொழிலாளிகளை நினைத்து...
காலம்காலமாய் காலம் கூறும்
கதை இது என்பதால்!

சுரண்டல்கள் நிறுத்தப்பட வேண்டும்
சொட்டும் குறை இல்லாத கொடுப்பனவு
கொடுக்கப்பட வேண்டும்...
எதிர்காலமாவது
எந்த பாகுபாடும் இல்லாமல்
மனிதன் மனிதனாக இருப்பதைக் கண்டு
மனம் மகிழ வேண்டும்!

A.பாரிஸ்,
மிகிந்தலை.



# பாலியல் தவறுகள் நடப்பது ஏன்..?



பாலியல் குற்றங்கள் ஏற்பட, பெண்கள் மட்டுமே காரணம் என்றும், பெண்கள் கவர்ச்சியைக் குறைத்துக் கொண்டால், ஆண்கள் திருந்திவிடுவர் என்ற அர்த்தத்தில் ஒரு கருத்து சில தரப்புக்களினால் முன்வைக்கப்படுகின்றது.

அந்தக் கருத்தில் ஒரளவு உண்மையிருந்தாலும், அது முற்றிலும் ஏற்புடையதல்ல. காரணம், இன்று பாலியல் கொடுமைக்கு ஆளாகும் பெண்கள், கவர்ச்சி உடை அணிந்து செல்லும் கல்லூரி மாணவியர் மட்டுமல்ல, கள்ளங்கபடமற்ற 3 முதல் 10 வயது வரை உள்ள அப்பாவி சிறுமியரும் இடம்பெறுகின்றனர்.

தன்னொழுக்கம், சுய கட்டுப்பாடு, மனிதாபிமானம் இந்த மூன்றையும் இழக்கும் ஒரு மனிதன், பாலியல் குற்றத்தில் ஈடுபடுகிறான். அவனுக்கு வயதோ, கவர்ச்சியோ ஒரு பொருட்டல்ல. அதேசமயம், இன்றைய பாலியல் பிரச்சினைகளுக்கு நாகரிகம் என்ற பெயரில், பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கலாசாரச் சீரழிவும் ஒரு காரணம்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இன்று, பெண்களை ஒரு போதைப்பொருளாகவே சித்தரிக்கும், சினிமாப் பாடல்கள் மற்றும் சாதாரண டூத் பேஸ்ட், பிளேடு, ஷேவிங் கிரீம், சொக்லேட் குளிர்பானங்களின் விளம்பரங்களுக்கெல்லாம், பெண்களைத் தவறாகப் பயன்படுத்தும் தொலைக்காட்சிகள், இதுபோன்றே இளைஞர்களின் மனதைத் திசை திருப்பும் ஊடகங்களுக்கும் இதில் முக்கிய பங்கு இருக்கிறது.

தங்கள் உரிமைக்காகப் போராடும் எந்த பெண்கள் இயக்கமாவது தங்களை இழிவுபடுத்தும் இம்மாதிரி செயல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்ததுண்டா? சினிமாக்களுக்கு முறையான தணிக்கை, குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை, வழக்கு விசாரணையில் விரைவான தீர்ப்பு, அத்தோடு பெண்கள் அதிநவீன நாகரிகத்துக்கு அடிமையாகாமல், தங்களைக் காத்துக்கொள்வது ஆகியவை, பாலியல் குற்றங்களை வெகுவாகக் குறைக்க உதவும்.

# மாம்பழம்



**தித்திப்பு** நிறைந்த மாங்கனி, முக்கனிகளில் முதன்மையானது. 600 வகைகள் இருக்கும் மாம்பழத்தில் முக்கியமான 40 ரகங்கள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் விளைகின்றன.

மாம்பழம் 'கடவுளின் கனி' என்று வேதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இனிய சுவையுடன் உள்ள இக்கனியில், பலவித சத்துக்களும் அடங்கியுள்ளன.

### விற்றமின்களும், தாதுப்பொருட்களும்

- மாம்பழத்தில் விற்றமின் A.B.C ஆகிய உயிர்ச்சத்துக்களும் இரும்பு, கல்சியம், பொஸ்பரஸ் போன்ற தாதுப்பொருட்களும் உள்ளன.
- மாம்பழத்தை சாப்பிடுவதன் மூலம் நோய் எதிர்ப்புசக்தி அதிகரிக்கிறது. இரத்தத்தை சுத்திகரிக்கும் சக்தி உருவாகிறது. உடல் வலுவிற்கு மாம்பழம் மிகவும் ஏற்றது.
- மாம்பழம் மூளைக்கும் உடலுக்கும் வலுவைக் கொடுக்கவல்லது.
- பொதுவாக ஆண், பெண் இருபாலாருக்கும் நரம்புத் தளர்ச்சியை நீக்கும் தன்மை கொண்டது.
- மலச்சிக்கலை போக்கும், மலச்சிக்கல் உள்ளவர்கள் மாம்பழத்தை இரவில் படுக்கும்முன் தொடந்து சில நாட்கள் சாப்பிட்டுவர பூரண குணமடைவார்கள்.
- ஆண்களுக்கு வீரியத்தைக் கொடுக்கவல்லது மாம்பழம்.
- மாலைக்கண் நோய் கோளாறுக்கும், பற்கள் தொடர்புடைய நோய்களுக்கும் மாம்பழம் கை கண்ட மருந்தாகும்.
- மேனியில் சுருக்க முள்ளவர்கள் மாம்பழத்தை சாப்பிட்டுவந்தால் மேனியில் உள்ள சுருக்கம் நீங்கும், தோல் பளபளப்பாகும்.
- உடல் பலவீனம், கை, கால் நடுக்கம், மயக்கம் போன்ற தொல்லைகளால் அவதியுறுவோர் காலை வேளையில் வெறும் வயிற்றில் மாம்பழத்தைச் சாப்பிடவேண்டும்.

### பெண்களுக்கு ஏற்ற கனி

- ஒழுங்கற்ற மாதவிடாய் உள்ளவர்கள் மாம்பழத்தை சாப்பிடுவதால் மாதவிடாய் ஒழுங்குபடும்.
- கருவுற்றிருக்கும் தாய்மார்கள் மாம்பழத்தை சாப்பிட்டால் பிறக்கும் குழந்தை ஊட்டச்சத்துடன் இருக்கும்.
- மாம்பழம் அதிக உஷ்ணம் கொண்டது. எனவே அளவிற்கு அதிகமாக சாப்பிடுவது ஆபத்தில் முடியும். மாதவிலக்கு சமயத்தில் பெண்கள் சாப்பிட்டால் உதிரப்போக்கு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

### உண்பதற்கேற்ற மாம்பழங்கள்

நன்றாகக் கனிந்த பழங்களைச் சாப்பிடுவதே சிறந்தது. கனியாத பழங்களையோ, வெம்பிய பழங்களையோ சாப்பிடுவதால் காய்ச்சல் தலைவலி, இருமல், வாந்தி, மலச்சிக்கல் போன்ற நோய்களன்றி மேலும் பல நோய்களும் உண்டாகும்.

உணவு சாப்பிடுவதற்கு முன் மாம்பழத்தை சாப்பிடக் கூடாது. அப்படி சாப்பிடுவதால் அது பசியை அடக்கிவிடும். அதனால் உணவுடனோ அல்லது சாப்பிட்ட பின்போ மாம்பழத்தை சாப்பிடுவதே நல்லது.

Dr.A கௌரி, C.R.R.I

# அம்மை நோய்

**அம்மை நோயை** நம் முன்னோர்கள் 'வைசூரி' என்று பெயரிட்டு அழைத்தனர். ஏன் இந்தப் பெயர்? சித்தர்களில் முதன்மைச் சித்தரான அகத்திய மாமுனி வைசூரிக்கு என்று தனிநூல் படைத்துள்ளார். "அம்மைக்கு மருந்துண்டோ?" என்று கேட்கும் வைத்திய உலகத்திற்கு அந்தக் காலத்திலேயே மருந்துகள் பல உண்டு என்று கூறியுள்ளார்.

### அம்மை நோயின் வகைகள்

அம்மை நோயில் 14 வகை உள்ளதாக வைத்திய நூல்கள் கூறுகின்றன. அவற்றில் நம் நாட்டில் அதிகம் காணப்படுவது சிறியம்மை, தட்டம்மை, புட்டாளம்மை, பனைமுகரி என்பவையே. அம்மை ஒரு தொற்றுநோயாகும். இது எளிதில் பரவும் நோய்களில் ஒன்றாகும். இந்தப் பரவலை தடுக்கவே அம்மை தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகிறது. இருப்பினும் கோடை ஆரம்பித்தவுடன் அம்மை நோய் மக்களைப் பாதிக்கிறது.

### சித்தர்கள் கூற்றுப்படி அம்மை நோய் எவ்வாறு தோன்றுகின்றது?

பூமியில் எழும் வெப்பமானது உடலைத் தாககுகிறது. இது உடலில் வெப்பத்தை அதிகப்படுத்தி மூலத்திலும், மூளையிலும், எலும்பிலும் கொதிப்பேறி மனநிலையைக் கெடுத்து, உடலில் பித்தத்தை அதிக அளவில் எழச்செய்கிறது. அதிகளவில் தன்னிலை பிறழ்ந்த பித்தம் உடலில் உள்ள தாதுக்களில் வெப்பத்தை உண்டாக்குகிறது. அது உடலைத் தாக்கும்போது எலும்புக்கு உள்ளிருக்கும் கொழுப்பைக் கொதிப்படையச் செய்கிறது. இது பின் எலும்பை ஊடுருவிப் பாய்ந்து கபத்தை அதிகப்படுத்தி வெளியில் விசிறி நீர்க் கொப்பளங்களைப் பிறப்பித்துச் சீழ் கொள்ளச் செய்து அம்மை என்ற தனது உருவை வெளிப்படுத்துகிறது.

மேலும், உடலில் இரும்புச்சத்து குறைபாட்டாலும், இரத்த அழற்றி ஏற்படுவதாலும் அம்மை நோய் தாக்குகிறது.



### அம்மை நோயின் அறிகுறிகள்

திடீரெனச் காய்ச்சல் உண்டாகும், உடல் வலி, தலைவலி, தலைக்கனம், இடுப்பு வலி, உடம்பெல்லாம் எரிதல், கண் சிவத்தல், மூக்கில் நீர் வடிதல், வாந்தி, மலம் தடைப்படுதல் போன்ற அறிகுறிகளுக்குப் பின் அம்மை கொப்பளங்கள் தோன்ற ஆரம்பிக்கும்.

### அம்மை நோய் வராதிருக்க...

உடலுக்கு குளிர்ச்சிதரும் உணவுகள் மற்றும் மருந்துகள் உண்பதன்மூலம் ஓரளவிற்கு அம்மை நோயை தடுக்கலாம்.

இளநீர், நுங்கு, பதநீர் போன்றவற்றை வெயில் காலங்களில் பருகிவந்தால் அம்மைநோய் வருவதை தவிர்க்கலாம்.

பழங்காலத்தில் கோடை காலங்களில் குழந்தைகளுக்கு கரும்பட்டி பணியாரம் செய்து கொடுப்பது வழக்கம். அதிக வெப்பத்தை எதிர்கொள்ளவும், உடல் சூட்டைத் தணிக்கவும், இது போன்ற உணவு வகைகள் உதவின.

அம்மை வந்தவருடன் ஒரே அறையில் தங்குவதை தவிர்க்கலாம். அம்மை வந்தவர்கள் உபயோகித்த பொருட்களை தொடாமல் இருக்கலாம்.

### அம்மை காய்ச்சலுக்கு மருந்து



எலுமிச்சை வேர்பட்டை, சீந்தில் தண்டு, பற்படாகம், விலாமிச்சை வேர், ஏலக்காய், சந்தனம், கோரைக்கிழங்கு இவற்றை சம அளவு எடுத்து இடித்து பொடித்து சூரணமாக்கவும். இந்த சூரணத்தில் 20 கிராம் எடுத்து 200 மில்லிலீற்றர் தண்ணீரில் கொதிக்க வைத்து பின் 50 மில்லிலீற்றர் சுண்டியபின் எடுத்து வடித்து, ஆற வைத்து ஒருவேளைக்கு உபயோகப்படுத்தலாம். காய்ச்சல் இருக்கும் இரண்டு, மூன்று நாட்களுக்கு இந்த சூரண கசாயத்தை காலை, மாலை என இரு வேளை உபயோகிக்கலாம்.

### அம்மை நோய்க்கு வேப்பிலையின் மகத்துவம்

வேப்பிலைக் கொழுந்து, அதிமதுரம் இரண்டும் சம அளவு எடுத்து நீர்விட்டு அரைத்து பக்குவமாக சிறு அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவேண்டும். இதனை அம்மை வந்தவர்களுக்கு மூன்று வேளை கொடுக்க அம்மையின் வெம்மையும் தாக்கமும் குறையும். மேலும் வேப்பிலை கொழுந்தை அம்மை கண்டவர்களின் அருகில் போட்டுவைக்க நோய் வன்மை பெறாது.

அதேபோல் அம்மை கண்டு, அது இறங்கும் நேரத்தில் தலைக்கு நீர் ஊற்றவேண்டிய நேரத்தில், தலைக்கு ஊற்ற உள்ள நீரில் வேப்பிலையை உருவிப்போட்டு அத்தண்ணீர் சூரிய வெப்பத்தில் காய்ந்த பிறகு தலைக்கு ஊற்றுவதால் அம்மைக் கொப்பளம் சுருக்கமடைந்து விரைவில் ஆறும்.

சீரகம், சோம்பு, சிறிய வெங்காயம், நன்னாரி வேர், ராமிச்ச வேர் ஆகியவற்றை தலா 5 கிராம் எடுத்து தண்ணீர்விட்டு கொதிக்க வைத்து கசாயம் செய்து ஒரு நாளைக்கு இரு வேளை குடித்துவர அம்மை நோய் விரைவில் குணமடையும்.

### அம்மைப் புண் ஆற...


வேப்பிலை கசாயம் கொண்டு ரணங்களை அலம்புவதால் விரைவில் அம்மைப் புண்கள் ஆறும். சிவப்பு (இரத்த) சந்தனத்தை உரைத்து அம்மைப் புண் மீது தடவுவதால் புண் ஆறுவதுடன் அதனால் ஏற்படும் தழும்புகள் மாறும். வேப்பிலையுடன் மஞ்சள் சேர்த்து மெழுகுப் பதத்திற்கு அரைத்து புண்களின் மேல் தடவினால் விரைவில் அம்மைப் புண் ஆறும்.



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடிஸ் ஸ்பெஷல்

## வீட்டில் தனியாக இருக்கிறீர்களா?



இப்போதெல்லாம் பட்டப் பகலிலே வீட்டுக்குள் புகுந்து, பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடித்துச் சென்று விடுகின்றனர் கொள்ளைக் காரர்கள். கொள்ளை அடிப்ப தோடு நின்றுவிடாமல், கொலை யும் அல்லவா செய்கின்றனர்

சின்னச் சின்ன திருட்டுக் களில் தொடங்கி, திட்டமிட்டு செய்யப்படும் கொள்ளைவரை அனைத்துமே பெரும்பாலும் வீட்டில் பெண்கள் தனியாக இருக்கும் நேரங்களிலோ, வீடு பூட்டியிருக்கும் நேரங்களிலோ நடப்பவைதான்! அதற்காக வீட்டுக்கொரு காவலாளியை வேலைக்கு வைக்க முடியாது தான்.

ஆனால், நம் வீட்டில் உள்ள விலையுயர்ந்த பொருட் களையும், விலைமதிக்க முடி யாத நம் குடும்பத்தவரின் உயி ரையும் பாதுகாக்க வேறு சில சாதனங்களை உபயோகிக்க முடியுமே... அப்படி என்னவெல் லாம் சாதனங்கள் கடைகளில் கிடைக்கின்றன. ஒவ்வொன் றாகப் பார்க்கலாமா?

கதவில் பொருத்தப்படும், 'லென்சின்' லேட்டஸ்ட் வடிவம் தான், 'வீடியோ டோர் போன்' இதன்மூலம், கதவுக்கு வெளியே இருக்கும் நபரை வீட்டினுள் இருந்தபடியே பார்க்கலாம். இதில், இருக்கும், 'ஸ்பீக்கர் போன்' மூலம் அந்த நபரிடம் பேசலாம்.

கதவின் உட்புறம் தாழ்ப் பாள் போடும் இடத்தில் பொருத்த மூடும் ஜட்டம், மெக்னடிக் சென்சர்! இதைப் பொருத்திவிட்டால், கதவு லேசாக திறந்தாலும், அலாரம் அடிக்கும். வீட்டின் மேற்கூரை யில், ஏழு அடி உயரத்தில், 'மோஷன் சென்சர்' என்ற உப கரணத்தைப் பொருத்திவிட்டால், இதன் எல்லைக்குள் யாராவது, குறுக்கிடும்போது அலாரம் அடிக் கும். தேவையான நேரங்களில் மட்டும் இதை, 'ஒன்' செய்து கொள்ள முடிவது இதன் சிறப்பு!

அடுத்தது, 'பிங்கர் பிரின்ட் லொக்!' இதை கதவில் பொருத்திவிட்டால், இதில் உள்ள சென்சரில் கட்டை விரலை வைத்து, நாலு இலக்க பாஸ் வேர்டை தந்தால்தான் கதவு திறக்கும். இதில், 120 ரேகைகள் வரை பதிவு செய்துகொள்ளலாம்.

நாம் வீட்டுக்கு வெளியே இருந்தாலும், வீட்டில் நடக்கிற எல்லா நிகழ்வுகளையும் கேமரா வுடன் இணைந்த, 'கிளியர் சர்க்யூட் டி.வி' மூலம் பதிவு செய்யும் வசதி தற்போது வந்துவிட்டது. நாம் வெளியூரில் இருந்தால் சிறப்புக் கட்டணம் செலுத்தி, இன்டர்நெட் மூலம் வீட்டைப் பார்க்கமுடியும்.

ஆனால், அலாரமை மட்டும் நம்பினால் போதாது. வீட்டில் தனியாக இருக்கும் பெண்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில விஷயங்கள்...

வெளிக்கதவில் கண்டிப்பாக லென்ஸ் பொருத்துங்கள். மரக் கதவுக்கு முன்னால் ஒரு இரும்புக் கதவும் அமையுங்கள்.

முன்பின் அறிமுகமில்லாதவர் தண்ணீர் கேட்டால், தண்ணீர் எடுப்பதற்காக கதவைத் திறந்து வைத்துவிட்டு, வீட்டின் உள்ளே செல்லவே கூடாது.

ஏதேனும் அவசரத்தில் மறந்து போய், கதவைத் திறந்து வைத்து விட்டு பக்கத்தில் எங்காவது சென்றுவந்தால், வீட்டில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா, யாராவது இருக்கிறார்களா என்று பார்த்த பிறகே கதவை மூடவேண்டும்.

மின்சாரப் பொருட்களை திருத்தம் செய்பவர்கள், 'கேபிள், 'டிவி' திருத்துபவர்கள் என்ற பெயரில் யாராவது, 'உங்கள் கணவர் அல்லது மகன் அனுப்பி னார்...' என்றுவந்தால், கதவை திறக்காமலேயே, 'பிறகு வாருங் கள்' என்று சொல்லி அனுப்பி விடுங்கள்.

வீட்டுக்கு தொலைபேசி அழைப்பு வந்தால் சத்தமாக பேசக்கூடாது.

வெளியிடங்களுக்கு செல்லும் போது, புதிய நபர்களிடம் உங்க ளைப் பற்றிய விவரங்களை சொல்லவே கூடாது.

எப்போதும் வீட்டு வேலைக் காரர்கள் மற்றும் டிரைவர்களின் புகைப்படம், அவர்களின் உற வினர்களின் முகவரியை கைவசம் வைத்திருப்பது நல்லது. வெளியூர் செல்லும்போது, அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு தகவல் கொடுத்துவிட்டு செல்வதே பாது காப்பானது. இத்தனையையும் தாண்டி, திருடர்கள் நுழைந்து விட்டால், அவர்களை பார்த்து கூச்சல் போடக்கூடாது. ஏனென்றால், அவர்கள் நம்மை தாக்கலாம். அதனால், மயக்க மாகிவிட்டது போல, நடித்து, பின் அவர்கள் கவனம் சிதறும்போது வெளியே தப்பி வந்து சப்தம் போடலாம். நமக்கு எதுவும் நேராது என்ற நம்பிக்கை இருந் தாலும், கவனத்துடன் இருப்பது நல்லதுதானே தோழிகளே!

## இளநரைத் தொல்லை இருக்கிறதா?




விற்றமின், ஏ.டி., சத்து நிறைந்த உணவுகளை, அதிகம் சாப்பிடுங்கள். மாமிச உணவுகளான, ஈரல், மீன் எண்ணெய், பால், வெண்ணெய் போன்றவற்றில், அவை அதிகம் உள்ளன. அதிகமான மன நெருக்கடி, பதற்றம் அடைந்தாலும், முடி நரைக்கும். பதற்றம் குறைப்பது நல்லது. முடிந்த அளவு, தலைக்கு 'டை' உபயோகிப்பதை தவிர்த்துவிடுங்கள்.


வெந்தயத்தை இரவே ஊற வைத்து, மறுநாள் அரைத்து தலை யில் தடவி, ஊறிய பின் குளித்தால், கூந்தல் பளபளப்பாக இருக்கும்.

நனைந்த முடியை, சின்ன சீப்புக்க ளால் சீவாதீர்கள். பெரிய பற்கள் உள்ள சீப்பை பயன்படுத்துங்கள். இருபது நாட்களுக்கு ஒரு முறை, முடியின் கீழ் பகுதியை அளவாக கத்தரித்துவிட்டால், நுனிப்பகுதி முடி முறிந்து போவதைத் தடுக்கலாம்.

## சுடிதார் தைக்கும் முறை

01.துணியை நான்காக மடித்து போட்டு படம் 1-ல் உள்ள அளவுப்படி வரைந்து வெட்டவும்.
2. துணியை நான்காக மடித்துப் போட்டு படம் 2-ல் உள்ள அளவுப்படி வரைந்து வெட்டவும்.








**முன்பக்கம்: (படம் 3)**

1. கழுத்திற்கு பீஸ் துணி வைத்து உட்புறம் மடித்து தைக்கவும்.
2. Open/Slit இருபக்கமும் ஓரம் மடித்து தைக்கவும்.
3. கீழே ஓரம் மடித்து தைக்கவும்.

**பின்பக்கம்: (படம் 4)**

1. முன்பக்கம் போல் பின்பக்கமும் தைக்கவும்.
2. கை ஓரம் மடித்து தைக்கவும்.
3. முன்பக்கம், பின்பக்கம் இரண்டையும் தோள்பட்டையில் சேர்த்து தைக்கவும்.
4. கை பகுதியை armhole உடன் சேர்த்துத் தைக்கவும்.
5. கடைசியில் கை நுனியில் இருந்து Open வரை சேர்த்து இரு பக்கமும் சேர்த்துதைக்கவும் (படம் 5)




**கால் ஜீன்ஸ்**

1. துணியை நான்காக மடித்து போட்டு படம் 6-ல் உள்ளபடி வரைந்து வெட்டவும்.
2. வெட்டிய பின் மீதமுள்ள துணியை இரண்டாக மடித்துப் போட்டு படம் 7-ல் உள்ளபடி வெட்டவும். துணியின் நீளவாக்கில் ஒருபக்கம் நாடா நுழைக்க மடித்துத் தைக்கவும்.
3. படம் 6-ன்படி வெட்டிய துணியின் முன்பக்கமும், பின்பக்கமும் படம் 8-ல் உள்ளபடி கசடை கொடுத்து தைக்கவும். காலின் கீழ்பகுதியை 1" மடித்து தைக்கவும்.
4. படம் 7-ல் உள்ள துணியின் இரு நுனியையும் சேர்த்துத் தைக்கவும்.
5. படம் 7ஐயும், படம் 6ஐயும் சேர்த்து படம் 8-ல் உள்ளபடி தைக்கவும்.

சமையல் குறிப்பு

## சிக்கன் பிரியாணி

**தேவையானவை**

பாசுமதி அரிசி - அரை கிலோ
கோழி இறைச்சி - அரை கிலோ
வெங்காயம் - கால் கிலோ
தக்காளி கால் கிலோ
தயிர் - கால் டம்ளர்
இஞ்சி பூண்டு பேஸ்ட் இரண்டரை மேசைக்கரண்டி
கொத்தமல்லி - கால் கட்டு
புதினா - எட்டு இதழ்
பச்சை மிளகாய் - நான்கு.
மிளகாய் தூள் - 1 1/4 தேக்கரண்டி
எலுமிச்சை - பாதி பழம்
பட்டை - ஒரு இன்ச் அளவு ஒன்று
கிராம்பு - இரண்டு
ஏலம் - ஒன்று
எண்ணெய் - கால் டம்ளர்
நெய் - ஒரு தேக்கரண்டி
உப்பு - தேவைக்கு

செய்முறை

முதலில் அரிசியை களைந்து இருபது நிமிடம் ஊற வைக்கவும்.

எலும்புடன் சேர்ந்த சிக்கனை (அரை கிலோ) கழுவி தண்ணீரை வடிகட்டவும். எண்ணெயை காய வைத்து பட்டை, ஏலம், கிராம்பு போட்டு வெடித்ததும், வெங்காயத்தை போட்டு நல்ல கிளறி கலர் மாறியதும் இஞ்சி பூண்டு பேஸ்ட் போட்டு கிளறி சிம்மில் ஐந்து நிமிடம் விட்டு மீண்டும் ஒரு முறை கிளறி கொத்தமல்லி, புதினாவை பொடியாக நறுக்கிப்போடவும். பச்சை மிளகாயை இரண்டாக ஒடித்துப் போடவும்.

இரண்டு நிமிடம் கழித்து தக்காளியை போட்டு கிளறி, மிளகாய் தூள், உப்பு தூள் சேர்த்து கிளறி மூடி போட்டு சிம்மில் வைக்கவும்.

தக்காளி நல்ல வெந்து கூட்டாகட்டும். இறைச்சி விரைவில் வெந்து விடும். ஆகையால் கடைசியில் சேர்க்கவேண்டும். இல்லை என்றால் துண்டுதுண்டான எதுவும் கிடைக்காது. தூளாகி எலும்பு மட்டும் இருக்கும்.

தக்காளி வதங்கியதும் இறைச்சியைப் போட்டு கிளறி தயிரையும் சேர்த்து நல்ல வேகவிடவும்.

மூடி போட்டே இருந்தால் பிரியாணி நல்ல மணமாக இருக்கும். நல்ல வெந்து எண்ணெய் முழுவதும் மேலே மிதக்கும். அப்போது அடுப்பை அனைத்துவிட்டு அரிசி உலை கொதிக்க விட்டு அரிசியை களைந்து போட்டு முக்கால் வேக்காடு வெந்ததும் ஒரு தேக்கரண்டி எண்ணெய் கொஞ்சமாக தேசிப்புளி பிழிந்துவிடவும், சிறிது உப்பும் சேர்க்கவும்.


பரிசு 1000/- ரூபா.

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-369

கேள்வி: தலைமுடி நரைப்பதற்கான காரணங்கள் எவை?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-04.06.2013

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 369
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 367 இற்கான விடை :- அயர்லாந்து

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- பெனாசிரா அலாவுடீன், தக்கியா வீதி, திருகோணமலை.

369

பெயர் : ..................
முகவரி : ..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
கையொப்பம் : ..................

நட்பு நாட்டிற்கு ஆயுதங்களை அளிக்க அனுமதித்துள்ளது. குண்டுத் தாக்குதல் காட்டுவதுபோல் ஈராக் மீண்டும் இப்போர்த் திட்டங்களுக்கு நடுவேதான் இருப்பதைக் காண்கிறது.

ஈராக்கிய போர் தொடங்கி 10 ஆண்டுகளுக்கு பின்னரும் மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்திய போர்கள் தொடர்கின்றன. புதிய போர்களுக்கு தயாரிப்புக்கள் நடக்கின்றன. போர்களுக்குப் பொறுப்பான அரசியல் குற்றவாளிகளும் செய்தி ஊடகப் பிரச்சாரகர்களும் தண்டனையின்றிச் செல்கின்றனர்.

### சிரிய எதிர்த்தரப்பின் இரசாயன ஆயுதங்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் பரிசோதகர் Carla del Ponte இன் அறிக்கையானது சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆட்சி அல்ல. மேற்கத்தைய ஆதரவுடைய எதிர்த்தரப்பு சக்திகள்தான் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளது எனக் கூறப்பட்டதை புறந்தள்ளிவிட்டு சிரியாவிற்கு எதிரான போருக்கு அமெரிக்க அதிகாரிகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்தனர். Del Ponte இன் கருத்தானது ஐ.நா. அதிகாரிகளின் பரந்த சோதனைகளை உள்ளடக்கிய பேட்டிகளை அடித்தளமாகக் கொண்டது. வாஷிங்டன் தன் போருக்கான உந்துதலை நியாயப்படுத்த கூறிவரும் பொய்யை அது அம்பலப்படுத்தியுள்ளது. அதாவது. சிரியாவை தாக்குவது என்பது அசாத் பயன்படுத்தும் இரசாயன ஆயுதங்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுதல் என்பதே அது. (See also: "UN says US-backed opposition, not Syrian regime, used poison gas").

வெள்ளை மாளிகையின் செய்தி ஊடகச் செயலாளரான ஜே கார்னே என்பவர் Carla del Ponte யின் அறிக்கையை ஒரு சிறு சான்றுகூட அளிக்காமல் நிராகரித்தார். "எதிர்த்தரப்பு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியது எனப்படும் எத்தகைய கருத்துக்கள் குறித்தும் நாங்கள் முற்றிலும் அவநம்பிக்கை கொண்டுள்ளோம். சிரியாவில் நடைபெற்றுள்ள இரசாயன ஆயுதப் பயன்பாடு எதுவும் அசாத் ஆட்சியினால்தான் என்பதை நாங்கள் அதிகம் நம்புகிறோம். அதுதான் எங்கள் நிலைப்பாடு" என்று கார்னே கூறினார்.

உண்மையில் எதிர்த்தரப்பு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளது என்று நம்புவதற்குக் காரணம் உள்ளது. டிசம்பர் மாத CNN தகவலின்படி அமெரிக்கா ஒப்பந்தக்காரர்களையும் கைக்கூலிகளையும் எதிர்த்தரப்பினருக்கு "இரசாயன ஆயுதங்கள் சேமிப்புக் கிடங்குகளை பாதுகாக்கவும் கையாளவும்" பயிற்சி அளிப்பதற்கு அனுப்பி வைத்தது.

எதிர்த்தரப்புப் படைகள் பல கப்பல் வழியாக ஆயுதங்களையும் கருவிகளையும் அமெரிக்கா மற்றும் நட்பு ஆட்சிகளான கட்டார். துருக்கி. சவுதி அரேபியா ஆகியவற்றின் மேற்பார்வையில் பெற்றுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் எதிர்தரப்பு போராட்டக்காரர்கள் You Tube இல் ஒரு வீடியோ காட்சியை வெளியிட்டனர். அதில் அவர்கள் இரசாயன ஆயுதங்களைச் சோதிப்பது அதை அவர்கள் பயன்படுத்தத் தயாராக இருப்பது ஆகியவை உள்ளன.

### ஆயுதம் வழங்க ஒபாமா நிர்வாகத்திற்கு ஒப்புதல்

கார்னேயிடமிருந்து தங்கள் வழிவகையை எடுத்துக்கொண்டுள்ள அமெரிக்க சட்டம் இயற்றுவோர் சிரியா மீது முழு அளவுத் தாக்குதலுக்கான அழைப்புக்களை விடுத்துள்ளனர். செனட் வெளியுறவுகள் குழுத் தலைவர் ரோபர்ட் மெனென்டெஸ் (ஜனநாயகக் கட்சி, நியூ ஜேர்சி) ஒரு சட்டத்தை அளித்துள்ளார்: இது உத்தியோகபூர்வமாக 'எதிர்த்தரப்பினர்' எனக் கூறப்படுவோருக்கு ஆயுதம் வழங்க ஒபாமா நிர்வாகத்திற்கு ஒப்புதல்கொடுக்கும்.

"அசாத் ஆட்சி சிவப்புக் கோட்டைத் தாண்டிவிட்டது. அது எங்களை அனைத்து விருப்பங்களையும் பரிசீலிக்க வைக்கும் கட்டாயத்தைக் கொடுத்துள்ளது" என்று மெனென்டெஸ் ஒரு எழுத்துமூல அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்: அதாவது சிரிய ஆட்சி எதிர்த்தரப்பிற்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளது என்ற del Ponte இனால் மறுக்கப்பட்ட. முற்றிலும் ஆதாரமற்ற கூற்றை உண்மை என்று எடுத்துக்கொண்டு குறிப்பிட்டுள்ளார்.

வார இறுதியில் செனட்டர் ஜோன் மக்கெயின் (அரிசோனா குடியரசுக் கட்சி) ஒபாமாவின் 'சிவப்புக் கோடு' இரசாயன ஆயுதங்கள் பயன்பாடு குறித்து கடக்கப்பட்டுவிட்டன. சிரியாவிற்கு எதிரான போரின் விரிவாக்கத்தை 'மாற்றுவதற்கான நேரம்' வந்துவிட்டது என்றார்.

### செனட்டர் பொப் கேசி

(பென்சில்வானியா, ஜனநாயகக் கட்சி) அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் சிரியாவிற்குள் ஒரு "பாதுகாப்புப் பகுதியைத்" தோற்றுவிப்பதற்கு பரந்த ஆதரவு உள்ளது என்று வலியுறுத்தினார். இதில் பெரியளவு சிரியாவின் விமானப் பாதுகாப்புக்களுக்கு எதிரான விமானத் தாக்குதல்கள் இருக்கும். மற்றும் சிரியப் பகுதியின் கணிசமான பகுதியை ஏகாதிபத்திய சக்திகளின் கட்டுப்பாட்டின் கீழ் வரவேண்டிய நிலையும் இருக்கும்.

செனட்டர் ரோபர்ட் கோர்க்கர் (டெனெசி குடியரசுக் கட்சி) வெளியுறவுக் குழுவில் ஒரு மூத்த உறுப்பினர் கூறினார்: "நாம் விரைவில் எதிர்த்தரப்பிற்கு ஆயுதம் அளிப்போம் என நான் நினைக்கவில்லை.", "நாம் சமநிலையை மாற்றவேண்டும்... நிதானமான எதிர்த்தரப்புக் குழுக்கள், நாம் ஆதரவு கொடுப்பவை, போரிடுவதில் வல்லமை பெற்றிருக்கவில்லை" என்று அவர் சேர்த்துக் கொண்டார்.

போருக்கான செனட்டர்களின் அழைப்புக்கள் சிரியாவில் முடுக்கிவிடப்பட்டுள்ள இராணுவத் திட்டத்தின் நடுவே வந்துள்ளன. நியூயோர்க் டைம்ஸானது அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை இரகசியமாக ஒருங்கிணைந்த விமானத் தாக்குதல்கள் குறித்து விவாதித்தன என்றும் அதன் நோக்கம் சிரியாவில் பறக்கக்கூடாத பகுதி ஒன்றை நிறுவுதல் என்றும் தகவல் கொடுத்துள்ளது. செய்தித்தாளானது. அமெரிக்க இராணுவம், பல மாதங்களாக சிரியா மீது தாக்குதல் நடத்தும் திட்டங்களை இயற்றிக் கொண்டிருப்பது ஒபாமா நிர்வாகத்தால் அதன் திட்டத்தை முடுக்கிவிட்டு அதை முக்கிய அமெரிக்க நட்பு நாடுகளுடன் ஒருங்கிணைக்குமாறு கூறப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கிறது.

### 42 சிரிய சிப்பாய்கள் இஸ்ரேலிய தாக்குதல்களால் டமாஸ்கஸிற்கு அருகே கொல்லப்பட்டனர்

காங்கிரஸ் மற்றும் செய்தி ஊடகங்களில் இருந்து போருக்கான கடும் தொனி சிரியா மீது இஸ்ரேலிய வான் தாக்குதல்கள் கடந்த தினங்களில் நடந்தவற்றை தொடர்ந்துவந்துள்ளன. 42 சிரிய சிப்பாய்கள் இஸ்ரேலிய தாக்குதல்களால் டமாஸ்கஸிற்கு அருகே கொல்லப்பட்டதாக தகவல்கள் கொடுத்துள்ளன.

ஒரு ஹெஸ்புல்லா பிரதிநிதி இஸ்ரேலிய தாக்குதல்கள் எதிர்த்தரப்புக்களுக்கு ஆதரவாக தொடங்கின என்றார். "இக்குண்டுவீச்சு பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகளுக்கு (தப்கீர்களுக்கு) உளர்தியான ஏற்றம் கொடுக்கும் ஒரு முயற்சி சிரியாவை உள்ளிருந்து அழிக்கப் போரிடுவோருக்கு ஊக்கம் அளிப்பது" என்று அவர் கூறினார்.

அமெரிக்கா. பிரான்ஸ் பிரித்தானியா ஆகியவற்றின் பாரிய வான் தாக்குதல்களுக்கான தயாரிப்புக்களுக்கு நடுவில். இஸ்ரேலிய தாக்குதல்களின் நோக்கம். சிரியாவின் வான் பாதுகாப்புத் திறன்களை பரிசோதித்தல் ஆகும். மூலோபாயத்திற்கான சர்வதேச கற்கை மையத்தின் (Centre for Strategic and International Studies) ஆன்டனி கோர்ட்ஸ்மன் கருத்துப்படி "இஸ்ரேலின் வெற்றி ஒருவகை பறக்கக்கூடாது பகுதியை அல்லது நகரக்கூடாது பகுதியை செயற்படுத்துவதில் முற்றிலும் இராணுவ இடர்கள் இப்பொழுது சிரியாவுடன் போர் தொடங்கியதோடு ஒப்பிடும்போது மிகவும் குறைந்துவிட்டது என்பதை குறிக்கிறது.

'பறக்கக் கூடாது' பகுதி என்பதைச் சுமத்துவது பெரிய அளவு போரை ஏற்படுத்தக்கூடும் என்று கோர்ட்ஸ்மன் தெளிவாக்கியுள்ளார். "இதற்கு பாரிய அமெரிக்க விமான, க்ரூஸ் ஏவுகணைத் தாக்குதல் வேண்டும்... அத்தகைய போரைத் தொடர்ந்து நீடிப்பது என்பது இரு ஏவுகணைத் தாங்கிக் குழுக்களுக்குக்கூட கடினமாகும்."

**"தலைமீடு இல்லாத போர், சிரியாவிற்கு எதிரான பெரிய போருக்கு காரணத்தைக் கொடுக்கிறது. அப்படியும்கூட ஒபாமாவிற்கு விருப்பம் இருந்தால் அமெரிக்கா இந்த மோதலை நல்ல முடிவிற்கு கொண்டுவரமுடியும். இக்கட்டத்தில், இதற்கு சில எதிர்ப்பாளர்களுக்கு ஆயுதம் அளிப்பதைவிட அதிகம் தேவைப்படுகிறது. இதன் பொருள் பறக்கக்கூடாது பகுதிகளை சுமத்துவது அசாத்தின் படைகளுக்கு எதிராக வான் தாக்குதல்களை நடத்துவது என்பதாகும். அமெரிக்கா அல்லது பிற தரைப்படைத் துருப்புக்கள் இரசாயன ஆயுதங்களை கைப்பற்றுதல் என்பதையும் கருத்திற் கொள்ளவேண்டும்.**

### வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலின் மே 7ஆம் திகதி தலையங்கம்

வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலின் மே 7ம் திகதி தலையங்கம் கூறுகிறது: "தலையீடு இல்லாத போர், சிரியாவிற்கு எதிரான பெரிய போருக்கு காரணத்தைக் கொடுக்கிறது. அப்படியும்கூட ஒபாமாவிற்கு விருப்பம் இருந்தால் அமெரிக்கா இந்த மோதலை நல்ல முடிவிற்கு கொண்டுவரமுடியும். இக்கட்டத்தில், இதற்கு சில எதிர்ப்பாளர்களுக்கு ஆயுதம் அளிப்பதைவிட அதிகம் தேவைப்படுகிறது. இதன் பொருள் பறக்கக்கூடாது பகுதிகளை சுமத்துவது அசாத்தின் படைகளுக்கு எதிராக வான் தாக்குதல்களை நடத்துவது என்பதாகும். அமெரிக்கா அல்லது பிற தரைப்படைத் துருப்புக்கள் இரசாயன ஆயுதங்களை கைப்பற்றுதல் என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

"உடனடியான இலக்கு பேரழிவு ஆயுதங்கள் பரவுதலைக் குறைத்தல் என்பதாகும். ஆனால் மிக முக்கியமான மூலோபாய இலக்கு அப்பிராந்தியத்தில் நம் முக்கிய எதிரியான ஈரானைத் தோற்கடித்தல் என்பதாகும். குறைந்த பட்சம் ஒரு குறுகிய காலத்திற்கேனும் டமாஸ் கஸில் ஒரு ஜிகாத்தியவாத வெற்றி என்பது உண்மையாகும். ஆனால் இவை துருக்கி மற்றும் இஸ்ரேலினால் அடக்கப்பட்டுவிடக் கூடியவை. என வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலின் மே 7ம் திகதி தலையங்கம் கூறுகிறது.

2003ல் ஈராக்கின் மீது படையெடுப்பு அளவைப் போன்ற மற்றொரு ஏகாதிபத்திய போருக்கு அமெரிக்கா தயாரிப்புக்களைக் கொண்டுள்ளது. இழிந்த முறையில் அமெரிக்க மக்களுக்கு அல்கெய்டாவிற்கு எதிரான 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்று விளம்பரப்படுத்தப்பட்டாலும் அத்தகைய போரின் இலக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாடு முழு மத்திய கிழக்கின் மீதும் ஒருங்கிணைக்கப்படவும், அதன் பரந்த எரிசக்தி இருப்புக்களைக் கட்டுப்படுத்துவது என்பதும்தான். அமெரிக்காவின் ஆளும் உயரடுக்கு பயங்கரவாதிகளை தோற்கடிப்பது குறித்து அக்கறை கொள்ளவில்லை. உண்மையில் அவர்கள் அதன் நட்பு அமைப்புக்கள்தான்.

### அமெரிக்க உளவுத்துறையும் இஸ்லாமியவாத சக்திகளும்

அல்கெய்டா பிணைப்புடைய எதிர்த்தரப்புப் படைகள் இரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்தியதை ஒபாமா நிர்வாகம் எளிதாக உதறித்தள்ளியது குறிப்பிடத்தக்க வகையில் முக்கியத்துவம் உடையது. அதிலும் சிறப்பாக அல் கெய்டா பேரழிவு ஆயுதங்களைக் கொண்டிருக்கிறது என்பது ஈராக் மீது படையெடுக்க முக்கிய போலிக் காரணமாக இருந்தநிலையில், இது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் மிகப் பிற்போக்குத்தன இஸ்லாமியவாத சக்திகளுக்கும் இடையே நீண்டகாலமாகத் தொடரும் இணைப்பைத்தான் அடிக் கோடிட்டுக் காட்டுகிறது.

1970களில் தொடங்கி 1980கள் முழுவதும் சோவியத் - ஆப்கானிய போர்க்காலம் முழுவதும் அமெரிக்க உளவுத்துறை இஸ்லாமியவாத சக்திகளுக்கு ஒசாமா பின்லேடன் உட்பட ஆயுதங்கள் கொடுப்பதை மேற்பார்வையிட்டது. மேலும் அவர்கள் பால்கன்களிலும் காகசசிலும் அமெரிக்கா ஆதரவுடைய யுேரர்களில் அதிர்ச்சித் துருப்புக்களாக போரிட்டார்கள். அல்கெய்டாவின் சில கூறுபாடுகள் செப்டம்பர் 11 தாக்குதல்களுக்குப் பின்னர் அமெரிக்காவில் இலக்குவைக்கப்பட்ட போதிலும்கூட வாஷிங்டனின் இச் சக்திகளுடனான அரசியல் தொடர்புகள் 2000 ஆம் முழுவதும் தக்க வைக்கப்பட்டிருந்தன.

தன்னுடைய 2011லிபியப் போர் மற்றும் இப்பொழுது சிரியப் போருக்கு அமெரிக்கா அல் கெய்டா பிணைப்பு உடைய லிபிய இஸ்லாமியவாத போராளிக் குழுவைத் திரட்டியது சிரியாவில் அல்-நுஸ்ரா முன்னணியைத் திரட்டியது.

வெளிவிவகாரச் செயலர் ஜோன் கெர்ரி மாஸ்கோவிற்குப் பயணித்து சிரியாவில் ஆட்சி மாற்றத்திற்கான அமெரிக்க முயற்சிக்கு ரஷ்ய ஆதரவைப்பெற முயன்றார். சீனாவுடன் சேர்ந்து ரஷ்யா மூன்று தனித்தனி ஐ.நா. தீர்மானங்களுக்கு எதிராகத் தடுப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தியது: அவை அமெரிக்க ஆதரவுடைய 'எதிர்த்தரப்பு' குழுக்களை அசாத்தின் அரசாங்கம் நசுக்குவதைக் க்ண்டித்திருந்தன.

'அமெரிக்காவானது சிரியாவைப் பொறுத்தவரை நாம் முக்கியமான பொதுநலன்களை பகிர்ந்து கொள்ளுகிறோம் என நம்புகிறது' பிராந்தியத்தில் உறுதித்தன்மை. பிராந்தியத்திலும் பிற இடங்களிலும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் தீவிரவாதிகள் இல்லாத நிலை ஏன என்று கெர்ரி அறிவித்தார்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் போர் குறித்து ஒரு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்ய ஒப்புக் கொண்டுள்ளன் அசாத் ஆட்சியும் எதிர்த்தரப்பும் அதில் கலந்து கொள்ளும்.

ஆயினும்கூட கெர்ரி புட்டினிடமிருந்து உறையவைக்கும் வரவேற்பைத் தான் பெற்றார். பல மணிநேரம் கெர்ரி காக்க வைக்கப்பட்டு. கெர்ரி பேசும்பொழுது தன் பேனாவுடன் திசைதிருப்பும் வகையில் சுழற்றிக் கொண்டிருந்தார். ரஷ்ய வெளியுறவு அமைச்சரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அமெரிக்கக் கொள்கை குறித்து உட்குறிப்பாக குறைகூறியது. இன்னும் ஆயுத மோதல் விரிவாக்கம் என்பது தீவிரமாக புதிய அழுத்தங்கள் கொண்ட பகுதிகளை தோற்றுவிக்கும் இடரைக் கொண்டுள்ளது அதேபோல் ஒப்பீட்டளவில் இதுவரை அமைதியாக இருந்த சூழ்நிலையை உறுதி குலைக்கும் வகையில் லெபனிய-இஸ்ரேலிய எல்லைகளிலும் நடைபெறுகிறது.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 20

39



# சிங்கை மைந்தன் அமரசிம்மன்

**அவனது** கற்பனையில்தான் ஓர் மன்னன் என்ற எண்ணமே தலைதூக்கி நிற்க வீரர்களுக்கு சைகை காட்ட அவர்கள் ஊது கொம்புகளை ஊத, தாரை, தப்பட்டைகள் முழங்க படையணி நகர ஆரம்பித்தது. பனிமூட்டம் எதிர்ப்படையணியில் என்ன நடக்கின்றது என்பது தெரியாமல் இருந்தது.

நான் முந்திக் கொண்டு எதிரி மீது திடீர் தாக்குதல் நடாத்தி திணறடித்து முன்னேறினால் எளிதான வெற்றி என்ற எண்ணத்தில் வீறுநடை போட்ட அளகக்கோனாரின் நினைவலைகளை சிதறடிப்பது போன்று கதிரவன் மலைமுகட்டிற்கு வந்து ஒளி வெள்ளம் பாய்ச்சியபோது தங்கள் வரவை எதிர்பார்ப்பது புதுவியூகம் அமைத்து நிற்கும் படையணியைக் கண்டு திகைத்தானாயினும் படை யண-யின் வியூகம் சிரமமின்றி தான் நினைத்தபடி புரவிப் படையுடன் நடுவே புகுந்து எதிரியை இருகூறாகப் பிரித்து பலவீனப்படுத்தி தாக்கலாம் என மகிழ்ச்சியடைந்தான்.

அளகக்கோனார் அவசரக்காரன் என்பதை நன்கறிந்திருந்த அமரசிம்மன் தங்கள் படையினருடைய செயற்பாடுகள் பற்றி ஏற்கனவே அறிந்திருந்தான். பிறைச் சந்திரவடிவில் அமையப் பெற்ற படை வியூகத்தினுள் நிச்சயம் புகுந்து தாக்குவான் என்பதை அறிந்தே அப்படியான ஏற்பாட்டை செய்திருந்தான்.

எதிர்பார்த்தபடியே புரவிப் படையுடன் நடுவில் புகுந்து மையப்படுத்தி நோக்கி முன்னேறினான். அளகக்கேனார் அவனுடைய உபதளபதிகள் இரு பகுதி முனைகளை நோக்கி சென்றனர். நடுமையத்துக்கு வந்து விட்ட அளகக்கோனார் பிறை வியூகத்தின் அடிப்பகுதியை உற்று நோக்கியதும் தான் பொறிக்குள் அகப்பட்டுவிட்டதை உணர்ந்தான். அதேசமயம் அவன் தன் படையினரை சைகை காட்டி நிறுத்திவிட்டு பின்புறம் திரும்பி வந்துபார்த்தான். பிறைச்சந்திர வியூகம் இருமுனையிலும் தமது வீரர்கள் போரிடுவதைப் பார்த்து மகிழ்ச்சியுற்றவன் தனது புரவியை சுற்றி வந்து படையின் முன்னணியில் நிறுத்தி தனது படை வீரர்களைப் பார்த்து உரத்த குரலில் உத்தரவுகள் பிறப்பித்தான்.

ஒருமித்து படையணியின் இருபக்க மையப் பகுதியை ஊடுருவித் தாக்கும்படி கூறிவிட்டு மிகுதிப்பேருடன் பிறை வியூகத்தின் அடிப்பகுதி நோக்கிச் சென்றான். அதேசமயம் பிறைவியூக அணி அளகக்கோனாரின் படையணியை நோக்கி நகர ஆரம்பித்தது.

பிறைக் கூம்பின் இரு முனைகளும் காலாட் படையினர் வீரசிங்கன், சிங்கராயன் ஆகியோர் தலைமையில் நின்றிருந்தனர். இடையில் கதிரவன், செங்கோடன் ஆகியோர் அசுவப் படையின் சிறு-பிரிவுடன் நின்றிருந்தனர். புரவிப் படையின் பெரும் பகுதி பிறையின் அடிப்பகுதியில் நின்றிருந்தன்ர். ஆகவே போர்தொடங்கியதும் படையணி நகரமுற்பட்டதும் கதிரவனை சூளும் கருமேகம் போல அளகக்கோனாரின் படையினர் திக்குமுக்காடினார். இருந்தாலும் அளகக்கோனாரதும், சிங்களச் சிற்றரசர்கள் சிலரது படைவீரர்களும் மூர்க்கமாகச் சண்டையிட்டனர். வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க முடியாத நிலையிலும் அநேகம் வீரர்களை இழந்துவிட்ட நிலையில் அளகக் கோனாரின் வீரர்கள் பின்னடைந்து கொண்டிருந்த வேளையில் புயலெ-னப் புகுந்த அமரசிம்மனின் புரவிப் படையணி, மாடன் ஏற்கனவே களம் புகுந்திருந்தான். அமரசிம்மனின் மெய்ப்பாதுகாவலனாக காராளன் புரவியில் சுழன்று கொண்டிருந்தான். அமரசிம்மனின் வருகை சிங்கை வீரர்களிடையே ஓர் புத்துணர்ச்சியை தோற்றுவித்தது. சில நாழிகைப் பொழுதில் அளகக் கோனாரின் படையில் பெரும் பகுதி அழித்தொழிக்கப்பட்டது. செய்வதறியாது அளகக்கோனார் எஞ்சிய வீரர்களுடன் புறமுதுகிட்டு ஓட ஆரம்பித்தான். அவனைத் துரத்திய வீரர்களை அழைத்து ஏதோ உத்தரவுகள் பிறப்பித்து விட்டுப் போர் முடிந்துவிட்டதை அறிவிக்கும் வெற்றி முரசை ஓங்கி ஒலிக்கச் செய்தான். படை வீரர்கள் பரவசமுற்று குதித்துக் கும்மாளம் போட்டு வெற்றிக் களிப்பை கொண்டாடினார்.

உப தளபதிகளை அழைத்து காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் படியும், இறந்தவர்கள் உடல்களைப் புதைக்கும் படியும் உத்தரவுகள் கொடுத்துவிட்டு உபதளபதி வீரசிங்கனுடன் பாடி வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாள் அதிகாலை சூரிய உதயத்துக்கு முன்பு அளகக் கோனாரை துரத்திய படை வீரர்கள் திரும்பிவந்தனர். அவர்களோடு தர்மசேன நாயக்கனும் வந்திருந்தான்.

"என்ன செய்தி கொண்டு வந்துள்ளீர்கள் என்று நான் கூறட்டுமா" என்று கேட்டுக் கொண்டே கூடாரத்தின்றும் வெளியே வந்தான் அமரசிம்மன்.

"சொல்லுங்கள் பிரபு" என்றான் மாடன்.

"ரோகணத்தின் காட்டுக்குள் ஓடி ஒழிந்துவிட்டான் அளகக் கோனார். அப்படித்தானே தர்மசேனா"

"உண்மைதான் பிரபு! தங்கள் வீரர்களோடு காட்டுக்குள் செல்ல நான் விரும்பவில்லை. தனித்தும் அவர்களை பின்தொடரவில்லை"

(தொடரும்...)




**◉ சிந்தியா! மாகாண சபை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது என பொதுபலசேனா கூறுகிறதே?**

*எம்.காந்தன்,*
*வவுனியா.*

பொதுபலசேனா பல விடயங்களைச் சொல்கின்றது. அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டால் தேவையற்ற கசப்புக்களே ஏற்படும். உண்மையில் என்ன திட்டத்தோடு பொதுபலசேனா சிறுபான்மை மக்கள் மீது ஏவி விடப்பட்டுள்ளது என்பதை நாம் பொறுமையாக அவதானிக்கவேண்டியுள்ளது.

**◉ சிந்தியா! இலங்கை பௌத்த நாடு என்று மகாவம்சத்தில் சொல்லவில்லையென கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சொல்கின்றாரே?**

*திருமதி எம்.பிரிந்தன்.*
*காலி.*

பௌத்தம் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தது என்பதை இவர்கள் புரிந்துகொண்டால் முதலில் இவர்கள் பௌத்தத்தின் அடிவேர் தேடி இந்தியாவுக்கு போகவேண்டியிருக்கும். இப்படியான கருத்து கூறப்படுவதற்கு காரணம் என்ன என்பதை சிந்திக்கும்போது, இது சிங்களவர்களின் நாடு, சிங்கள அரசு என்றும் கூறுகின்றவர்களுக்கு பொதுபல சேனாவின் கருத்து ஏற்புடையதாகத் தானே இருக்கவேண்டும்.

**◉ சிந்தியா! தாய்நாட்டில் ஒரு அங்குலத்தையேனும் அபகரிக்கவோ, துண்டாடவோ இடமளியேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூளுரைத்துள்ளாரே?**

*சி.தர்மேந்திரன்,*
*பூநகரி.*

ஜனாதிபதியின் கருத்துக் குறித்து என்ன விதமான பதிலை எதிர்பார்க்கின்றீர்கள்? தாய்நாடு துண்டாடப்பட வேண்டும். அபகரிக்கப்பட வேண்டும் என்று கூற வேண்டுமா? எந்த சேனாக்கள் எதைச் சொன்னாலும் இலங்கை நாடு நாம் அனைவருக்கும் தாய்நாடு. இலங்கையை சர்வதேச சூழ்ச்சிகள் துண்டாடவோ, எமது வளங்களை அபகரிக்கவோ நாம் இடமளியோம். அது இலங்கையின் பிரஜைகள் ஒவ்வொருவருக்குமான கடமையாக இருக்கவேண்டும்.

**◉ சிந்தியா! பெண்களுக்கு துன்பங்கள் நடக்கின்றது என்று தெரிந்தும் வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பைத் தேடிச் செல்லும் பெண்களை என்ன செய்யமுடியும்?**

*எஸ்.அனித்தா.*
*கொழும்பு-15.*

பொருளாதாரம் தேடி அலையும் மனித வாழ்வு இது. அண்மையில் பாப்பரசர் கூட கண்ணுக்குத் தெரியாத பொருளாதார பயங்கரவாதம் முழு உலகையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பதாக கூறியிருக்கின்றார். உழைக்கும் ஆண்மையற்ற ஆண்களை குடும்பத் தலைவர்களாக அடைந்த பெண்களும், குடும்பச்சுமையை பகிர்ந்துகொள்ள முடியாத குடும்பங்களில் வாழ்க்கைப்பட்ட பெண்களும், குடும்பத்தலைவர்களை இழந்து வாழ்க்கைக்கான போராட்டத்தை தனியாளாக எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்களும் எல்லாவற்றுக்கும் துணிந்து கடல் கடந்து பொருளாதாரம் தேடி செல்கின்றார்கள். வறுமை விரட்டிய பெண்களை மனித மிருகங்கள் மிக இலகுவாக வேட்டையாடி விடுகின்றன. மரணிப்போம் என்று தெரிந்தும், வாழ்வதற்காக போராட வேண்டிய கட்டாயத்தில் மனிதர்கள் இருக்கின்றார்களே என்ன செய்வது?

**◉ சிந்தியா! நாகரிகத்தை விரும்புவது ஆண்களா, பெண்களா?**

*எம்.றொனால்ட்,*
*குளியாப்பிட்டிய.*

இருபாலாருமே நாகரிகத்தை விரும்புகின்றார்கள். இல்லாவிட்டால் ஆணும் பெண்ணும் இந்த உலகை வெற்றி கொண்டிருக்கமுடியாது.

**◉ சிந்தியா! தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சிந்தியாவுக்கு பிடித்த நிகழ்ச்சி எது?**

*சி.ஷபா.*
*தென்னக்கும்புர.*

செய்திகளைத் தவிர வேறு எவையும் விருப்பத்தோடு பார்க்கக்கூடியவை அல்லவே.

**◉ சிந்தியா! உண்மையான காதலர்களை கண்டதுண்டா?**

*தி.நிஷாந்தன்.*
*மொதர.*

முரண்பாடுகளையும் ஒற்றுமைகளையும் சமாளித்துக் கொண்டு ஒற்றைக் கூரைக்குள் ஒற்றுமையாக வாழும் ஆணும் பெண்ணுமே உண்மையான காதலர்கள். அதுதான் நிரந்தரமும்கூட.

**◉ சிந்தியா! அரிச்சந்திரன் உண்மையிலே, உண்மையானவரா?**

*மா.சாரங்கன்.*
*கல்வயல்.*

கதைப்படி உண்மை பேசுகின்றார். மற்றப்படி அவர் உண்மையானவரா? என்று எந்த இடத்திலும் சுட்டிக்காட்டப் படவில்லையே.

**◉ சிந்தியா! வேலைச்சுமையால் போதைப்பொருட்களை நாடுகின்றதா இந்த ஆண்வர்க்கம்?**

*வ.வினோதன்.*
*முள்ளியவளை.*

உங்களது கேள்வியே ஆண்கள் மீதான எரிச்சலோடு உள்ளதே. அப்படி என்ன நேர்ந்தது உங்களுக்கு? போதையை தேடுகின்றவர்களில் ஆண்களுக்கு சளைத்தவர்களல்ல பெண்கள். வித்தியாசம் என்னவென்றால் ஆண்கள் வெளிப்படையாகவே தேடுகின்றார்கள். பெண்கள் இரகசியமாகத் தேடுகின்றார்கள்.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

**மலையாள மாந்திரிக சக்தி**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**தஞ்சைப் பெருங்கோவிலின்**

அளவின்படி ஒரு விரல் என்பது 33 மில்லி மீற்றராகும். கருவறை வெளிச்சுவர்களில் காணப்படும் கலசத் தூண்களின் அகலம் 10 விரல்களாகும், அதாவது 0.33 மீற்றர் ஆகும். இதுவே தஞ்சாவூர் பெரிய கோயிலின் அடிப்படை அளவாகும். இதனை நாம் அலகு என்று குறிப்பிடலாம். இந்த அடிப்படையில் விமானத்தின் திட்டமிட்ட உயரம் 180 அலகுகள். அதாவது சுமாராக 59.40 மீற்றர். சிவலிங்கத்தின் உயரம் சரியாக 12 அலகுகள்.

இதைப்போன்று 15 மடங்கு உயரமான 180 அலகுகள், அதாவது 59.40 மீற்றர் என்பதே கோபுரத்தின் திட்டமிடப்பட்ட உயரம். கருவறையின் இரு தளங்களிலும் விமானத்தின் பதின்மூன்று மாடிகளும் சேர்ந்து 15 தளங்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அலகுகளின் அடிப்படையில் கருவறை 24 அலகுகள் கொண்ட ஒரு சதுரம். கருவறையின் உட்சுவரும், வெளிச்சுவரும் முறையே 48 அலகுகள், 72 அலகுகள் அளவுடைய சதுரங்களாகும். பிரகாரத்தில் நாம் காணக்கூடிய விமானத்தின் அடிப்பகுதி (உபானா) 90 குறித்த குறிப்புகள் எதுவுமில்லை. சில சாத்தியக் கூறுகள் மட்டுமே பரிசீலிக்கலாம். கருவறையின் உட்சுவருக்கும், வெளிச்சுவருக்கும் இடையே 6 அலகுகள் கொண்ட உள் சுற்றுப்பாதை உள்ளது. இந்த இடைவெளி படிப்படியாகக் குறைக்கப்பட்டு, சுமார் 20 மீற்றர் உயரத்தில் இரு சுவர்களும் இணைக்கப்பட்டன. இங்கிருந்து விமானம் மேலே எழும்புகிறது. சுவர்களை இணைத்ததன் மூலம் 72 அலகுகள் பக்க அளவு கொண்ட (சுமார் 24 மீ அல்லது 24 மீற்றர்) ஒரு பெரிய சதுர மேடை கிடைக்கப்பெற்றது. விமானம் 13 தட்டுகளைக் கொண்டது. முதல் மாடியின் உயரம் சுமார் 4.40 மீற்றர், பதின்மூன்றாவது மாடியின் உயரம் சுமார் 1.92 மீற்றர் பதின்மூன்று மாடிகளின் மொத்த உயரம் 32.5 மீற்றராகும். பதின்மூன்றாவது மாடியின் மேல் எண் பட்டை வடிவ தண்டு, கோளம், கலசம் மூன்றும் உள்ளன. இதன் மொத்த உயரம் 30 அலகுகள்.

அதாவது பிரகாரத்திலிருந்து விமானத்தின் 13-வது மாடி சரியாக 150 அலகுகள் (50 மீற்றர்) உயரத்தில் உள்ளது. தஞ்சை சிற்பிகள் இந்த உயரத்தை மூன்று சம உயரப் பகுதி களாகப் பிரித்துள்ளனர். அதாவது, கருவறை மேல் மாடி உயரம் 50 அலகுகள், விமானத்தின் முதல் மாடியிலிருந்து 5ஆவது மாடி வரை 50 அலகுகள், விமானத்தின் 6 ஆவது மாடியிலிருந்து 13 ஆவது தளம் வரை 50 செல்வதற்கேற்ற வழித்தடத்தையும் கொண்டிருந்தது. விமானத்தின் நான்கு பக்கங்களையும் சுற்றிச் செல்லுமாறு அமைந்திருந்த இந்த அரண் மதில் சாரம், கோபுரம் உயர உயர தானும் உயர்ந்துகொண்டே சென்றது. முதல் கட்ட சாய்வுப் பாதையின் இறுதி கட்ட மேடைச் சுவர்களுடன் இந்த இரண்டாம் கட்ட சாரத்தின் சுவர்கள் இணைக்கப்பட்டிருந்தன. இந்த கட்டுமானத்தின் அமைப்பில் மிகுந்த கவனம் தேவைப்பட்டது. இது மட்டுமன்றி இந்த அரண் சுவர்களுக்கு நிறைய கற்களும் தேவைப்பட்டன. முதல் கட்ட சாரங்களில் சில கலைக்கப்பட்டு, அவற்றின் கற்கள் முதலியவை செங்குத்தான அரண் சுவர்கள் கட்டுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டன என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.

**தஞ்சை பெரியகோவில் – கல்வெட்டுகள்**

இறுதிகட்டமாக, 100 முதல் 150 அலகுகள் வரையிலான விமானப் பணிகளுக்காக மரத்தினாலான வலுவான சாரம் அமைக்கப்பட்டது. சவுக்குக் கழிகள், சணல் கயிறுகள் தவிர்க்கப்பட்டன. தரமான நல்ல உறுதியான மரங்களிலான தூண்கள் நேர்ச்சட்டங்கள் குறுக்குச் சட்டங்கள்

# தொழில்நுட்பத்தையே விஞ்சும் தஞ்சைப் பெரிய கோயில்!

அலகுகள். இந்த அடிப்படையில் விமானத்தின் கடைக்கால் 108 அலகுகள் (36 மீ ஷ் 36 மீ) பக்க அளவுகொண்ட பெரிய சதுரமாக இருக்கலாம் என யூகிக்க முடிகிறது. சரியான அளவுகள் தெரியவில்லை.

இந்த கடைக்கால் மிகக் குறைந்த ஆழத்திலேயே, அதாவது 5 அலகுகள் ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. கோயில் வளாகத்தின் அருகே பாறை தென்படுகிறது. ஆயினும் சுமார் 80 டன் எடையுள்ள விமானத்தை பாறையின் தாங்கு திறனைச் சோதிதது் பார்க்காமல் கட்டியிருக்கமாட்டார்கள் என்று தோன்றுகிறது.

சுமார் 1.2 மீற்றர அல்லது 1.2 மீற்றர் சதுரத்தில் 0.6 மீ அல்லது 0.6 அல்லது 0.6 மீற்றர் அளவு கற்களை ஒவ்வொரு அடுக்கிலும் நான்கு கற்கள் என்ற கணக்கில் அடுக்கிக் கொண்டே போய் பாறையில் எப்போது விரிசல்கள் விழுகின்றன என்பதைக் கவனித்த பின்னரே கடைக்காலின் அளவுகள் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாறையின் மேல்வரும் அழுத்தம் குறித்த சோதனைகள் இக்கோயில் நிர்மாணித்த சிற்பிகள் மேற்கொண்டனர் என்பது இக்கோயிலின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

**பெரிய கோயிலின் விமான வடிவமைப்பு**

180 அலகுகள் உயரம் கொண்ட கோயில் விமானம் எவ்வாறு கட்டப்பட்டது என்பது

அலகுகள். இந்த மூன்று பகுதிகளுக்கும் அதன் உயரத்துக்கேற்ப தனித்தனியான சார அமைப்புகள் அமைக்கத் திட்டமிட்டிருந்தனர் என்று தெரிகிறது.

**சாரங்களின் அமைப்பு**

கருவறைக்கு ஒரு கீழ்தளமும் ஒரு மேல் தளமும் உள்ளன. மேல் தளத்தின் கூரை சரியாக 50 அலகுகள் (16.5 மீற்றர்) உயரத்தில் உள்ளது. இங்கு தான் முதல் கட்ட சாரம் - ஒரு சாய்வுப் பாதை முடிவுற்றது. ஒன்றுக்கு மேற்பட்ட சாய்வுப் பாதைகள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது தெரிகிறது. இவை பல ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் வகையில் அமைக்கப்பட்டன.

சாய்வுப் பாதையின் இருபக்கங்களிலும் கற்கள் - சுண்ணாம்புக் கலவை கொண்டு கட்டப்பட்ட உறுதியான சுவர்கள் இருந்தன. இந்த இரு சுவர்களுக்கு நடுவில் உள்ள பகுதி (4 அல்லது 5 மீற்றர் அகலம் இருக்கலாம்) பெரிய மற்றும் சிறிய உடைந்த கற்கள், துண்டுக் கற்கள் ஆகியவற்றால் நிரப்பப்பட்டன.

மண்ணால் அல்ல. யானைகள் செல்வதற்கு ஏற்ற மிதமான வாட்டத்துடன் அமைக்கப்பட்டன. மழைநீர் வடியவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோயிலின் திருமதில் சுவரும் (சுமார் 1 மீற்றர் குறுக் களவு கொண்டது) இதே பாணியில் கட்டப்பட்டிருந்தது என்பது குறிப்பிட்டதக்கது.

இரண்டாவது கட்டமாக 50 முதல் 100 அலகுகள் வரை (சுமார் 16.5 மீற்றரிலிருந்து 33 மீற்றர் உயரம் வரை) விமானம் கட்டுவதற்குச்சற்று மாறுபட்ட சாரம் தேவைப்பட்டது. இது அமைப்பில் சீனாவின் நெடுஞ்சுவர் போல் ஓர் அரண் மதில் சுவர் அமைப்பாக செங்குத்தான இரு சுவர்களையும், அதன் நடுவே முதல்கட்ட சாரத்தைப் போல் யானைகள்

அனைத்தும் முட்டுப் பொருத்துகள் மூலம் இணைக்கப்பெற்றன. இவை இரண்டாவது கட்ட மதில் அரண் சாரத்தில் நிலை நிறுத்தப்பட்டன. செங்குத்தான தூண்களும் நேர் சட்டங்களும் மேடைகளை விரும்பிய விதத்தில் அமைத்துக் கொள்ள உதவின.

அரண் மதில் உட்சுவரிலிருந்து



மேடைகளுக்குக் கற்களையும் சிற்பிகள் மற்றும் ஏனைய தொழிலாளர்களையும் எடுத்துச் செல்ல சாய்வுப் பாதைகள் அமைப்பது இம்முறையில் எளிதாக விருந்தது.

**தஞ்சை பெரியகோவில்**

மேலே கூறிய அமைப்பு ஒரு சாத்தியக் கூறு. இரண்டாவது கட்ட அரண் மதில் சுவர் சாரத்துக்கு முதல் கட்ட சாய்வுப் பாதைகள் கலைக்கப்பட்டு, அதன் கற்கள் பயன்படுத்தப்பட்டன. விமானக் கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிவுற்றதும் சாரங்கள் கலைக்கப்பட்டு, கற்கள், மண், மரம் அனைத்தும் கோயில் மதில் சுவர், மதில் சுவர் உள்புறத்தில் காணப்படும் துணைக் கோயில்கள், நுழைவுவாயில்கள், சாலைகள் அமைப்பது முதலிய கட்டுமானங்களில் எவ்வித சேதாரமுமின்றி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (முற்றும்)

---

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

### குறுக்கெழுத்துப் போட்டி - 522

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | 22 | | 24 |
| | 26 | 27 | 28 | | 30 |
| 31 | 32 | | | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **04.06.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 522
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காகக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 520- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஞா | 2 ப | 3 க | 4 ச | 5 க் | 6 தி |
| 7 தி | 8 கா | 9 ந் | ■ | ■ | 12 ச |
| ■ | 14 மா | 15 தி | 16 மை | ■ | 18 தி |
| 19 மே | ■ | ■ | 22 சூ | 23 ர் | 24 யா |
| 25 த | ■ | ■ | 28 ர் | 29 பு | 30 மா |
| 31 கு | 32 லி | 33 மா | ■ | 35 க | 36 ன |

**இடமிருந்து வலம்**

01. போன காலம் அல்லது சென்ற காலம்.
07. விசுவாமித்திர முனிவரால் சுவர்க்கத்திற்கு அனுப்பப்பட்ட இவரை இந்திரன் கீழே தள்ளிவிட, விசுவாமித்திரரால் இடையில் நிறுத்திவைக்கப் பட்டார். (குழம்பியுள்ளது)
15. படியாமை. (குழம்பியுள்ளது)
19. செய்வோன் அல்லது கர்த்தா. (திரும்பியுள்ளது)
26. ஒரு கை வளை அல்லது பணப்பரிமாற்றம் செய்யம் இடம் (குழம்பியுள்ளது)
31. அரபு நாடுகள் ஒன்றின் தலை நகர். (திரும்பியுள்ளது)
35. நெஞ்சு.

**மேலிருந்து கீழ்**

01. அவுஸ்திரேலியா நாட்டு பழங்குடியினரது மொழியில் 'தெரியாது' என்பதை இப்படி கூறுவர்.
02. நில் என்னும் ஏவல்.
03. இலங்கையில் முக்கிய நீர்த் தேக்கங்களில் ஒன்று.
04. திருநாவுக்கரசரின் சகோதரி. கடைசி இரண்டு எழுத்தும் மறைந்துவிட்டது. (குழம்பியுள்ளது)
05. கீழ்மை அல்லது கீழ்ப்படிந்த வேலை (குழம்பியுள்ளது)
18. ஆண்மக்கள்.
20. பசுபிக் பெரும் கடற்பகுதியில் அமைந்துள்ள 176 தீவுகளை உள்ளடக்கிய ஒரு தீவு நாடு (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 520 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**ம.சாரங்கன், முள்ளியவளை, முல்லைத்தீவு.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. த.சாளினி, கோவில் வீதி, தெல்லிப்பளை.
02. சீ.வரதன், 3ஆம் குறுக்குத்தெரு, குருநகர்.
03. எம்.நஷ்மியா, பிரதான வீதி, மாத்தளை.
04. மு.கோபிகன், சிவநகர், புதுக்குடியிருப்பு.
05. ந.செல்வமலர், மாசார், பளை.
06. சீ.றொசான், கச்சாய் வீதி, கொடிகாமம்.
07. த.புவனேஸ்வரி, நாவற்குழி, யாழ்ப்பாணம்.
08. கு.அபிராமி, கொள்ளுப்பிட்டி.
09. எம்.தெய்வநாயகம், தும்பளை, பருத்தித்துறை.
10. அ.சங்கவி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

# மீண்டும் எழுந்தாள்



**அவசரமாகத்** துணியிலே கீறிய கோட்டின்படியே வெட்டிக் கொண்டிருந்தான் மணியம். ஓரிரு நாட்களில் தங்கையின் திருமணம். சாறி பிளவுசுக்கும், சல்வார் கமீசுக்கும் வரப்போகிறார்கள் என எண்ணினான். கண்ணம்மாவிடம் தைத்து முடிந்ததைக் கை வேலைகளுக்காகக் கொடுத்தான். இரவு ஏழு மணி இருக்கும் முகுந்தன், ஓடி வந்த வேகத்தில் வாசலிலே புத்தகமும் பேனாவும் வீசுப்பட விழுந்தான். மகனை ஏதென விசாரிக்க வெளியே வந்த மணியம் வீதியால் அலறி அடித்துக் கொண்டு ஓடிய தாசனைக் கண்டு கூப்பிட்டபடியே பின்னால் ஓடினான்.

முகுந்தனை எழுப்பிக் கண்ணம்மா தண்ணீர் கொடுத்த பின்தான் கடற்கரையில் ஓர் வீதியில் உள்ள வீடுகளுக்குள் கடல் தண்ணீர் மெதுமெதுவாக வந்த விடயத்தைக் கூறினான். நெடுநேரமாகியும் கணவனைக் காணவில்லை என யோசித்தபடி, கொடுத்த வேலையை அமைதியாகச் செய்தாள். அவர்கள் வாழும் பகுதியால் ஓரிருவர் சைக்கிளில் போவதையும், சிலர் வேகமாக நடப்பதையும் அவதானித்தவள், எந்தப் பதற்றமும் இன்றி வாசலண்டையில் கணவனை எதிர்பார்த்தபடி இருந்துவிட்டாள்.

ஓட்டமாய் ஓடிய மணியம். இனிமேலும் காணமுடியாத இடத்துக்குப் போனதை அவளறி-வாளோ? அங்கு ஒவ்வொரு நூறு நூற்றைம்பது யார் தூரத்தில்தான் ஒரு வீட்டைக் காணலாம். நடுச் சாமத்தில் கண்ணம்மாவை அழைத்தபடி மல்லிகாவும் மகளுமாய் அலறியடித்துக் கொண்டு வரவும்தான் மணியம் தொலைந்தே போய்விட்டிருப்பான் என ஊகித்தாள்.

மல்லிகாவின் வீட்டினுள்ளும் கடல் நுழைந்ததும் மகளும் அவளும் வெளியே வரவும் கணவன் ரவி 'மடைச்சி வா உள்ளே வெருளாதே" என்று கத்தியடி போனதை மட்டும்தான் கண்டாளாம். சுவர் வந்ததுபோல வெள்ளையாக ஏதோ தெரிந்ததாம். என்னவென்றால் தெரியவே இல்லையாம். பார்த்துப் பார்த்து ஓட்டத்தில் ஓடி அடுத்த சந்தி வந்ததும்தான் அது பேரலை, பேயலை – என்று தெரிந்ததாம்.

அந்த சாமம் ரவி, மணியம் – இன்னும் எத்தனையோ பேரைப் பலி கண்டுவிட்டது.

கண்ணம்மாவும் பிள்ளைகள் மூவரும், மல்லிகாவும் பிள்ளையள் வேற்றூர் சென்று வாழ்க்கையைத் தொடங்கினர். படிக்கப்போய் வந்து முகுந்தனுக்கு வழியின்றிக் கலங்கக் கண்ணம்மா கலங்கிவிடாது கணவனின் தொழிலையே செய்துவந்தாள்.

மூவரின் உணவு, படிப்பு எனப் பலவித தேவைகளைத் தனியாளாக மிகவும் இன்னற்பட்டு பூர்த்தியாக்கினாள். மல்லிகாவும், பிள்ளையும்கூட கை உதவியாக இருந்தார்கள். மல்லிகா ஆசிரியை. அவளின் உதவியும் பிள்ளைகளுக்குக் கிட்டியது. முகுந்தன் படித்து உயர்தரத்திலும் சித்தியெய்தி ஒரு கம்பனியில் எழுதுவினைஞராகச் சேர்ந்தான். தங்கை சற்றுப் பின்தங்கியவள் ஆகையால் அம்மாவுக்கு உதவியாக இருந்தாள். கடைசித் தங்கை படித்து ஆங்கில ஆசிரியராகப் பணியேற்றாள். கண்ணம்மா கணவனைத் திடீரென பறிகொடுத்த நிலையிலும், மல்லிகாவையும் ஆதரித்துத் தன் பிள்ளைகளையும் வளர்த்து வழிகாட்டி, ஆளாக்கிவிட்டாள். நல்ல வாழ்க்கையில் இருந்தவள், எல்லாம் இழந்தநிலையிலும் மீண்டு முயற்சியால் வெற்றி பெற்றாள்.

**சோ.சுகன்ஜா, நயினாதீவு.**

[யாவும் கற்பனையே]

# காதல் மேகங்கள்

**காலைக்** கதிரவன் கண் விழிக்க முன்பே மூன்று மணிக்கெல்லாம் நந்தினி எழுந்துவிடுவாள். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு படிக்க ஆரம்பித்து விடுவாள். அவள் தனது வளர்ப்புத் தாயாருடன் சிறு வயதில் இருந்தே வளர்ந்து வருகின்றாள். தாய், தந்தையர்கள் அடுத்த ஊரில் வசித்து வருகின்றார்கள். அவளுக்கு மூன்று சகோதரர்கள் இருந்தாலும் அவள் வளர்ப்புத் தாயாரால் கஷ்டம் தெரியாமல் வளர்க்கப்பட்டாள். எப்போதுமே சிரிப்பு அவள் முகத்தில் விளக்கு ஏற்றியது போல மின்னும். என்னதான் செல்லப் பிள்ளையாக இருந்தாலும் அவள் வீட்டிற்கு முதற்பிள்ளை என்ற பொறுப்பும், வளர்ப்புத் தாயின் செல்லப்பிள்ளை என்ற பெருமிதமும் இருக்கவே செய்தது.

நந்தினி பாடசாலை - ரியூசன் என்று மாறி மாறி சென்றுவருவாள். வீட்டிலும் வந்து கவனமாகப் படிப்பாள். புலனை வேறு திசையில் விடுவது கிடையாது. அவள் தினமும் பிரதான வீதியூடாகவே பாடசாலை, ரியூசனுக்குச் சென்றுவருவது வழக்கமாக இருந்தது. இவளும், அவளுடைய வளர்ப்புத் தாயாரும் ஒரு வாடகை வீட்டிலேயே இருந்துவந்தனர். அந்த வீட்டில் கரண்ட் இல்லை. மின்னுகின்ற எண்ணெய் விளக்கு வெளிச்சத்திலே அவள் படிப்பது அனைவரும் அறிந்ததே. ஆனாலும் அவள்தான் வகுப்பில் முதல்நிலை மாணவியாகத் திகழ்ந்தாள். அவளுடைய வகுப்பாசிரியரும் அவளைத் தனது சொந்தப்பிள்ளையைப் போல் ஆர்வப் படுத்தி ஊக்கமூட்டி வந்தார். இவ்வாறு அவள் திறமையுடன் கூடிய சிறு அழகும், அவளைப் பார்த்தவர்களை மீளவும் பார்க்கவே செய்தது. பலர் அவள் வந்து அவளைத் தொல்லை செய்வது வழக்கம். அவற்றையெல்லாம் அவள் ஒருபோதும் பொருட்படுத்துவதே இல்லை. அவள் காரியத்திலே கண்ணாக இருந்தாள். அதற்காக அவள் துறவி போல் 'இருந்தவள் அல்ல. காதல் பற்றிப் பேசுவாள். கருத்துக்களை ஏற்பாள். ஆனால் அவள் மட்டும் காதல் என்ற விடயத்தில் மிகவும் இறுக்கமாகவே இருந்தாள். இவ்வாறு அவளது பொழுது படிப்பிலும், வானொலி கேட்பதிலும், பத்திரிகை வாசிப்பதிலும் கழிந்தது.

அவளுடைய உயர்தரப் பரீட்சைக்கு ஒருவருடம்தான் இருந்தது. பரபரப்பாகப் படிக்கவேண்டிய நேரம் அவள் மனம் தடுமாறினாள். அதற்கு காரணம்தான் என்னவோ? கல்மனமும் கனிந்து விட்டது. அவளுடைய தகப்பனார் எப்போதுமே சாதிப்புராணம் பாடுவதால் அவளுக்கு இதற்கு முன்னர் காதல் எண்ணங்கள் தோன்றுவதில்லை. அது இப்போது என்ன மாதிரி மாறியது என்பதை அவள் அறியமாட்டாள். அவ்வளவு வலிமை அன்பிற்கு மட்டுமே உண்டு. கண்களும் உள்ளங்களும் மட்டுமே பேசியது. ஆனால் வாய்மட்டும் பேசாமல் காதல் மலர்ந்தது. அவள் தினமும் பிரதான வீதியூடாக சென்று வரும்போது அவனை அடிக்கடி காண்பது வழக்கம்.

கட்டுமஸ்தான உடல், அழகான முகம். மயக்கும் கண்கள், அழகில் அவனே மன்மதன் என்று கூறலாம். அவன் நந்தினியை அடிக்கடி காண்பதால் அவளை ஓரளவு அவனுக்கும் தெரியும். அவனும் பிரதான வீதியில் உள்ள கடை ஒன்றில் வேலை செய்கின்றான். காலை ஏழு மணிக்கு கடையைத் திறப்பதற்காக வருவது வழக்கம். அவ்வாறு வரும்போதே வெள்ளை நிற ஆடையில் செல்லும் நந்தினியை அவன் காணுவான். அடிக்கடி பார்ப்பதால் இருவருக்கும் சிரிப்பு வருவது இயல்பு. அந்த ரீதியில் அவன் அவளைப் பார்த்து சிரிக்க அவளும் பதிலுக்கு சிரித்துவிட்டுப் போவாள். அன்று அவள் தனது தோழிகளிடம் விசாரித்தாள். அவன் யார்? ஊர், எதுவுமே அவளுக்குத் தெரியாது. அவளுடைய தோழியான வசந்தா "அவரைத் தனக்கு தெரியும். அவர் பெயர் நிரூபன். அவர் ரொம்ப நல்லவர். ஏன் ஏதாவது பிரச்சினையா நந்தினி?" என்று விசாரித்தாள். அதற்கு நந்தினி 'இல்லை, ஒன்றுமில்லை... வசந்தா' நீ இல்லை... இல்லை என்னும் போதே ஏதோ இருக்கிறது என்று தோன்றுகிறது. சரி சரி நடக்கட்டும். என்றாள். அதற்கு நந்தினி 'சும்மா போ வசந்தா' என்று சிணுங்கினாள்.

அவள் தன்னை விசாரித்ததை அவன் அறிந்துகொண்டான். அவளும் தன்னை விரும்புகிறாள் என்று எண்ணினான். அவள் பாடசாலை செல்லும் நேரங்களில் அவளைப் பின்தொடர்ந்து வர ஆரம்பித்தான்.

ஒரு நாள் அவ்வாறு வந்தவன் 'என்ன நீங்கள் கதைக்க மாட்டீங்களோ அற்லிஸ்ற் ஒரு வார்த்தையாவது கதையுங்களேன்' என்றான். அவளோ எதுவுமே பேசாமல் பதறி அடித்துக் கொண்டு ஓடினாள். இவ்வாறு தினமும் காலையும் மாலையும் காண்பது வழக்கமாயிற்று.

வழமைபோல படிக்கும்போது அவன் நினைவுகள் வந்து அவள் நித்திரையை குழப்பிச் செல்லும். தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன் வழமைபோல அவள் பாடசாலை போகும்போது அவன் வந்தான். 'நீங்கள் கதைக்காவிட்டால் பரவாயில்லை. அட்ரசைத் தாங்கோ. தீபாவளிக்குக் காட் போடுகின்றேன் என்றான். அவள் அதற்குப் பதில் எதுவுமே பேசவில்லை. தினமும் நிரூபன் நந்தினியைப் பின் தொடர்வதைப் பலர் கண்டனர். ஆனால் ஒருவரும் சந்தேகப்படுவதில்லை.

அவள் மனமோ அவனிடம் நேரில் எதுவுமே கதைக்காமலேயே அவனை விரும்பியது. அவர்களின் பார்வைகள் மட்டும் பேசின.

அன்றொரு நாள் அவள் படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய சிற்றன்னையின்

மகனான தனுஷன் வந்தான். "என்ன நந்தினி படிக்கிறாயா? படிச்சா மட்டும் போதாது? ஆட்கள் உன்னைப் பற்றி கதைக்காமல் நடந்துக்கோ. அவன் ஆர்?" என்ன ஆட்கள்? எண்டு தெரியுமோ. அதுவும் பெரியப்பாவின்ர குணம் தெரிஞ்ச நீயா இப்படி. ஒரு சிறு அவமானம் கூடத் தாங்கமாட்டாத அவர் இதை அறிஞ்சால என்ன செய்வார் எண்டதை என்னால நினைக்கவே முடியவில்லை. இவ்வளவு படிச்ச நீயா இப்படி?, விசாரிச்ச அளவில் பொடியன் நல்லவன்தான்.

ஆனால் சமூகத்துக்கு இது பொருந் தாதே. ஏதோ உன்னிலும் சிறியவன் நான் உனக்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. நீ யோசித்து முடிவு எடுப்பாய் என்று நினைக்கிறன். நான் போட்டு வாறன் அக்கா. நல்லாய்ப் படி. பரீட்சையும் வருகிறது. யூனிவர் சிற்றிக்குபோக வேண்டும்" என்று கூறிவிட்டுச்சென்றான். இவ்வளவு காலமும் அவனது நல்ல மனதை மட்டுமே விரும்பிய அவள் இன்று தான் அவனது சமூகப் பிரிவினையை எண்ணிக் கவலையடைந்தாள். அன்று அவளால் படிக்கவும் முடியவில்லை. நித்திரை செய்யவும் முடியவில்லை. அன்றிலிருந்து அவனை அடிக்கடி பார்ப்பது குறித்து கவலையடைந்தாள்.

அவனைப் பார்த்து சிரிக்காது போனாள். ஏனென்று நிரூபனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவளுக்கும் அவனை மறக்க முடியவில்லை. ஒருவாறு பல்லைக் கடித்துக் கொண்டு படித்தாள். கல்வியே நிலையானது என்று அவள் உணர்ந்து படித்தாள். பரீட்சையும் ஆரம்பமாகியது. அவள் பிள்ளையார் கோவிலுக்கு சென்றுவிட்டே தினமும் பரீட்சைக்குப் போவாள். அவளுடைய மூன்று பாடங்களிலும் சிறப்பாகச் செய்தாள்.

"எப்படி நந்தினி பரீட்சை செய்தியா" என்று கேட்டால் "பரவாயில்லை" என்றே பதில் கூறுவாள்.

பரீட்சை முடிந்த இரண்டு வாரங்களின் பின் அவள் ஆங்கில வகுப்புக்குச் சென்று வந்தபோது அவளை அவன் கண்டான். கண்டதுமே அருகில் வந்து. "நந்தினி ஒரு நிமிஷம்... நான் நாளைக்கு வெளிநாட்டுக்குப் போகப் போகிறேன். அதுதான் உங்களிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தனான் என்றபோது நந்தினியின் மௌனம் கலைந்தது "என்னை மன்னித்துக்கொள்ளுங்கோ. நான் உங்களை..." என்று இழுத்தாள்...

"என்ன நந்தினி சொல்ல வந்ததை தெளிவாகச் சொல்லுங்கோ..." என்றான் நிரூபன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ. நான் உங்களை விரும்பியது உண்மை. பின்னர் உங்களோடு கதைக்காதது்க்குக் காரணம் நாங்கள் இணைந்து வாழமுடியாது. இந்தச் சமூகம் எங்களை வாழவிடாது. என்னை வளர்த்தது பெரியம்மா. அவர்களுக்கு இதுவரையில் நான் எந்தவித சந்தோசத்தையும் கொடுக்கவில்லை.

அதுவும் நான்தான் குடும்பத்தில் மூத்தபிள்ளை. நான் உங்களுடன் வந்துவாழ வேண்டும் என்ற என் சுயநலத்தினால் எனது சகோதரர்களின் வாழ்க்கை பாதிக்கப் படும்.

நீங்கள் சந்தோசமாய் போயிட்டு வாங்கோ. கவலைப்படாதேங்கோ. நீங்கள் நல்லாய் வாழவேண்டும். உழைப்பு உழைப்பு எண்டு ஓடாம உடம்மையும் கவனியுங்கோ. வேறை என்னத்தைச் சொல்ல. நீங்களும் நானும் சேரமுடியாது. என்னை மறந்திடுங்கோ. நீங்கள் காலாகாலத்தில் கலியாணம்செய்து போட்டோவை அனுப்பிவையுங்கோ என உள்ளத்தின் பாரத்தை படபடவென இறக்கி வைத்தாள். அவர்கள் இருவருடைய கண்களிலும் கண்ணீர் மழையாகப் பொழிந்தது. அன்று தான் நந்தினி நிரூபனுடன் கதைத்தாள். அன்றே பிரிந்துவிட்டாள். மூன்று மாதங்கள் உருண்டோடியது. பரீட்சை முடிவுகளும் வந்தன. நந்தினி பாடசாலையிலேயே சிறந்த பெறுபேறு பெற்று யூனிவர் சிற்றிக்கு தெரிவானாள். இருந்தும் அவள் மனம் வெற்றியைக் கொண்டாடாமல் சோகத்திலே மூழ்கியது. ஏனெனில் அவன் தோல்வியடைந்த அந்த விடயத்தை தியாகம் செய்தே இந்த வெற்றியைப் பெற்றாள். இந்தச் சமூகத்திலே அந்த இரு உள்ளங்களும் இணையமுடியாவிடினும் இவர்கள் கொண்ட தூய காதல் என்றுமே வாழும். அவர்கள் மனதில் மட்டும் வாழும். இதுவும் ஒரு சமூகத்தின் காதல் தோல்வியே.



**அன்பு ஒரு போதும் அழியாது**
**அன்பு ஒரு பேரதும் தன் நலம்**
**நாடாது.**
**அன்பு இழிவானதை செய்யாது.**
**அன்பு பொறுமை உள்ளது.**
**அன்பு தீவினையில் மகிழ்வுறாது.**
**மாறாக உண்மையில் அன்பு**
**மகிழும்**
**அன்பு அனைத்தையும்**
**பொறுத்துக்கொள்ளும்.**
**அன்பு அனைத்தையும் நம்பும்.**
**அன்பு தீங்கு நினையாது.**
**அன்பு அனைத்திலும் மன**
**உறுதியாய் இருக்கும்.**

(யாவும் கற்பனையே)

**ந.நமில்டன், ஊர்காவற்றுறை.**

ஊரோடி




> பிரேமசிறியின் காணியை எழுதி பெற்றுக்கொண்ட தினத்தன்று விமலசேனவுடன் பிரேமசிறியும். சாட்சிக் கையெழுத்துப் போட்ட விவசாய உத்தியோகத்தரும் சென்றுள்ளனர். விவசாய உத்தியோகத்தர் விமலசேனவின் வீட்டில இருந்து செல்லும்வரை பிரேமசிறி காணிக்கான பணத்தைப் பெற்றிருக்கவில்லை. எனவே விவசாய உத்தியோகத்தர் விமலசேனவின் வீட்டில் இருந்து சென்றதும் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பிரேமசிறி விமலசேனவின் வீட்டில் இருந்துள்ளார். பின்னர் அன்று மாலை விமலசேனவும் பிரேமசிறியும் மது அருந்தியுள்ளனர். பிரேமசிறிக்கு போதையானதும் பொல்லொனறை எடுத்து அவரின் தலையில் அடித்துக் கொலை செய்துள்ளார்.



# காணி விற்றவர் உயிரை இழந்தார்

பெரலிகல கிராமத்தில் விவசாயம் செய்துவந்த பிரேமசிறி என்பவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். கிராமத்தவர்கள் அவரை கீத் என்று அன்போடு அழைப்பது வழக்கம். கிராமத்தவர்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் தனது வேலையைச் செய்து பிரேமசிறி மரியாதைக்குரியவராக விளங்கினார்.

பிரேமசிறி பெரலிகல பிரதேசத்தில் விவசாயம் செய்துவந்த அதேவேளை அவரின் மனைவியான ரொசலினும் இரு பிள்ளைகளும் பெலியத்த, நெலவ பிரதேசத்தில் வசித்துவந்தனர். ஆகையால் பிரேமசிறி சுமார் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தனது மனைவி பிள்ளைகளை பார்ப்பதற்காக நெலுவ பகுதிக்குச் சென்றுவருவதுண்டு.

மனைவி பிள்ளைகள் மீது அளவற்ற அன்பு வைத்திருந்த பிரேமசிறி பெலியத்த பகுதியில் விவசாயம் செய்து வந்தமையால் அதிக காலத்தை அங்கேயே செலவிடவேண்டியிருந்தது. இருந்தபோதிலும் கையில் கொஞ்சம் பணம் கிடைத்தால் உடனே மனைவி, பிள்ளைகளைப் பார்ப்பதற்கு பறந்துவிடுவார். அதே போன்று மனைவி பிள்ளைகளும் அவர் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தனர்.

பெரலிகல பிரதேசத்தில் விவசாயம் செய்துவந்த பிரேமசிறிக்கு அங்கு சுமார் மூன்றரை ஏக்கர் காணி இருந்தது. அதனை விற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த பிரேமசிறி அது பற்றி கிராமத்தில் சிலரிடம் கூறியிருந்தார். ஆனால் இவ்விடயம் பற்றி எதனையும் பிரேமசிறியின் மனைவி அறிந்திருக்கவில்லை.

கடந்த மார்ச் 13 ஆம் திகதியன்று வழக்கொன்றுக்காக திஸ்ஸமஹாராம நீதிமன்றத்துக்கு பிரேமசிறி சென்றிருந்தார். அங்கு தனது காணியை விற்பது தொடர்பாகவும் கூறியிருந்தார்.

அவசர பணத்தேவை காரணமாக தனது மூன்றரை ஏக்கர் காணியை ஏழு இலட்சம் ரூபாய்க்கு விற்கவுள்ளதாகவும் யாராவது இருந்தால் அது பற்றி பேசுமாறும் விமலசேனவிடம் பிரேமசிறி கூறியுள்ளார். அதன்போது பதிலளித்த விமலசேன ஐந்து இலட்சம் ரூபாய்க்கு காணியைத் தந்தால் தானே அதைக் கொள்வனவு செய்து கொள்வதாகக் கூறியுள்ளார்.

விமலசேனவின் கோரிக்கைக்கு இணங்கிய பிரேமசிறி தனது மூன்றரை ஏக்கர் காணியை ஐந்து இலட்சத்துக்கு கொடுப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். உடனே இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறி, சமாதான நீதவான் ஒருவரைச சந்திக்கச் சென்றனர். அதாவது சத்தியக் கடதாசி மூலம் காணியைத் தனது பெயருக்கு மாற்றிக் கொள்வதற்காகவே விமலசேன பிரேமசிறியுடன் சென்றுள்ளார்.

இவ்வாறு சமாதான நீதவானைச் சந்திப்பதற்குச் சென்ற விமலசேன மற்றும் பிரேமசிறி ஆகிய இருவரும் சாட்சிக் கையெழுத்திடுவதற்காக அப்பிரதேசத்தைச் சேர்ந்த விவசாய திணைக்கள உத்தியோகததர் ஒருவரையும் அழைத்துச்சென்றனர். இவ்வாறு அம்மூவரும் சமாதான நீதவான் ஒருவருடைய வீட்டுக்குச் சென்று காணி விற்பனை விடயம் தொடர்பாக அவரிடம் கூறியுள்ளனர்.

காணி கைமாறுவது தொடர்பான சத்தியக்கடதாசியில் ஒட்டுவதற்கு 500 ரூபாய் முத்திரை வேண்டும். அத்துடன் சத்தியக் கடதாசியில் உள்ளடங்கவேண்டிய விடயங்களைக் கணினி அச்சுப் பதிவுசெய்து கொண்டு வருமாறு கூறி சத்தியக்கடதாசி உறுதிப்படுத்தல் வழங்கப்படும் தாளொன்றை அவர்களிடம் கொடுத்து அனுப்பியுள்ளார்.

சமாதான நீதவான் கூறியதைப் போன்று ஆவணங்களை தயார்ப்படுத்திக் கொண்டதுடன் அம்மூவரும் 500ரூபாய் முத்திரையுடன் அடுத்த நாள் சமாதான நீதவான் வீட்டுக்குச் சென்றனர். குறித்த ஆவணத்தின் பிரகாரம் பிரேமசிறிக்கு சொந்தமான மூன்றரை ஏக்கர் காணியை விமலசேன என்பவருக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கு விற்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே அந்தக் காணியை விற்பவரின் கையொப்பத்தினைப் பெற்றுக்கொண்ட சமாதான நீதவான் தனது உறுதிப்படுத்தலுக்கு முன்னர் விமலசேனவிடம் பணம் எங்கே எனக்கேட்டுள்ளார்.

உடனே விமலசேன பணத்தினை வீட்டில் வைத்துக் கொடுப்பதாகவும் சத்தியக் கடதாசியில் உறுதிப்படுத்தித் தருமாறும் கோரியுள்ளார். அதற்கு பிரேமசிறியும் விருப்பம் தெரிவித்தமையால் சாட்சியின் கையொப்பத்தினையும் பெற்றுக்கொண்ட சமாதான நீதவான் சத்தியக் கடதாசியை உறுதிப்படுத்தி வழங்கினார்.

காணி கொடுக்கல் -வாங்கல்கள் தொடர்பான சகல வேலைகளும் நிறைவடைந்ததும் சாட்சிக்கு கையொப்பமிட்ட விவசாய உத்தியோகத்தர் பிரேமசிறி ஆகியோர் விமலசேனவுடன் அவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். பின்னர் விவசாய உத்தியோகத்தர் அங்கிருந்து துவிச்சக்கர வண்டியில் தனது வீட்டுக்குச்சென்றுள்ளார். அதேவேளை பிரேமசிறி காணிக்கான பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக விமலசேனவின் வீட்டிலேயே இருந்துள்ளார்.

கடந்த மார்ச் 14 ஆம் திகதியே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இவ்வாறு இரண்டு வாரங்கள் உருண்டோடியது. ஆனால் பிரேமசிறி தனது மனைவி பிள்ளைகளைப் பார்ப்பதற்கு வீட்டுக்குச் சென்றிருக்கவில்லை. கணவனின் வருகைக்காக மனைவி அன்போடு காத்திருந்தாள்.

இவ்வாறு இச்சம்பவம் நிறைவடைந்து இரண்டு வாரங்களுக்கு பின்னர் பெரலிகல பிதேசவாசியான ஜயசிறி என்பவர் பிரேமசிறியின் மனைவியான ரொசலின் என்பவரைச் சந்தித்துள்ளார். அதன்போது "அக்கா பிரேமசிறி அண்ணா அந்தக் காணியை விற்றது அநியாயம்தானே. அதை விட அதிகமான விலைக்கு அதனை விற்றிருக்கலாம்." இந்தச் செய்தியானது ரொசலின் செவிக்கு எட்டியதும் அவள் அதிர்ச்சியடைந்தாள். "என்ன தம்பி பிரேமசிறி அண்ணை காணியை விற்றுள்ளாரா? எனக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாதே..."

"என்ன அக்கா அந்தக் காணியை விமலசேன அண்ணா ஐந்து இலட்சத்துக்கு கொடுத்துவிட்டார்தானே" என்று கூறியுள்ளார்.

"ஐய்யோ எனக்கு இந்த விடயம் எதுவுமே தெரியாதே" என்ற ரொசலின் குறித்த விடயம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக அன்றே பெலியத்தவிலிருந்து கணவனைச் சந்திப்பதற்காக பெரலிகலவிற்கு சென்றுள்ளார். இவ்வாறு சென்று பார்த்தபோது தனது கணவனுக்குச் சொந்தமான காணியை விமலசேன சுத்தம் செய்துகொண்டிருந்துள்ளார்.

தமது காணியை விமலசேன சுத்தம் செய்துகொண்டிருந்ததைக் கண்ட ரொசலினுக்கு மனதில் கடும் ஆத்திரம் ஏற்பட்டுள்ளது. அந்த ஆத்திரத்தோடு கணவனை தேடிச் செல்கிறாள் ரொசலின். ஆனால் கணவனை எங்கும் காண முடியாததால் அவர் தமது காணியை சுத்தம் செய்துகொண்டிருந்த விமலசேனவை நோக்கி வந்துள்ளாள்.

ரொசலினைக் கண்ட விமலசேன இந்தக் காணியை நான் வாங்கிவிட்டேன். அதற்கான ஐந்து இலட்சம் ரூபாய் பணத்தையும் கொடுத்துவிட்டேன் எனக் கூறியுள்ளார். உடனே ரொசலின் "சரி பிரேமசிறி இப்போ எங்கே" எனக் கேட்க "அவர் கடலுக்குப் போவதாக சொல்லிவிட்டுச் சென்றார்" என விமலசேன கூறியுள்ளார்.

விமலசேன கூறிய இந்த விடயமானது ரொசலினுக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது பிரேமசிறி கடலுக்குச் செல்வதை நிறுத்தி சில காலமாவதால் மனைவிக்கு இவ்வாறு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு காணியை விற்று பணத்தை பெற்றுக் கொண்டவர் ஒரு சிறிய தொகைப் பணத்துக்காக அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு கடலுக்குச் செல்வாரா என்றும் அவள் நினைத்தாள்.

இவ்வாறு பல்வேறு கேள்விகள் தன்னைக் குடைந்தெடுக்க, கணவனுக்கு ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டிருக்குமோ என்று அச்சமடைந்த ரொசலின் உடனே லுணுகம்வேஹெர பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அது பற்றி முறையிட்டுள்ளார். அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் லுணுகம்வேஹெர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

காணியை விற்ற பிரேமசிறி பணத்துடன் எங்காவது சென்றுவிட்டாரா? அல்லது அவரை யாராவது கொலைசெய்து விட்டார்களா?. இல்லையெனில் அவரின் காணாமல் போதலுக்கு வேறு ஏதாவது காரணங்கள் உண்டா? எனப் பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

காணியை விற்று ஐந்து இலட்சம் ரூபாய் பணம் பெற்றுக் கொண்டவர், அதனை வீட்டுக்குக் கொண்டு செல்லாமல் சிறிய தொகைப் பணத்துக்காக கடலுக்குச் சென்றிருக்கமாட்டார் என்பதை விசாரணைகள் மூலம் அறிந்துகொண்ட பொலிஸாருக்கு காணியைப் பெற்றுக் கொண்ட விமலசேனவின் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் பொலிஸார் விமலசேனவைக் கைது செய்துள்ளனர்.

விமலசேனவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தன்னிடம் காணிக்கான ஐந்து இலட்சம் ரூபாய் பணத்தினைப் பிரேமசிறி பெற்றுக்கொண்டதாகவும் பின்னர் கடலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றதாகவும் வாக்குமூலம் வழங்கியுள்ளார். இருந்தபோதிலும் பொலிஸார் அதனை நம்பவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை லுணுகம்வேஹெர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்திக்க கமஹே தலைமையிலான குழுவின் மேற்கொண்டு வந்ததுடன் அதற்கு மேலதிகமாக மேலும் மூன்று பொலிஸ் குழுக்களும் விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். அதனடிப்படையில் இந்தக் காணி விவகாரத்துடன் தொடர்புடைய சகலரிடமும் அதேபோன்று பிரேமசிறியின் மனைவியிடமும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பிரேமசிறியின் காணியை வாங்குவதற்கு விமலசேனவின் எப்படிப் பணம் வந்தது?. மற்றும் காணிக் கொள்வனவும் போது சாட்சிக் கையெழுத்திட்டவர் மற்றும் சமாதான நீதவானிடம் பெற்றுக் கொண்ட வாக்குமூலங்கள் போன்றவற்றின்படி விமலசேனவின் மீதான சந்தேகம் பொலிசாருக்கு அதிகரித்தது.

எனவே பல்வேறு கோணங்களில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் பிரேமசிறி படுகொலை செய்யப்பட்டு தென்னந்தோட்டத்தில் புதைக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது. அதாவது தொடர்ச்சியாக விமலசேனவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலமாகவே அந்த இரகசியம் வெளிவந்துள்ளது.

பிரேமசிறியின் காணியை எழுதிப் பெற்றுக்கொண்ட தினத்தன்று விமலசேனவுடன் பிரேமசிறியும். சாட்சிக் கையெழுத்துப் போட்ட விவசாய உத்தியோகத்தரும் சென்றுள்ளனர். விவசாய உத்தியோகத்தர் விமலசேனவின் வீட்டில் இருந்து செல்லும்வரை பிரேமசிறி காணிக்கான பணத்தைப் பெற்றிருக்கவில்லை. எனவே விவசாய உத்தியோகத்தர் விமலசேனவின் வீட்டில் இருந்து சென்றதும் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பிரேமசிறி விமலசேனவின் வீட்டில் இருந்துள்ளார். பின்னர் அன்று மாலை விமலசேனவும் பிரேமசிறியும் மது அருந்தியுள்ளனர். பிரேமசிறிக்கு போதையானதும் பொல்லொன்றை எடுத்து அவரின் தலையில் அடித்துக் கொலை செய்ததாக சந்தேக நபரான விமலசேன பொலிஸ் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு கொலை செய்த பிரேமசிறியை அருகில் இருந்த தென்னந்தோப்பில் குழிதோண்டி புதைத்துவிட்டு அதன்மீது தென்னங் கன்றொன்றை நாட்டியுள்ளார். சந்தேக நபரிடம் பெற்றுக் கொண்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் கடந்த மார்ச் 24 ஆம் திகதி பிரேமசிறியின் சடலம் மீட்கப்பட்டது.

இக்கொலைச் சம்பவத்தின் சந்தேக நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். எந்தவொரு குற்றத்தையும் செய்துவிட்டு நிரந்தரமாகத் தப்பித்து இருக்கமுடியாது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணமாகும். இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரின் பெயர் மாற்றப்பட்டுள்ளது.



ஜோசப் கிருஷ்ணா

## விளையாட்டு

# தீமைகள் எரியட்டும்

**ஐ.பி.எல்.** அட்டகாசமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்றெழுதி மை காயுமுன்னமே ஆட்ட நிர்ணய அதிரடிச் செய்திகள், ரசிகர்களைப் பெருங்குழப்பத்தில் ஆழ்த்திவிட்டன. பாகிஸ்தான் மும்மூர்த்திகள் இதே தவறால் தம் எதிர்காலத்தை அழித்துக்கொண்டிருக்க, இப்போது ஐ.பி. எல் மும்மூர்த்திகள் பாழும் கிணற்றில் வீழுந்துவிட்டு, இப்போது கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



தொடர்ந்து பல்வேறு பெயர்களும் இதனுடன் இணைந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. பிரட்ஹொட்ஜ், அஜன்கியா ரானே இருவரும் விசாரிக்கப்படவுள்ளனர் என்றொரு செய்தி வந்துள்ளது. மேலும் சாதாரண நடைமுறை விசாரணைக்காக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளரான ஷில்பா ஷெட்டி, அணித்தலைவர் ராகுல் டிராவிட் இருவரும் அழைக்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளிவருகின்றன. இதற்கிடையில் தன் மகன் சிறிசாந்தின் எதிர்காலத்தை டோனியும், ஹர்பஜனும் அழித்துவிட்டார்கள், என்று சிறிசாந்தின் தந்தை ஒப்பாரி வைக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை வேறு காரணங்களை முன்வைத்து இவர்களை குற்றஞ்சாட்டுகிறாரா அல்லது ஆட்ட நிர்ணயச் சதியைக் காரணங்காட்டிக் குற்றம் சாட்டுகிறாரா தெரியவில்லை. இன்னொருபுறம் அவுஸ்திரேலிய வீரர் ஷோண் டெய்ட், சிறிசாந்த் உட்பட மூவரின் கைதுக்கும் தனக்கும் எதுவித தொடர்பும் இல்லை. அநாவசியமாகத் தன் பெயரையும் இதில் சம்பந்தப்படுத்தப் பார்க்கிறார்கள் என்று கூறுபவர், தான் எந்தவகையிலும், எந்தவிதக் குற்றங்களும் செய்யவில்லை என்கிறார்.

மிகவும் சீராகச் சென்று கொண்டிருந்த ஆறாவது ஐ.பி.எல் இந்த ஆட்டநிர்ணய சதி தொடர்பான ஆதாரபூர்வமான கைதுகளுடன் சிறிது ஆடித்தான் போய்விட்டது என்றாலும் ஐ.பி.எல் இதற்குப் பொறுப்பல்ல என்ற வகையில், அதன் அத்திவாரத்தை அசைக்க முடியாது என்பது உண்மை.

ரசிகர்களின் பக்கதில் இருந்து பார்க்கும் போது, மிகத் தூய்மையான ஆரோக்கியமான போட்டியொன்றைப் பார்க்கிறோம் என்று இந்த ஆட்டங்களில் தங்களை ஆழ்த்திக் கொண்டவர்களின் நிலைதான் பரிதாபமானது. ரசிகர்கள் நீண்டகாலமாக இடைக்கிடை இத்தகைய சம்பவங்களால் ஏமாற்றப்பட்டுக் கொண்டே வந்திருக் கிறார்கள். அதன் உச்சம்தான் தற்போதைய சிறிசாந்த், சண்டில்லா, அன்கிட் சவான் விவகாரம்.

இதில் சில முக்கியமான கண்ணோட்டங்கள் உண்டு. மிகச் சிறிய உதிரிகள்தான் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். எனவே மிகப் பெரும் எண்ணிக்கை வீரர்கள், விளையாட்டின் புனிதத்தை மதித்து நடப்பவர்கள். எனவே எல்லா மைதான செயற்பாடுகளையும் மஞ்சள் கண்ணாடி அணிந்து பார்க்காமல் இருப்பது அவசியம்.

அடுத்து கிரிக்கெட் சார்ந்த பொறுப்புவாய்ந்த நிறுவனங்கள் இத்தகையோர் மீது கிரிக்கெட் சார்ந்த அதிஉச்சத் தண்டனையை வழங்கவேண்டும். அதாவது கிரிக்கெட் ஆடுவது உட்பட, கிரிக்கெட் தொடர்பான எந்தவொரு விடயத்திலும் இவர்கள் கலந்து கொள்ள முடியாத ஆயுட்காலத் தடை விதிக்கவேண்டும்.

இப்பொழுது இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதால், அடுத்த நீதித்துறை தன் கடமையைச் செய்யும். எனவே கிரிக்கெட் உலகின் கௌரவம் காப்பாற்றப்படும் என்பதை நிச்சயம் நம்பலாம்.

எது எவ்வாறாயினும் இந்த மூன்று வீரர்களும் ஏதோ தாங்கள் பிழைவிட்டது உண்மைதான் என்று போலிக் கண்ணீர் வடித்தாலும், மன்னிப்புக் கேட்டாலும்கூட ரசிகர்கள் இவர்களை குப்பைக் கூடையில தூக்கிப் போட்டுவிட்டார்கள் என்பதுதான் உண்மை.

# இதுவுமே சரியில்லை



**ஆறாவது** ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் எதனைச் சாதித்தார்கள் என்றால் சொல்லும்படியாக எதுவும் இல்லை என்பதுதான் உண்மை. ஒரு சில இலங்கை வீரர்களுக்கு தம்மை நிரூபிக்கும் சந்தர்ப்பம் சரியாக வழங்கப்படவில்லை என்பது உண்மை யாயினும், பெரும்பாலானோர் சோபிக்கத் தவறிவிட்டனர். அதிலும் மூன்று அணிகளுக்குத் தலைவர்கள் இலங்கை வீரர்கள். மஹேலவின் டெல்லி டெயார் டெவில்ஸ் தோல்விமேல் தோல்வியாகக் குவித்துக் கொண்டது. ஆஞ்சலோ மத்தியூசின் டனே வாரியர்ஸ் அட்டவணையில் இறுதி இடமான ஒன்பதாவது இடம் அணித்தலைமையும் இடையிலேயே இழக்கப்பட்டுவிட்டது.

சங்கக்காராவின் சண்றைசர்ஸ் நல்லதொரு போட்டியைக் கொடுக்கிறது. ஆனால் சங்கா சரியான திறன் வெளிப்பாட்டில் இல்லை. இதனால் கமரன் வைட் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார். மும்பை இந்தியன் அணியின் லசித் மாலிங்க முன்புபோல இல்லை. அதிக விக்கெட் வீழ்த்தும் முதல் ஐந்து பேருக்குள் இவர் பெயர் இல்லை.

தில்ஷான் காணாமல் போனவர்தான். இன்னும் காணவில்லை. சசித்ர சேனநாயக்க பந்துவீச்சில் சிறிது பிரகாசித்தாலும், சொல்லும்படியாக இல்லை. இருந்தாலும், சண்றைசர்ஸ் அணியின் சகல துறை வீரர் திஸர பெரேரா மட்டுமே தனக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்ப்பவராக உள்ளார். அந்தளவிற்கு தன் திறமையை இவர் காட்டியுள்ளார். ஏனை யோரைப் பொறுத்தவரையில் இலங்கை ரசிகர்களுக்கும் பெருத்த ஏமாற்றம்தான்.

# முயற்சித்தாலே!



**ஜூலை.** ஒகஸ்ட் மாதங்கள் கிரிக்கெட் உலகின் சாம்பல் மாதங்களாக அமையப்போகின்றன. இங்கிலாந்து, அவுஸ்தி ரேலிய அணிகள் ஆஷஸ் தொடருக்காக சந்திக்கப்போகின்றன. இரண்டு அணிகளிலும் வாய்ப்புக்கள் குறைந்த அணியாக அவுஸ்திரேலிய அணி கணிக்கப்பட்டிருக்கும் இந்நிலையில், அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் அப்படியல்ல என்கிறார். இதேவேளை அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களின் திறமையில் அதீத நம்பிக்கை வைத்துள்ளார் அவர். பீற்றர் சிடில், றயான் ஹரிஸ், ஜேம்ஸ் பட்டின்சன், மிட்சல் ஸ்ராக், ஜக்சன் பேர்ட் முதலான வேகப் பந்து வீச்சாளர்கள் இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரர்களின் துடிப்பை அடக்கக் கூடியவர்கள் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

ஆனால் இன்னொரு விடயத்தை முக்கியமாகச் சுட்டிக்காட்டத் தவறவில்லை அவர். அதாவது பந்துவீச்சு எப்படி இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை அதிகரிப்பைத் தடைசெய்கிறதோ, அதேபோல துடுப்பாட்டத்திலும் நாம் பங்களித்தாக வேண்டும் என்பதே அவரது கருத்து. அதாவது துடுப்பாட்ட வீரர்கள், 350, 400 ஓட்டங்கள் வரையில் சேர்த்துக்கொள்ள முடியுமென்றால் அடுத்தகட்டமான வெற்றியை நோக்கிச் செல்லமுடியும் என்கிறார் கிளார்க். மறுபடியும் இந்த விடயங்கள் அலிஸ்ரர் குக்கிற்கும் விளங்காதவையல்ல. அவர் சிறந்த பெறுபேறுகள் பெறும் அணித்தலைவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளவர். அவரது வியூகங்களும் கிளார்க்கின் வியூகங்களைத் தகர்ப்பதாகத்தான் இருக்கும் எதற்கும் இன்னும் இரண்டு மாதங்கள் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# இது சரியல்ல



**ஐ.பி.எல்.** இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள் முடிவடைந்ததும் அடுத்து இந்த வரிசை யில் இடம்பெறுவதாக சிறிலங்கா பிறீமியர் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி களாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் கடந்த வருடம் தனது முதலாவது எஸ்.எல்.பி.எல் சுற்றுப் போட்டிகளை நடத்தியிருந்த இலங்கை கிரிக்கெட் சபை, இம்முறையும் அதே காலப்பகுதியில் அதாவது ஒகஸ்ட் 10இல் ஆரம் பிக்க இருந்தது. ஆனால் இதனைக் கவனத்தில் கொள்ளாத மேற்கிந்திய கிரிக்கெட் சபையினர் ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 26 வரை தமது முதலாவது சி.பி.எல் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துவிட்டார்கள். இதனால் இரண்டு சபைகளுக்கும் முறுகல்நிலை ஒன்று உருவாகும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இம்முறை நடக்கும் எஸ்.எல்.பி.எல். போட்டிகளில் ஹாசிம் அம்லா, டேவிட்ஹசி, டானியல் கிறிஸ்ரியன், ரிம் மக்கே, வேர்ணன் பிலெண்டர், ஷோன்டெய்ட் ஆகியோர் கலந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இதேவேளை இலங்கையைச் சேர்ந்த வீரர்கள், முரளி உட்பட சி.பி.எல் போட்டிகளில் விளை யாடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் எஸ்.எல்.பி.எல் போட்டிகளில் மேற் கிந்தியத் தீவுகள் வீரர்களும் விளையாடும் எதிர்பார்க்கையும் இருக்கிறது. இப்படியான ஒரு நிலையில் இலங்கை சுற்றுப் போட்டித் திகதி- களைக் கவனத்தில் எடுக்காமல், மே.இந்திய கிரிக்கெட் அதிகாரிகள் போட்டிக் காலத்தை நிர்ணயித்தமை மிகுந்த வருத்தமளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



இவை பற்றியும் மேலும் சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது போட்டிகளின் தகுதி நிலைப் போட்டிகளில் இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் அணி பங்கு கொள்ளும் என்பது பற்றியும், எமது நிலை பற்றி மிக விளக்கமாக மேற்கு இந்திய சி.பி.எல் ஏற்பாட்டாளர்களுக்குத் தெளிவாக விளங்கியுள்ளோம். அவர்கள் தங்கள் சுற்றுப்போட்டியை வேறு திகதிக்கு மாற்றுவது பற்றி சாதகமாகப் பரிசீலிப்பார் கள் என்று நம்புகின்றோம் எனவும் இலங்கை அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எது எவ்வாறாயினும் எஸ்.எல்.பி.எல் நடைபெறும் திகதிகள், மேற்கிந்திய அதிகாரிகளுக்கு தெரி யாமல் இருந்திருக்க முடியாது. அப்படி இருந்தும்கூட தங்கள் போட்டியை எம்முடைய போட்டிகளுடன் மோதும் வகையில் நடைபெறும் காலத்தை நிர்ணயித்திருப்பது அவ்வளவு ஆரோக்கியமான செயற்பாடாகத் தெரியவில்லை.

# காதிலை பூ கந்தசாமி




**வணக்கமுங்கோ. போனவாரம் தமிழ் மக்களுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சிகள் நடத்தி தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் செய்தாங்கள் பாருங்கோ. ஒரு அரசியல் அது தானுங்கோ பெரிய பொலிரிக்ஸ்ஙகோ.**

அகாலமாக பலியாகிப்போன உறவுகளுக்கு பொதுவாக ஒரு நினைவேந்தல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தால் அது ஒரு செய்தியாக இருந்திருக்குமுங்கோ. அதைவிட்டுப் போட்டு அதையும் பிரிஞ்சு நிண்டுகொண்டு செத்தவர்களையும் தங்கட பொலிரிக்ஸில பிரிச்சுப் போட்டாங்களுங்கோ.

கூட்டமைப்பை பதிவுசெய்ய வேணுமெண்டு சொல்லுற முக்கியமான கட்சி ஒன்றினுடைய பிரதிநிதி ஒருவர் கொழும்பில சொன்ன கதைகளை கேட்டிருந்தால் எங்கட சனங்கள் காறித் துப்பி இருக்குமுங்கோ.

ஆயருக்கு தலைமை ஆசை வந்திருக்குதாமுங்கோ. தேசிய சபை எண்டதே ஆயரை தலைமையாக மறைமுகமாக ஏற்றுக்கொள்ளச் செய்யும் வேலைத்திட்டம் தானாமுங்கோ. ஏன் எண்டால் அவர் உதில முக்கிய பங்கு வகிச்சால்தானாமுங்கோ டொலர்கள் ரோலாகுமாமுங்கோ.

ஆயருக்குப் பின்னாலை யார்? யார்? இருக்கினம் எண்டதையெல்லாம் தெரிஞ்சு கொண்டுதானாமுங்கோ எங்களுடைய டுமீல் கட்சிகள் எல்லோரும் தங்கட பஞ்சாயத்தை போய் ஆயரிட்ட முறைப்பாடு செய்யினமாமுங்கோ. ஆயரும் நாட்டாமை வேலை செய்யப்போய் போன கூட்டத்தில சொன்ன தீர்ப்பு எங்களுடைய டுமீல் கட்சிகளுக்கு சாதகமாக இல்லையெண்டு நாட்டாமை தீர்ப்பை மாற்றிச் சொல்லுங்கோ எண்டு கேட்டிருக்கினமாமுங்கோ.

ஆயர் தங்களுக்கு நாட்டாமையாக செயற்பட முயற்சிப்பதை புரிந்துகொண்ட சம்மந்தம் ஐயாவுக்கு கடுப்பாயிட்டுதாமுங்கோ. கூட்டம் முடிஞ்சு வந்ததில இருந்து வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்துக் கொண்டு இருந்தாராமுங்கோ.

கடுப்பு உச்சமானதில அவன், இவன் எண்டெல்லாம் ஆயரைத் திட்டித் தீர்த்தாராமுங்கோ.

என்னை புலிகளே கூப்பிட்டு அப்புடிச் செய்யுங்கோ, இப்புடிச் செய்யுங்கோ எண்டு சொன்னதில்லை. எதையுமே ஒரு ஆலோசனை மாதிரித்தான் சொல்லுறவங்கள். இவன் கூப்பிட்டு உத்தரவு போடுற பாணியில கதைக்கிறான் எண்டும், இவைக்கு பொலிரிக்ஸ் தெரியுமோ எண்டெல்லாம் கத்தினாராமுங்கோ.

அது சரிதானுங்கோ. பெரிய மனிசர் எண்டு சும்மா ஒரு மரியாதைக்கு போனால் அவை பதவிக்கே ஆப்பு வைக்கக்கூடாது எல்லோ. இவை யாராக இருந்தாலும் நம்முடைய சம்மந்தர் ஐயா தான்தான் தமிழ் மக்களுடைய பெருந்தலைவர் எண்டொரு பூச்சாண்டியைக் காட்டிக் கொண்டிருக்கே. திடீரென்று தேசிய சபை, புதிய உயர் குழு எண்டெல்லாம் சொன்னால் கடுப்பு வரத்தானேங்கோ செய்யும்.

அண்டைக்கு மட்டும் கூட்டமைப்பை பதிவு செய்யத்தான் வேணுமெண்டதில ஆயர் நாட்டாமை பிடிவாதம் பண்ணியிருந்தால், நான் யார் எண்டதைக் காட்டியிருப்பன். பிறகு நிலைமை மோசமாகியிருக்கும் எண்டு சொன்னாராமுங்கோ.

தென் இலங்கையில பொதுபலசேனா மாதிரி, அந்தப் பக்கம் அவை தேசிய சபை எண்ட போர்வையில பொலிரிக்ஸ் பண்ணலாமெண்டு பார்க்கினம்போல. பிரச்சனைகள் வரும்போது நாங்கள் தலையைக் கொடுக்க வேணும். இடையில இவை நாட்டாமை பண்ணுவினமாம். என்ன ஒரு மக்கள் நேசிப்பு நினைக்கவே புல்லரிக்குதுங்கோ எண்டும் கத்தினாராமுங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ அவைக்கு அவ்வளவு அக்கறை இருந்தால் அந்த வெள்ளைகளை அவிழ்த்து வீசிப்போட்டு இந்த வெள்ளைக்குள்ள வரட்டுமே அப்ப தெரியும் பொலிரிக்ஸ் எண்டது எவ்வளவு சவாலானது எண்டது எண்டும் ஐயா கண்ணை உருட்டிக் கத்தினாராமுங்கோ.

நான் நினைக்கிறேனுங்கோ... உப்பிடி ஒரு கோபத்தை ஐயா தன்னுடைய வாழ் நாளில காட்டினதே இல்லையாமுங்கோ. அந்தக் கத்தலுக்கு அதிகரித்த பிரசரை குறைப்பதற்கு ஒரு கிழமை இந்தியாவுக்குப் போய் ரெஸ்ட் எடுக்கவேணுமெண்டு ஐயா புலம்பிக்கொண்டு இருக்கிறாராமுங்கோ.

இனிமேல் மண்ணார் பக்கம் கூட்டங்களுக்குப் போனால் கொஞ்சம் கேர்புல்லாகத்தான் இவையளை கேண்டில் பண்ணவேணும் எண்டு வடிவேல் பாணியில சிலபேர் சிந்திக்கினமெண்டும் ஒரு செய்தி கசியிதுங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# உலகை வியக்க வைத்தவர்கள்

## சூரிய ஒளியில் ஒரு ரகசிய ஆயுதம்



**அப்போது** சைரகியூஸின் மன்னராக இருந்தவர் இரண்டாம் ஹீரோ என்பவர். மன்னர், ஒரு புதிய கிரீடம் செய்ய பொற்கொல்லனிடம் நிறைய தங்கத்தை அளித்தார். கிரீடம் செய்து வந்தது. தான்கொடுத்த தங்கத்தின் எடைக்குக் கிரீடம் சரியாக இருந்தது. ஆனாலும் மன்னருக்கு ஏதோ ஒரு சந்தேகம், கிரீடம் சுத்தமான தங்கமில்லை. கலப்படம் செய்யப் பட்டிருக்கிறது என்று. ஆனால் ஆதாரமில்லாமல் பொற்கொல்லரைக் குற்றவாளியாக்க முடியவில்லை அவரால். ஆகவே தன் சந்தேகத்தை ஆர்கிமிடீஸிடம் கூறினார். ஆர்கிமிடீஸும் இது பற்றிப் பல நாள் சிந்தித்தபடி இருந்தார். "கிரீடத்தில் கலப்படம் செய்யப்பட்டிருப்பதை எப்படி அறிவது" என்று. ஒரு நாள் குளியல் விடுதியின் தண்ணீர் தொட்டியில் குளிப்பதற்காக இறங்கினார்.

தொட்டி நிரம்ப இருந்த நீர், இவர் அதில் இறங்கியதும் வெளியில் வழிந்து பரவியது. இது எப்போதும் நிகழுவதுதான். ஆனால் அன்று? தங்கக் கலப்படத்தை எப்படி அறிவது என்ற எண்ணத்தோடிருந்த ஆர்கிமிடீஸுக்கு ஒரு புதிய உண்மையை, பௌதிகத்தில் ஒரு மகத்தான கண்டுபிடிப்பை உணர்த்தியது. தான் ஆடையின்றி குளிப்பதற்காக தொட்டியில் இறங்கியுள்ளதையும் மறந்தார். "கண்டுபிடித்துவிட்டேன். கண்டுபிடித்துவிட்டேன்" (யுரேகா, யுரேகா!) என்று கூவியபடி வீதியில் ஓடினார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(23.05.2013 தொடக்கம் 29.05.2013 வரை)

### மேடம்

ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். தந்தைக்கு ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்றுக் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் தடைப்பட்ட திருமண காரியங்களில் நண்பர்களின் உதவியால் நடைபெறலாம். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. கல்வித்துறை ஆசிரியர்கள் இவற்றில் பணிபுரிவோர்கள். மாணவர்கள் கல்வியில் சில தடைகள் வந்துவிலகும். பிள்ளைகளால் பொருட் செலவுகளும் மனநிம்மதியும் குறைய இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். தேவையற்ற மனச் சஞ்சலம் தவிர்த்து ஆலயங்களுக்குச் சென்றுவருவது நல்லது.

### இடபம்

சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும் காலமாகும். நாட்பட்ட தீராத வியாதிகள் தீரவேண்டி புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். கணவன் - மனைவி உறவுகளில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்தவிலகும். உற்றார் உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்து சேரும். பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயரும், மனநிம்மதியும் அடைவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

நண்பர்களின் சுபகாரிய விசயங்களுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத ஆதாயங்கள் உண்டாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் சற்று குறையும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். வெகு நாட்களாகத் தடைப்பட்டுவந்த திருமண காரியங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ள காலமாகும். நாட்பட்ட வராத கூடன் கொடுத்து இருந்த பணம் திரும்ப கைக்கு வந்துசேரும்.

### கடகம்

உத்தியோகத்தில் வெகுகாலமாக எதிர் பார்த்து இருந்த பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் கிடைக்கக்கூடிய காலமாகும். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவரப் போட்ட எண்ணங்கள் நிறைவேறும் காலமாகும். கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதன்மூலம் பொருட் செலவுகள் உண்டாகலாம். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் மிகுந்த கவனமுடன் பணி ஆற்றுதல் நல்லது.

### சிங்கம்

வெளிநாட்டில் வசிப்பவர்கள். வர வேண்டிய கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் ஆதாயம் உண்டு. குல தெய்வவழிபாடு செய்துவருவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் சற்று எச்சரிக்கையுடன் முன்கோபத்தை தவிர்த்து இருப்பது நல்லதாகும். சூதாட்டங்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்கள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். நாட்பட்ட தீராத நோய்க்குப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடிச் செல்லுவீர்கள்.

### கன்னி

நண்பர்களால் எதிர்பாராத பொருட் செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். உடம்பில் வாயு மற்றும் வாத சம்பந்தமான பிணிகள் வந்துபோக்லாம். உத்தியோகத்தில் பதவிஉயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்படலாம். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லதாகும். வெகுகாலமாகக் காணாமல்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். பெண்களால் தென்கிழக்குத் திசையில் இருந்து எதிர்பாராத தனவரத்து உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### துலாம்

புதிய நண்பர்களின் வீண் பிரச்சினைகள் ஏற்படலாம். குழந்தைகளுக்காகத் திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பணப் புழக்கம் சுமாராகக் காணப்படும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். தொலை தூரப் பயணங்கள் மூலம் எதிர்பார்த்து இருந்தவர்களை சந்தித்து அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனநிம்மதி குறையலாம்.

### விருச்சிகம்

ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவு-வதின் மூலம் மனநிம்மதியும் பொதுமக்களின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். குழந்தைகளின் மன மகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். நாட்பட்ட பழுதுபட்ட ஆலயங்களைத் திருத்திக் கட்டும் முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். அநாதைச் சிறுவர்கள் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். குடும்பத்தில் தடைப் பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்கள் நிறைவேறும்.

### தனுசு

பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படும். தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்தல் நல்லதாகும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் ஒன்றுசேர வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். உடல்நிலையில் சுரம் மற்றும் உஷ்ண சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகலாம். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் கை வந்துசேரும். மற்றவர்களின் காரியங்களில் அநாவசியமாகத் தலையிட்டு மனநிம்மதியை இழக்காதீர்கள்.

### மகரம்

உடம்பில் நரம்பு மற்றும் எலும்புகள் போன்ற உபாதைகள் வந்துபோகும். படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். மற்றவர்களை நம்பிப் பணம், பொருட்கள் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். குடும்பத்தில் காரணமற்ற மனக்குழப்பங்களும் மற்றும் கடன் தொல்லைகளும் ஏற்படலாம். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. தாயின் உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் குறைந்து காணப்படும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ள காலமாகும்.


### கும்பம்

புதிய வீடு வாகனங்கள் வாங்குவதற்காக வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கிடைக்கும். பயணங்களின்போது வாகனங்களில் எச்சரிக்கையுடன் சென்றுவருதல் உகந்ததாகும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எண்ணுவீர்கள். உடம்பில் வாயு வாதம் போன்ற தொல்லைகள் வந்துநீங்கும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகுந்த கவனமுடன் பேசிப்பழகுதல் நல்லது. கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்று குறைய வாய்ப்பு உள்ளது.

### மீனம்

மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றம் பாராட்டுக்களை பெறுவார்கள். குடும்பத்தில் தடைப்பட்டு இருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடிய காலமாகும். உற்றார் உறவினர்களின் வரவுகளால் மன மகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். வங்கிகள் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். உடம்பில் எலும்பு மற்றும் நரம்பு சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தீர்த்த யாத்திரைகள் சென்றுவர முயற்சிப்பீர்கள். பழைய கடன்கள் அடைந்துப் புதிய கடன் வாங்குவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

# சாதனை






தாய்ப்பாலில் பாதணிகள் உருவாக்கி புதுமை படைத்த, பிரித்தானிய வடிவமைப்பாளர்கள் தாயொருவரிடமிருந்து தானமாகப் பெறப்பட்ட தாய்ப்பாலை பயன்படுத்தி சிறிய இரு பாதணிகளை உருவாக்கி பிரித்தானிய வடிவமைப்பாளர்கள் இருவர் புதுமை படைத்துள்ளனர்.


கிழக்கு சஸெக்ஸிலுள்ள பிறைட்டன் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களான நிக் கன்ட் மற்றும் தன்யாடீன் ஆகியோரே இந்த தாய்ப்பாலைப் பயன்படுத்தி பாதணிகளை உருவாக்கியுள்ளனர்.

அவர்கள் தாய்ப்பாலிலுள்ள புரதத்தை கடினமான பிளாஸ்டிக் வகையாக மாற்றி இந்த சின்னஞ்சிறிய பாதணிகளை வடிவமைத்துள்ளனர். அளவில் மிகவும் சிறிய இந்த பாதணிகளை அணிய முடியாது. உலக தாய்ப்பால் தான தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டதையொட்டி பெண்ணொருவரால் தானமாக வழங்கப்பட்ட தாய்ப்பாலைப் பயன்படுத்தியே இந்த பாதணிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பிரித்தானிய வடிவமைப்பாளர்களால் தாய்ப்பாலில் ஐஸ்கிறீம் மற்றும் தாய்ப்பாலில் ஆபரணங்கள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றி...





திரிபுரா மாநிலம், அகர்தலா அருகே உள்ள ஜிராணியா கிராமத்தை சேர்ந்த அப்துல் ரகுமான், மகளான ரூனா பேகத்துக்கு பிறக்கும்போதே மண்டை ஓட்டின் உட்புறம் மூளை அமைந்துள்ள பகுதியில் திரவம் கோர்த்துக்கொண்டதால் தலையின் அளவு சராசரி அளவைவிட இருமடங்கு பெரிதாக இருந்தது.


ரூனா பேகத்திற்கு 1 1/2 வயதான போது தலையின் விட்டம் 94 சென்ரிமீற்றராக ஆகிவிட்டது. இதனையடுத்து, குர்கானில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் கடந்த மாதம் அனுமதிக்கப்பட்ட ரூனா பேகத்தின் தலையில் இருந்து ஊசிமூலம் திரவத்தை டாக்டர்கள் தற்காலிகமாக வெளியேற்றினர். குழந்தையின் புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட நோர்வே நாட்டு மாணவர்கள் சிலர், அவளது சத்திரசிகிச்சை செலவுக்கு 52 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக திரட்டினர். இந்நிலையில், அவளுக்கு முதற்கட்டசத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

# பொதுநலம்



பிரிட்டனின் வட அயர்லாந்தில் மணமக்கள் வேடமணிந்த 750 பெண்கள் ஓட்ட நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றினர். இது ஒரு புதிய உலக சாதனை எனக் கருதப்படுகிறது. 91 வயதான பெண் முதல் தனது சொந்த திருமண வரவேற்பு வைபவத்திலிருந்து நேரடியாக கலந்துகொண்டவர் வரை பல்வேறு தரப்பினர் இதில் கலந்துகொண்டனர். நலநிதியமொன்றுக்கு நிதி திரட்டுவதற்காக வடஅயர்லாந்தின் டெரி நகரில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. லண்டன், லிவர்பூல் உட்பட பிரிட்டனின் பல்வேறு நகரங்களைச் சேர்ந்த பெண்கள் இதில் பங்குபற்றினர்.

# ஜோடி தேட 5 கோடி



தாய்லாந்து நாட்டு உயிரியல் பூங்காவில் லின் பிங்(4) என்ற பெண் பாண்டா கரடி இருக்கிறது. இதனுடன் ஆண் பாண்டாவை ஜோடி சேர்த்து, குட்டிகளை ஈன்ற வைக்க அரசாங்கம் சீனாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்கு ஓராண்டு செலவு சுமார் ரூ.5 கோடியாகும். அதிர்ஷ்டசாலி பாண்டாவுக்கு ஏற்ற ஜோடியை தேடுவதில் சீன அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். அது உறுதியானதும் லின் பிங் சீனாவிற்கு பயணமாகும். பிறகு 2 பாண்டாவும் தாய்லாந்து திரும்பி ஜோடியாக இணைந்திருக்கும். பண்டாவுக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கிவிட்டது சும்மாயில்லைங்க... கொஞ்சம் ஓவராய்த்தான் இருக்குங்க.

# மிகப் பெரிய ரிப்ஸ்






இன்டியநோபோலிஸ் சில் உள்ள இந்தியானா என்ற இடத்தில் உள்ள ஸ்ரேக்ன் சேக் என்ற உணவகத்தில் வேலைசெய்யும் சிசி புறூஸ் என்ற உணவு பரிமாறும் பணிப்பெண்ணுக்கு வாழ்க்கையில் மிகப்பெரிய தொகையான ரிப்ஸ் பணம் கிடைத்துள்ளது. 5.97 டொலர்கள் உணவருந்தியதற்கு 7000வீதம் ரிப்ஸாக 446 டொலர்களை வாடிக்கையாளரொருவர் கொடுத்துள்ளார்.

புறூஸ் இதனை ஏற்க மறுத்தபோது வற்புறுத்தி எடுத்துக் கொள்ளச் செய்ததாக கூறப்படுகின்றது.

முர்ட்டின் கல்லூரியில் பகுதிநேர மாணவியான புறூஸ் தனது கட்டணங்களை கட்டுவதற்கு இப்பணத்தை பயன்படுத்தப்போவதாக கூறியுள்ளார்.

புறூஸ் வேலைக்கு நேரத்துடன் வந்து, தாமதமாக போவாரென்றும், தங்களுக்கு தேவைப்படும் போதெல்லாம் வருபவரென்றும் அதனால் மற்றவர்களைவிட இத்தொகையை பெறத் தகுதியுடையவரென அவரது மனேஜர் கிரீர் கூளி கூறியுள்ளார்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி எண்டபிரைசஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மே 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.